ISSN 2021-9041

Aasiriyam (pedagogy)

# ஆசிரியம்

ආසිරියම්

எல்லையற்று விரியும் அறிவுத்தளம்...

"அறிவுச் சமூகத்தின் வேட்கை
வினைத்திறன் மிக்க ஆசிரியர்"

கல்வியில் உற்றெழுல்

இதழ் 009 ஜனவரி 2012 ரூபா 50/=




- மனோவசியமும் கடப்புக்காட்சிகளும்
- 3179 = மலையகம்
- திசைமாறும் ஆயிரம் பாடசாலைகள் திட்டம்

நமது பிரச்சினைகளுக்கு ஆசிரியத்தில் தீர்வுகள்....

ந.அனந்தராஜா/ ச.தேவசகாயம்/ ஸெய்ன்ஸித்தீக்/ மொழிவரதன்
சபா.ஜெயராசா /க.பாஸ்கரன் /பெ.பேரின்பராசா
அன்பு ஜவஹர்ஷா/ க.சிவனேஸ்வரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2011 மே முதல்
# வெளிவந்துகொண்டிருக்கிறது...





## "AASIRIYAM"

180/1/50 People's Park, Colombo -11
Tel: 011-2331475
E-mail : aasiriyam@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அறிவுச் சமூகத்தின் வேட்கை
வினைத்திறன் மிக்க ஆசிரியர்"




# உள்ளே...


- சமூகத்தின் குறிகாட்டிகள் — 04
- வகுப்பறை அவதானிப்புகளில்... — 08
- திசைமாறும் ஆயிரம் பாடசாலைகள் திட்டம் — 12
- ஐந்தாம்தர புலமைபரிசில் பரீட்சை... — 17
- 3179 = மலையக ஆசிரியர் நியமனம் — 21
- மனோவசியமும் கடப்புக்காட்சிகளும் — 23
- பீட்டர் டிரக்கரின் முகாமைத்துவக் கோட்பாடு — 26
- விக்கன்ஸ்டைனின் மொழிவாதச் செல்வாக்கு — 33
- நமது பிரச்சினைகளுக்கு — 35
- குழந்தைக்கல்வி — 38



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISSN 2021-9041

Aasiriyam

# ஆசிரியம்

மாத இதழ் 009

**ஆசிரியர் :**

தெ.மதுசூதனன்

**இணை ஆசிரியர்கள் :**

அ.ஸ்ரீகாந்தலட்சுமி

எம்.என்.மர்சூம் மௌலானா

காசுபதி நடராசா

**ஆசிரியர்குழு :**

பேரா.க.சின்னத்தம்பி

பேரா.சபா.ஜெயராசா

பேரா.சோ.சந்திரசேகரன்

பேரா.எம்.ஏ.நு..மான்

**சிறப்பு ஆலோசகர்கள் :**

சுந்தரம் டிவகலாலா

சி.தண்டாயுதபாணி

அன்பு ஜவஹர்ஷா

வல்வை ந.அனந்தராஜ்

**ஆலோசகர் குழு :**

பேரா.மா.கருணாநிதி

பேரா.மா.சின்னத்தம்பி

பேரா.மா.செல்வராஜா

முனைவர் த.கலாமணி

ஆய்வாளர்.தை.தனராஜ்

முனைவர் அனுஷ்யா சத்தியசீலன்

முனைவர் ஜெயலக்சுமி இராசநாயகம்

செ.அருண்மொழி

சு.முரளிதரன்

பொ.ஐங்கரநேசன்

**நிர்வாக ஆசிரியர் :**

சதபூ.பத்மசீலன்

**இதழ் வடிவமைப்பு :**

கோமளா/மைதிலி

**Printed by: cbc prees**

Tel : 0777 345 666

**தொடர்புகளுக்கு :**

**"Aasiriyam"**

180/1/50 People's Park, Colombo -11

Tel: 011-2331475 E-mail : aasiriyam@gmail.com



## மனம் திறந்து

ஒவ்வொரு ஆண்டும் கடந்து செல்லும்போது என்ன பெயர் வைக்கலாம்? என்ற சிந்தனை தோன்றும். ஆனால் கடந்த சில ஆண்டுகளாக நாம் முகங்கொடுத்த பிரச்சினைகள் ஒற்றைப் பரிமாணம் கொண்டவையல்ல. அவை சிக்கல் தன்மை கொண்ட பல்பரிமாணம் மிக்கவை.

"சற்றுன் முகஞ்சிவந்தால் மனது சஞ்சலமாகுதடீ!
நெற்றி சுருங்கக் கண்டால் எனக்கு நெஞ்சம் பதைக்குதடீ"
(பாரதி) இவ்வாறான நடப்புச் சூழலின் ஆக்கிரமிப்புக்குள் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இருப்பினும் நமக்கான வாழ்வின் பிடியை நாம் இன்னும் இறுக்கத்தான் வேண்டியுள்ளது.

தற்போது "தை பிறந்தாள் வழி பிறக்கும்" என்னும் அசட்டுத் துணிச்சலும் நமக்கு வேண்டும். வரும் புதிய ஆண்டு நமக்கு மகிழ்ச்சியையும் சமாதானத்தையும் வழங்க வேண்டும்.

எமக்கான சிறப்பான பண்டிகைகளுள் தைப்பொங்கலுக்கு முதன்மையான பங்குண்டு. இன்று எமது வாழ்முறையில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் மனித நடத்தையிலும் விழுமியக் கையளிப்பிலும் பெரும் தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. உலகமயமாக்கல், நுகர்வுப்பண்பாடு... எம்மைச் சிதைத்து அடையாளமற்றவர்களாக்குகிறது. இவற்றினால் எதிர்காலத்தில் விளையப்போகும் ஆபத்துக்களை இன்னும் உணராமல் உள்ளோம்.

நமது முன்னவர்களும் நாமும் வேளாண்மைப் பண்பாட்டில் வாழ்ந்தோம் என்பதற்கான அடையாளங்கள் அழிக்கப்படும் பேரவலமான காலத்தில் வாழ்கின்றோம். இதனால் இயற்கை சார்ந்த உணர்வும் அதன் பெருமிதமும் நமக்கு இல்லாமல் போகிறது. தைப்பொங்கலின் சிறப்பை உணராத, சமூக கூட்டுமனப்பாங்கின் தொடர்ச்சியை அறியாத தலைமுறைகளின் ஆதிக்கம் எங்கும் நிலைபெற்று விட்டது.

கல்விச் சமூகத்தில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் சமூக மதிப்பீடுகளில், சமூக நடைமுறைகளில் பலத்த தாக்குதல்களை ஏற்படுத்தியுள்ளன. சமூக உணர்வுடன் சமூகப் பொறுப்புடன் வாழ்வதற்கான உந்துதல்களை வழங்கத் தவறிவிட்டன. கல்வி மூலம் உருவான அதிகார வர்க்கம் மிகவும் அபாயகரமான முறையில் பிற்போக்குத் தனமான பழைமை பேணுகின்ற சக்தியாக எழுச்சி பெற்றுள்ளது.

குறிப்பாக காலனித்துவ ஆட்சியின் விளைவாக உருவான பாடசாலைகளும் கல்வி நிர்வாக முறைமையும் இன்னும் இறுகிய பணியாட்சிப் பண்புகளை உள்ளடக்கியவாறே உள்ளன. தொடர்ந்து அடிமைத்தனத்தை நிலைக்கச் செய்வதாக இருக்கின்றன. அதாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைமுறையிலிருக்கும் கல்வி நிர்வாகமும் பாடசாலைகளும் சிற்றரசுகள் போலவும் ஒழுங்குபடுத்தப்பட்ட அராஜக நிலையில் தொழிற்படுவதாகவும் இருப்பதனை நாம் ஏற்றுக்கொண்டுதான் ஆக வேண்டும்.

கல்விச் சமூகத்தில் விமரிசன நோக்கு, சமூக உணர்வு, நீதியின்பாற்பட்ட வேட்கை, விடுதலை உணர்வு, மனித நேயம், எதிர்காலத் தரிசனம் முதலான பண்புகள் அறவே இல்லாமல் போய்விட்டன. எமது சமூகத்தில் கற்றவர்களைக் குறிக்கும் எண்ணக்கரு புதிய பொருள்கோடலுக்கும் மறுசிந்தனைக்கும் உரித்தாக்கப்பட்டுள்ளது. ஆங்கில வழக்கிலுள்ள *Intellectual* எனும் சொல்லுக்கான தமிழ் வழக்குகளாக கற்றறிவாளர், புத்திஜீவிகள், அறிவு ஜீவிகள் போன்ற சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன.

"தம்முடைய பண்பாட்டின் சிறப்புகளையும் தம்முடைய வரலாற்றின் வெற்றிகளையும் பேசி ஆரவாரம் செய்வது அறிவுஜீவிகளின் வேலையாக இருக்க முடியாது. அறிவுஜீவிகள் தம்மைப் பிரதிநிதித்துவப்படுத்திக் கொள்ளும் பொதுமக்கள் பரப்பு என்பது இப்போது மிகவும் சிக்கல் நிறைந்ததாக தொந்தரவு தரும் கூறுகள் கொண்டதாக உள்ளது. அந்தப் பரப்பில் ஒருவர் தீவிரமாக குறுக்கீடு செய்வதென்பதன் பொருள் நீதிக்கும் சமத்துவத்துக்குமான விட்டுக்கொடுக்காததொரு போராட்டத்தை அவர் நடத்துவதிலேயே தங்கியுள்ளது" (எட்வேர்ட் செய்த்). தமிழ்ச் சூழலில் இவ்வாறு குறுக்கீடு செய்யும் அறிவுஜீவிகளை எமது கல்விப் புலம் உருவாக்கத் தவறிவிட்டது. ஒரு இயக்கத்துக்கு இணையான தாக்கத்தை ஏற்படுத்தும் ஒரு அறிவுஜீவி எம்மிடையே உருவாகவில்லை. இது இன்றுவரை வெறும் ஆதங்கமாகவே உள்ளது.

இந்த இடத்தில் இன்னொரு உண்மையையும் பதிவு செய்வது பொருத்தமாக இருக்கும். தமிழில் கல்வியாளர் (Educator), கல்வியியலாளர் (Educationalist) போன்ற இரு சொற்களும் பொது நடைமுறைகளில் மற்றும் கல்வி சார் எழுத்துக்களில் ஒரே பொருளில் கையாளப்படும் சந்தர்ப்பங்கள்தான் அதிகமாக உள்ளன. ஆனால் நாம் நுட்பமாக நோக்கும்போது இந்த இரு சொற்களுக்கும் எண்ணக்கருக்களுக்கும் இடையே நிறைய வேறுபாடுகள் உண்டு என்பது புலனாகும்.

"கல்வியாளர்" எனும் சொல் குறிப்பாக கல்வி வழங்குபவர்களை - தொடர்ச்சியாக ஆசிரியராகப் பணியாற்றுபவர்களைக் கருதும். அதாவது கல்வியை வழங்குபவர் கல்வியாளர். இதனை விரிவுரை - விரிவுரையாளர், வைத்தியம் - வைத்தியர் என்ற முறையில் புரிந்துகொள்ளலாம். கல்வியை வழங்கும் ஆசிரியர், விரிவுரையாளர், போதனாசிரியர், பேராசிரியர் யாவரும் கல்வியாளர் எனக் கருத முடியும். கல்வியை வழங்கும் பணியில் தொடர்ந்து ஈடுபடுபவர்கள், சகல கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த ஆசிரியர்கள் யாவரையும் கல்வியாளர்கள் என அழைக்கலாம்.

"கல்வியியலாளர்" என்பவர் கல்வியியல் கற்கைநெறிகளைத் துறைபோகக் கற்றவர். அதாவது சட்டவியல், பொறியியல், மருத்துவவியல் போன்றதுதான் கல்வியியல் துறையும். இது கல்விசார்ந்த கற்கை துறைகளைக் குறிக்கின்றது. ஆசிரியர்கள், அதிபர்கள், கல்வித்துறை அதிகாரிகள், கல்வித்துறை ஆலோசகர்கள் போன்றவர்கள் தமது துறையில் பணியாற்றுவதற்குத் தேவையான சகல கற்கைத் துறைகளும் கல்வியியல் எனும் எண்ணக்கருவினால் சுட்டப்படுகின்றது.

பல்கலைக்கழகக் கல்விப் பீடங்கள், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகள், கல்வியியல் கல்லூரிகள் முதலானவை பல்வகையான கல்வியியல் துறைகளைக் கற்பிக்கின்றன. கல்வியியலாளரும் கல்விப் புலமையாளரும் கல்வித்தத்துவம், கல்வி உளவியல், கற்பித்தலியல், கல்வி முகாமைத்துவம், கல்விச் சமூகவியல் முதலான கல்வியோடு தொடர்புடைய சிறப்புத் துறைகளிலே தேர்ச்சியும் திறனும் மிக்கோராவர். இங்கு கல்வி என்ற தனித்துவமான கற்கை நெறியைக் கற்று உயர்ந்தவர்களே கல்வியியலாளர் என்றும் கல்விப் புலமையாளர் என்றும் அழைக்கப்படுவர்.

இவ்வாறு கல்வியாளர்களையும் கல்வியியலாளர்களையும் வேறுபடுத்திப் புரிந்துகொள்ள வேண்டும். கல்வி வழங்கும் சகல கல்வியாளர்களும் - ஆசிரியர்களும் கல்வியியலை துறைபோகக் கற்றவர்கள் அன்று. அதுபோல் கல்வியியல் கற்கையை முழுமையாக முடித்தவர்கள், கற்றவர்கள் கல்வியின் அறிகை மரபை ஆய்வு மரபை உள்வாங்கத் தவறியவர்களாகவும்; அதன்வழி இயங்கும் ஆற்றலை, உயிர்ப்பை வெளிப்படுத்த முடியாதவர்களாகவும் உள்ளமையை இந்த இடத்தில் வேதனையுடன் சொல்லவேண்டும்.

கல்வியாளருக்கும் கல்வியியலாளருக்கும் இடையே எண்ணக்கரு நிலையில், விளக்க நிலையில், பொருள்கோடல் சார்ந்த நிலையில் வேறுபாடுகள் உண்டு. இந்தப் புரிதல் எமக்கு முக்கியம். குறிப்பாக கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டில் ஆசிரியர்களே நிருவாகிகளைக் காட்டிலும் கூடிய பங்குடையவர்கள். அந்நிலையில் ஆசிரியர்களுக்குரிய புலமைச் சுதந்திரத்திற்கு உறுதியும் அங்கீகாரமும் வழங்கப்பட வேண்டும். அப்பொழுது தான் நடப்பியல் நிலையிலே கற்றலும் கற்பித்தலும் சிறப்பாகவும் உன்னதமாகவும் வெளிப்படக்கூடியதாக அமையும்.

எமது சுற்றுபுறம் தரும் அறிவுத் திரட்டல் எமது சமூக வாழ்வின் அடிப்படைத் திறனாக மட்டுமன்றி, வாழ்வாதார நிலைகளில் மேம்பாடுகளை வருவிக்கும் தொழிற்பாடாகவும் விரிவுபெற வேண்டும். இதற்கமைவாக கல்விச்சூழல் வளர்க்கப்பட வேண்டும்.

இன்று சமூக அக்கறையும் சமூகப் பொறுப்புணர்வும் கல்வித்துறையில் மேலாட்சி பெறவேண்டும். இதற்கான சூழமைவை உருவாக்குவது எமது சமகாலத்தின் தேவையாகின்றது.

**தெ.மதுசூதனன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ந.அனந்தராஜா

# சமூகத்தின் குறிகாட்டிகள்

தனிமனித வாழ்க்கையையும், சமூக வாழ்க்கையையும் மேம்படுவதற்கான ஆற்றலையும் திறன்களையும் வளர்ப்பதே கல்வியின் இலக்காக உள்ளது. கல்வியின் நோக்கங்கள் என பல வரைவிலக்கணங்களைக் கொடுத்தாலும் இறுதி இலக்கு என்பது தனிமனித ஆளுமை விருத்தியிலேயே தங்கியுள்ளது.

கல்வியினூடாக ஒரு குழந்தை பல்வேறு உயர் விழுமியங்களைப் பெற்றுக் கொள்கின்றது. தன்னைப் போல் பிறரையும் நேசிக்கும் பண்பு வளர்ச்சியடையும் பொழுதுதான் கல்வி இலக்கின் விளைவை வெளிப்படையாக உரை முடியும். பொருத்தமான ஒரு கல்வியை வழங்குவதன் மூலம் தனிமனித மேம்பாடு மட்டுமல்லாது தான் வாழ்கின்ற சமூகத்தையும், நாட்டையும் புதிய நூற்றாண்டின் சவால்களுக்கேற்ற வகையில் வழி நடத்திச் செல்லக்கூடிய ஆற்றலுள்ள ஒரு சமூகத்தை உருவாக்கலாம்.

அத்தகைய ஒரு கல்வியை ஊட்டுகின்ற ஒருவரையே "குரு" என்றும், "ஆசான்" என்றும், "ஆசிரியன்" என்றும் எமது சமூகம் இன்றும் போற்றி வணங்கி வருகின்றது. பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் பாரம்பரியமாக இருந்து வந்த குருகுலக் கல்விமுறை வழக்கில் இருந்து வந்த காலத்தில் இருந்தே குருவைத் தெய்வமாகவும், அன்னையாகவும், தந்தையாகவும் போற்றி வணங்கும் மரபு வளர்ந்து வந்துள்ளது. அன்றைய குருகுலக் கல்வி முறையில் ஒரு குருவுக்கும், மாணவருக்கும் இடையில் உள்ள உறவு மிக நெருக்கமானதாகவும் அன்னியோன்னியமானதாகவும் இருந்து வந்துள்ளது. அந்த வகையில் ஒரு கிராமத்தின் குறிகாட்டியாக விளங்கும் ஆசிரியன், அந்தக் கிராமத்தின் ஆசானாக மட்டுமின்றி ஆலோசகராகவும், வழிகாட்டியாகவும், பிரச்சினை தீர்ப்போனாகவும் மதிக்கப்பட்டு வந்தார் என்பதை இலக்கியங்களினூடாகவும், அநுபவங்களினூடாகவும் அறியமுடிகின்றது. அவ்வாறான ஒரு மதிப்பார்ந்த இடத்தை வகிக்கும் ஆசிரியர்களின் நடத்தைக் கோலங்களைப் பின்பற்றி வருகின்ற சமூகம் அவரைப் போலவே "ஆகவேண்டும்" என்று நினைத்து





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது ஒவ்வொரு அசைவுகளையும் பின்பற்றிப் "போலச் செய்து" (Imitation) வாழமுற்படுவதை அன்று மட்டுமல்ல இன்றும் கூட நடைமுறை வாழ்க்கையில் காணமுடிகின்றது. ஏனெனில் ஒரு பிள்ளைக்கு மிக அருகில் இருந்து அறிவூட்டும் ஆசிரியரைப் பிள்ளைகள் தமது உதாரண புருசர்களாகப் பின்பற்றி வருவதும் தவிர்க்க முடியாததாகிவிட்டது.

ஒரு சமூகம் எதிர்பார்க்கின்ற நல்லாசிரியர்களிடம் இருந்து அந்தச் சமூகம் எவற்றையெல்லாம் எதிர்பார்க்கின்றது? இது பற்றி நகர வாசனையேபடாத ஒரு கிராமத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் கற்றுக் கொண்டிருக்கின்ற சில மாணவர்களிடம் சென்று எழுமாற்றாக, உங்களுடைய ஆசிரியர் எவ்வாறு இருக்கவேண்டும் என்பதை விரும்புகின்றீர்கள்?" என்ற வினாவைத் தொடுத்த பொழுது, அவர்களால் தனித்தனியாக எழுதிக் கொடுத்த கருத்துக்களைத் தொகுத்துப் பார்த்ததில், ஒரு நல்லாசிரியர் என்பவர் யார்? அவர் எவ்வாறு இருக்கவேண்டும் என்ற ஆசிரியருக்குரிய பண்புகளை இனங்காணக்கூடியதாக இருந்தது.

அந்த மாணவர்களின் உள்ளத்து உணர்வுகள் எப்படி இருந்தன என்பதைப் பார்க்கும் பொழுது, பிள்ளைகள் விரும்பும் ஆசிரியரிடம் இருக்கவேண்டிய பண்புகளையும் பட்டியலிட்டுக் கொள்ளலாம்.

***எனது ஆசிரியர் எப்பொழுதும் மகிழ்ச்சியாகவும் சிரித்த முகத்துடனும் இருக்கவேண்டும்.முகத்தைக் கடுகடுப்பாகவும்,கோபமாகவும் வைத்திருக்கக்கூடாது.***

ஆசிரியர்களுக்குத் தனிப்பட்ட முறையில் எவ்வளவோ பிரச்சினைகள் அல்லது மன அழுத்தங்கள் இருக்கலாம். குடும்பத்தில் ஏற்படுகின்ற சில பிரச்சினைகள் அவருடைய வேலைத் தளத்தில் பாதிப்பை ஏற்படுத்தாத வகையில் தன்னைப் பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும். பாடசாலை எல்லைக்குள் ஒரு ஆசிரியர் காலடி எடுத்து வைத்ததுமே,வெளிச்சூழலை மறந்து அவரும் பிள்ளைகளாக மாறி மகிழ்ச்சிகரமான கற்பித்தலுக்குத் தன்னைத் தயாராக்கிவிட வேண்டும். அவ்வாறு தன்னைப் பாடசாலைச் சூழலுக்கு ஏற்றவகையில் மாற்றிக்கொள்ளாத ஆசிரியர் எப்பொழுதும் முரண்பாட்டுச் சூழலுக்குள்ளேயே வாழ்ந்து மற்றவர்களின் வெறுப்புக்கு ஆளாவார்.

***எங்களுடன் அன்பாகவும்,எங்கள் மீது கருணை உள்ளவராகவும் எப்பொழுதும் இருக்கவேண்டும்.***

ஒரு பிள்ளையின் வளர்ப்புத் தாயாகவும், (Foster Parents) நம்பிக்கைப் பொறுப்பாளராகவும் பெற்றாருக்கு அடுத்தநிலையில் இருப்பவர்கள் ஆசிரியர்களே. பாடசாலைக்கு வருகை தந்ததும் ஆறு மணித்தியாலங்கள் வரை தனது ஆசிரியரின் முகத்தையே பார்த்துக் கொண்டிருக்கும் பிள்ளைகள் மீது தாய்க்கு நிகரான அன்பையும் கருணையையும் ஆசிரியர்கள் காட்ட வேண்டும்.

***"எங்கள் எல்லோரையும் ஏழை, பணக்காரன் உயர்ந்தவர், தாழ்ந்தவர் - அரசாங்க உத்தியோகத்தரின் பிள்ளைகள், தொழிலாளிகளின் பிள்ளைகள் என்ற வேறுபாடுகள் இன்றிச் சமமாக மதிப்பவராக இருத்தல் வேண்டும்.***

இத்தகைய பாரபட்சமான செயற்பாடுகள் பற்றி பல பெற்றாரிடம் ஆதங்கம் காணப்படுகின்றது. பொதுவாக போட்டிகளுக்குப் பங்குபற்றுவதற்குப் பிள்ளைகளைத் தெரிவு செய்யும் பொழுது பிள்ளையின் ஆற்றல்களை விட, அவர்களது குடும்பப் பின்னணியைப் பார்த்துத் தெரிவுகளை மேற்கொள்ளும் பொழுது பிள்ளைகளின் ஆளுமையும்,உள்ளமும் எவ்வாறு பாதிக்கப்படும் என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும்.

இது தொடர்பாகப் பல பிள்ளைகளிடம் பின்வரும் கருத்து நிலவுவதை அவர்களுடைய கூற்றுக்கள் புலப்படுத்துகின்றன.

***"எங்களிடம் இருக்கும் திறமைகளையும், ஆற்றல்களையும் சரியாக இனங்கண்டு, அவரவர் திறமைக்கேற்ப தெரிவு செய்து போட்டிகளுக்கு அனுப்புபவராகவும், எம்மை உரிய முறையில் வழிகாட்டுபவராகவும் இருக்கவேண்டும்".***

இவ்வாறான சந்தர்ப்பங்களில் ஒரு ஆசிரியர் நடுவு நிலைமையைக் கருத்தில் கொண்டு போட்டி தொடர்பான விடயங்களை ஒரு வகுப்பில் உள்ள அனைத்து மாணவர்களுக்கும் வழங்கி ஆயத்தப்படுத்துவதற்கான வழிகாட்டல்களைச் செய்து அவர்களில் இருந்து திறமையான மாணவர்களைத் தெரிவுசெய்து அனுப்பும் பொழுது அங்கே வெளிப்படைத் தன்மை பேணப்படும். எப்பொழுதும் ஒரு ஆசிரியரிடம் பாரபட்சமான தன்மையோ, ஒழிவு மறைவோ இருக்கக்கூடாது.

***தினமும் ஏதாவது புதிய விடயங்களை அல்லது தகவல்களை எங்களுக்கு வழங்கிக் கொண்டிருப்பவராக இருக்க வேண்டும்.***

ஒரு ஆசிரியர் எல்லாம் தெரிந்த மனிதர் ஆக இருப்பார் என்றே சமூகம் எதிர்பார்க்கின்றது. அந்த எதிர்பார்க்கைகள் பொய்த்துப் போகாத வகையில் ஒரு ஆசிரியர் நடந்துகொள்ள வேண்டும். தனது அறிவையும், விடயக் கொள்ளளவையும் எப்பொழுதும் இற்றைப்படுத்திக் கொண்டு வரவேண்டும். இதற்கு அவர் தனது சுயதேடலையும், வாசிப்புத் திறனையும் மேம்படுத்திக் கொள்ள வேண்டும். அப்பொழுது தான் சமூகம் அவரை முன்மாதிரியானவராக ஏற்றுக்கொள்ளும்.

***எங்கள் ஒவ்வொருவரின் பிரச்சினைகளையும் நன்றாக விளங்கிக்கொள்பவராகவும், அவற்றை நியாயமான முறையில் தீர்த்துவைக்க முன்வருபவராகவும் இருத்தல் வேண்டும்.***

பாடசாலை நேரங்களில் பிள்ளைகள் தமக்குள் ஏற்படுத்திக்கொள்ளும் பிரச்சினைகள், முரண்பாடுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பான முறைப்பாடுகளைத் தமது ஆசிரியர்களிடம் சென்று முறையிடும் பொழுது பெரும்பாலான ஆசிரியர்கள் சாக்குப் போக்குச் சொல்லித் தட்டிக்கழித்து விடுவார்கள் அல்லது அதிபரிடம் அவர்களை அனுப்பி விட்டு மெதுவாக நழுவிவிடுவார்கள். இத்தகைய ஆசிரியர்கள் மீது மாணவர்கள் நம்பிக்கை இழப்பது மட்டுமல்லாது, அவர்கள் மீது வெறுப்படையவும் தொடங்கி விடுவார்கள். தமது பிரச்சினைகளை அனுதாபத்துடன் கேட்டு அவற்றுக்கான தீர்வுகளை எதிர்பார்த்து வரும் மாணவர்களுக்கு அவர்களைச் சாந்தப்படுத்தும் வகையில் முடிந்தவரையில் ஏதோ ஒரு தீர்வுக்கு இட்டுச் செல்ல வேண்டும். அவ்வாறான ஆசிரியர்களையே மாணவர்கள் பொதுவாக விரும்புவார்கள்.

***எங்களுடைய கவலைகள், குடும்பச் சூழல் மற்றும் தேவைகளை அவதானமாகச் செவிமடுத்துக் கேட்பவராகவும், அவ்வப்போது ஆலோசனைகளை வழங்குபவராகவும் இருத்தல் வேண்டும்.***

பிள்ளைகள் பொதுவாக மற்றவர்களின் கணிப்பீட்டுக்கும்,அக்கறையுடன் கவனிக்கப்படுவதற்கும் எதிர்பார்ப்பார்கள். தம்மையும் ஒரு "மனிதராகக்" கணிக்கப்பட வேண்டும் என்பதற்காகவே குழந்தைகள் குறும்புத் தனங்களைச் செய்யமுற்படுகின்றனர். அசிரியர்களோ அல்லது பெற்றார்களோ பிள்ளைகளின் கருத்துக்களையும் செயல்களையும் கவனமாகச் செவி மடுப்பதுடன், அக்கறையுடன் கவனித்து அதற்கேற்ப துலங்கும் பொழுது பிள்ளைகள் அடையும் மகிழ்ச்சிக்கும் ஒரு அளவிருக்காது.

***வகுப்பு ரீதியாகவோ பாடசாலைக்குள்ளோ பல்வேறு துறை சார்ந்த சிநேகபூர்வமான போட்டிகளில் தம்மை ஈடுபடுத்தி, உற்சாகப்படுத்துபவராகவும், தங்களுடன் சேர்ந்து சில மணி நேரமாவது மகிழ்ச்சிகரமாகப் பொழுதைக் கழிக்கவேண்டும் என்று பல மாணவர்கள் எதிர்பார்க்கின்றனர்.***

வகுப்பறைக் கற்றல் செயற்பாட்டில் மாணவர்கள் ஈடுபடுத்தப்படும் பொழுது, அவர்களிடையே ஒருவித அச்சமும் இறுக்கமும் காணப்படும். ஆசிரியர்களும் பொதுவாக ஒருவிதமான மன அழுத்தமுள்ளவர்களாகவே இருப்பர். ஆனால் அவர்கள் ஒவ்வொருவரும் தமது மன அழுத்தங்களைக் குறைக்கும் வகையில் வகுப்பறைக்கு வெளியே மாணவர்களுடன் மாணவர்களாக போட்டிகளில் ஈடுபடுவதும் அவர்களைப் போட்டிகளில் ஈடுபடுத்தி உற்சாகப்படுத்தி வரும் ஒரு ஆசிரியரை மாணவர்கள் தமது வாழ்நாள் வரைக்கும் மறக்கமாட்டார்கள்.

எமது பெற்றார்களை அறிந்து கொள்வதிலும், தமது குடும்பத்தினருடன் விரும்பிப் பழகுபவராகவும் இருத்தல் வேண்டும். வளர்ந்த மாணவர்களைவிட சிறு பிள்ளைகள் தமது ஆசிரியர்கள், பெற்றாருடன் பேசுவதையும் பழகுவதையும் விரும்புவார்கள். பாடசாலைக்குப் புறம்பான நேரங்களில் கடைத்தெருக்களிலோ அல்லது கோயில்களிலோ ஆசிரியர்களைக் கண்டதும் பெற்றாரை இழுத்துக் கொண்டு வந்து அறிமுகப்படுத்துவதிலும், பேச வைப்பதிலும் மகிழ்ச்சியடையாத பிள்ளைகள் எவருமே இருக்கமாட்டார்கள். ஆசிரியர்களும் நேரம் கிடைக்கும் போது தமது மாணவர்களின் வீடுகளுக்குச் சென்று, அவர்களது வீடுகளில் தேநீர் அருந்திச் சென்று வருவார்களேயானால் அந்த மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இடையிலான உறவு மிக நெருக்கமடையும். மாணவர்களின் பெற்றாரும் அத்தகைய ஆசிரியர்கள் மீது பக்தியும் மரியாதையும் உடையவர்களாக இருப்பர்.

***வகுப்பில் கற்றுக் கொண்டிருக்கின்ற ஒவ்வொரு பிள்ளையினதும் பெயர்களை அறிந்து வைத்திருப்பதுடன், அந்தப் பெயரைக் குறிப்பிட்டு அழைக்கும் ஆசிரியர்களைக் கூடுதலான மாணவர்கள் விரும்புகின்றனர்.***

பெரும்பாலான ஆசிரியர்கள் தம்மிடம் கற்றுக் கொண்டிருக்கின்ற மாணவர்களின் பெயர்களை அறிந்து வைத்திருப்பதில்லை. வகுப்பு நேரங்களில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளின் பொழுது, அவர்களைப் பெயர் குறிப்பிட்டு அழைக்கும் பொழுது இருவருக்கும் இடையிலான உறவு நிலை மேம்பாடடையும். மாறாகப் பெயரைச் சுட்டி அழைப்பதற்குப் பதிலாக "சிவலை" "கறுவல்" "கடைசி வாங்கிலில் இரண்டாவதாக இருக்கிற தம்பி" என்று பல்வேறு அடைமொழிகளைப் பயன்படுத்துகின்ற ஆசிரியர்களை, அந்தப் பாடசாலை வாழ்க்கையுடனேயே மாணவர்கள் மறந்து விடுவர்.

***நல்ல அழகாக உடை உடுத்தி வருபவராகவும், கவர்ச்சிகரமான எடுப்பானத் தோற்றத்தைக் கொண்டிருப்பவராகவும் இருத்தல் வேண்டும்.***

ஆள்பாதி, ஆடைபாதி என்று கூறுவது போல் ஆசிரியர்கள் ஆபாசமில்லாத வகையில், நல்ல ஆடைகளை அணிந்து வரவேண்டும். அவ்வாறு எடுப்பான தோற்றத்துடன் வருகை தருகின்ற ஆசிரியர்களையே பின்பற்றுகின்ற ஒரு மாணவர் சமூகம் உருவாகும்

***மகிழ்ச்சியான பொழுதாகவும்,அறிவைத் தேடும் வகையிலும் இடையிடையே எங்களை வெளிக்களப் பயணம், கல்விச் சுற்றுலாக்களுக்கும் அழைத்துச் செல்வதிலும், செய்முறைகளில் எங்களை ஈடுபடுத்துபவராகவும் இருத்தல் வேண்டும்.***

வெளிக்களப் பயணங்களும், கல்விச் சுற்றுலாக்களும் மாணவர்களின் கற்றல் நடவடிக்கையின் ஒரு கூறாக இருப்பதால், ஆசிரியர்களும், அதிபர்களும் தமது வருடாந்த வேலைத் திட்டத்தில் இதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பதும் பிள்ளைகளின் எதிர்பார்ப்பாகும். இத்தகைய களப்பயணங்கள் ஆசிரிய-மாணவ உறவில் அன்னியோன்னிய உறவை மேலும் வலுவடையச் செய்யும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இருவரை ஒருவர் புரிந்துகொள்வதற்கும், மாணவர்களின் தனி ஆற்றல்களை இனங் கண்டு கொள்வதற்கும் வழி ஏற்படுத்திக் கொடுக்கும். "பிள்ளையை அறிவோம்" என்ற எண்ணக்கருவை செயற்படுத்துவதற்கு இவை போன்ற இணைப்பாடச் செயற்பாடுகள் உதவுகின்றன என்பதை ஆசிரியர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

பாடசாலையினூடாகவே ஒரு பிள்ளையின் முழுமையான ஆளுமை விருத்தியை ஏற்படுத்தமுடியும் என்பதை எழுமாற்றாகத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் எதிர்பார்ப்புக்கள் வெளிப்படுத்துகின்றன. பிள்ளைகளின் விருப்பங்களையும், எதிர்பார்க்கைகளையும் எவர் நிறைவு செய்கின்றாரோ, அவரே நல்லாசிரியராக வாழும் வரை நிலைத்திருப்பார்.

"யுனெஸ்கோ"வினால் *(UNESCO)* வெளியிடப்பட்ட எம்.சம்கியுட்ட என்ற கல்வியியலாளரின் *'Education on the move"* என்ற நூலில் இருந்து ஒரு ஆசிரியரின் பங்கு எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை அறிந்துகொள்ளலாம். அவருடைய அந்தக் கருத்துக்கள், எமது பிள்ளைகளின் எதிர்பார்ப்புக்களுடன் எந்த அளவுக்கு ஒத்துப்போகின்றது என்பதைப் புரிந்துகொள்ளலாம்.

- மாணவர்கள் கற்கும் முறைகளைத் திட்டமிட்டுச் செயற்படுத்துபவர்.
- மாணவர்களின் சிந்தனையைத் தூண்டுபவர்.
- கல்வியில் மூலவளங்களைச் சேகரித்துப் பாதுகாப்பதுடன், அவற்றை மாணவர்கள் பயன்படுத்துவதற்கேற்ற வகையில் வழிகாட்டல்களை மேற்கொள்பவர்.
- மாணவர்களின் தேவைகளையும், கல்வியின் நோக்கங்களையும் நிறைவு செய்யும் வகையில் முழு கல்விச் செயற்பாட்டையும் ஒருங்கிணைப்பவராக இருப்பவர்.

யுனெஸ்கோ வெளியிட்ட இந்தக் குறிப்புக்களையும், எங்களுடைய கிராமத்துக் குழந்தைகளின் எதிர்பார்ப்புக்களையும் நிறைவு செய்யக்கூடியவர்களாக எமது ஆசிரியர்கள் தம்மை வளர்த்துக் கொள்ள முன்வர வேண்டும். அப்பொழுதுதான் அவர்களுக்கு அவர்கள் வாழும் சமூகத்தில் என்றென்றும் நிலையான இடம் இருக்கும். அவர்கள் தான் எமது சமூகத்தின் குறிகாட்டிகளாகவும், வழிகாட்டிகளாகவும் விளங்குவர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ச.தேவசகாயம்



# வகுப்பறை அவதானிப்புகளில்...



**பாடசாலை உள்வாரி வெளிவாரி மதிப்பீட்டின்போது வகுப்பறை அவதானிப்பில் கவனிக்கப்பட வேண்டியவைகள்:**

ஒரு நிறுவனம் அல்லது இயக்கம் தன் சேவை அல்லது பொருள் உற்பத்தியை நோக்காகக்கொண்டு வெற்றிகரமாக இயங்கி, தம்சேவை வழங்குநர்களின் தேவைகளை உரிய முறையில் நிறைவேற்றி திருப்தி அடையச் செய்கின்றனவா என்பதைப் பொருத்தமான மதிப்பீட்டு செயற்பாடொன்றின் மூலம் தொடர்ச்சியாக அவதானிக்க முடியுமாயின் அந்நிறுவனம் அல்லது இயக்கம் தொடர்ச்சியான வளர்ச்சியை நோக்கிச் செல்லும் எனலாம்.

பரிட்சித்தல், மேற்பார்வை, செயற்திறன் மதிப்பீடு ஆகிய பல் வேறுபட்ட உள்ளீடுகள் மூலம் பாடசாலை உட்பட்ட அரச நிறுவனங்கள், இயக்கங்கள் என்பவற்றின் உள்வாரி, வெளிவாரி மதிப்பீடுகள் நடைபெறுகின்றன. தேசிய மேம்பாட்டை தமது நோக்கமாக் என்பதனால் இந்நிறுவனங்கள், இயக்கங்கள் என்பன தம் இலக்குகள் மீது முக்கிய கவனம் செலுத்த வேண்டும். ஒழுங்கான மதிப்பீடு இல்லாதவிடத்து ஒழுங்கான முகாமைத்துவம் கிடையாது என்பது உறுதி.

பாடசாலையின் அனைத்து பௌதிக, மனித வளங்களும், செயற்பாடுகளும் கல்வியின் நோக்கத்தினை நிறைவேற்றும் வண்ணம் சேவை பெறுநருக்கு தரமான சேவையினை வழங்கும் பொருட்டு பயன்படுத்தப்படுதல் வேண்டும். அவ்வாறு பயன்படுத்தப்படுகின்றதா? என்பதை தேடிப்பார்ப்பதே மதிப்பீட்டின் நோக்கமாகும்.

முகாமைத்துவச் சக்கரத்தை சக்திமிக்கதாக்கி நடைமுறைப்படுத்துவதற்கு கல்வித் தரம் மற்றும் கட்டிகளை அடிப்படையாகக் கொண்ட திட்டமிட்ட மதிப்பீட்டு பொறிமுறை ஒன்று அவசியமாகும். தலைமைத்துவப் பொறுப்பினை ஏற்று நடாத்தும் குழுவினர் இதனை நன்கு விளங்கி

செயற்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

பாடசாலையானது நோக்கம், வளங்கள், செயற்பாடுகள் எனப் பல்வேறு அம்சங்களைக்கொண்டதொரு கூட்டு நிறுவனமாகும். ஆனால் இவ்வம்சங்கள் அனைத்தும் ஒன்றுடன் ஒன்று பல்வேறு வகையில் பின்னிப் பிணைந்து காணப்படுகின்றன. எவ்வாறாயினும் மதிப்பீட்டினை இலகுவாக்கும் பொருட்டு பின்வரும் எட்டுத் துறைகளாக பிரித்துள்ளனர். பொது முகாமைத்துவம், பௌதீக மனிதவள முகாமைத்துவம், முறையான கலைத்திட்ட முகாமையும் வகுப்பறை மதிப்பீடும், இணைப்பாடவிதான செயற்பாட்டு முகாமைத்துவம், மாணவர் அடைவு மட்டம், மாணவர் நலன்புரிச் சேவை, பாடசாலையும் சமூகமும், அறிவை அடிப்படையாகக் கொண்ட சமூகத்திற்காக மாணவர் அபிவிருத்தி என்பனவாகும். இவ்வொவ்வொரு துறையின் கீழும் பண்புத் தரங்கள், பண்புத்தர மட்டங்கள், சுட்டிகள் என்பன பொருத்தமான வகையில் தயாரிக்கப்பட்டு அதன் அடிப்படையில் உள்வாரி, வெளிவாரி மதிப்பீடு செய்யப்படுகின்றது. ஆயினும் இங்கு முறையான கலைத்திட்ட முகாமையும், வகுப்பறை மதிப்பீடும் என்ற தலைப்பில் உள்ளடங்கும் வகுப்பறை அவதானிப்பு என்ற விடயத்தை முன்னெடுக்கும்போது அவதானிப்புக்கு உட்படுபவர், அவதானிப்பாளர் போன்றோர் கவனத்தில் கொள்ள வேண்டிய பல்வேறு விடயங்களை இங்கு ஆராயப்படுகின்றது.

கற்பித்தல் ஒரு தொழிலாகக் கருதப்பட வேண்டும். ஒருவகையில் அதுவொரு சமூகப்பணியாகும். அதன் நிமித்தம் மிகுந்த முயற்சியோடு இடையறாது மேற்கொள்ளும் கற்றல் வாயிலாகப் பேணும் விசேட அறிவு மற்றும் விசேட திறமைகள் என்பன ஆசிரியரில் மிளிர வேண்டும். மேலும் தம் பொறுப்பில் உள்ள பிள்ளைகளின் கல்வி, நலன் என்பன தொடர்பாக ஒரு தனி நபர் என்ற ரீதியிலும், கூட்டாகவும் தாம் பொறுப்பினைத் தாங்குவதாக அவர் உணருதல் வேண்டும் என யுனெஸ்கோவின் ஆசிரியர் சாசனத்தில் கூறப்பட்டுள்ளது.

இவ்வாறானதொரு பின்புலத்திலிருந்து வகுப்பறை அவதானிப்பு என்பதை நோக்குவோமாயின் ஆசிரியரானவர் குறித்த ஒரு பாடவேளையில் வகுப்பறையில், விஞ்ஞான கூடத்தில் அல்லது விளையாட்டு மைதானத்தில் அல்லது வேறு ஒரு இடத்தில் கற்பித்தலில் ஈடுபட்டிருக்கும்போது மதிப்பீட்டாளரால் அல்லது அவதானிப்பாளரால் செய்யப்படும் அவதானிப்பே வகுப்பறை அவதானிப்பு ஆகும்.

கற்பிக்கப்படும் பாடத்தின் நோக்கத்தையும், அதன் முக்கியத்துவத்தையும், நிறைவேற்றுவதற்காக குறித்த பாடவேளையில் ஆசிரியர் உபயோகித்த கற்பித்தல் முறை, மற்றும், அதன் பயனுறுதியின் அடிப்படையில் பாடத்தினை மதிப்பீடு செய்வதற்குத் தேவையான தகவல்களை பெற்றுக்கொள்வதே அவதானிப்பின் நோக்கமாகும்.

இருப்பினும் இவ் அவதானிப்பை மேற்கொள்ளும் போது அவதானிப்பு செயன்முறையில் ஆசிரியர், மாணவர்கள், மதிப்பீட்டாளர் என்ற மூன்று வகையினரும் சம்பந்தப்படுகின்றனர். அவதானிப்பாளர் அவதானிப்பை நேர்த்தியாக நிறைவேற்ற முற்படும்போது நேரடியாகவும், மறைமுகமாகவும் சில பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது என்பது வெளிப்படையான உண்மையாகும்.


வகுப்பறை அவதானிப்புக்கான பொதுவான மாதிரிப்படிவம் கல்வி அமைச்சு, மாகாணம், வலயம் மற்றும் கோட்ட மட்டத்திலும், பாடசாலையினாலும் பயன்படுத்தப்படுகின்றது. எனினும் ஆசிரியர்களால் கற்பிக்கப்படும் சகல பாடங்களையும் பொதுவான மாதிரி படிவத்திற்குள் அடக்க முடியுமா? என்பது சிந்திக்க வேண்டிய வினாவாகும்.. அவ்வாறே ஆசிரியர் பயன்படுத்தும் கற்பித்தல் உபகரணங்கள் மற்றும் பின்பற்றும் முறைகளின் அடிப்படையிலும் பாடங்களிலும் வேறுபாடு இருப்பதினால் இவ்வாறான ஒரே வகைப்படிவத்தை சரியாக பிரதியிட முடியுமா? என்ற வினாவும் முன்னிலைப்படுத்தப்படுகின்றது.


கல்வி அமைச்சின் முகாமைத்துவம் மற்றும் தர உறுதிப்பாட்டு அலகினால் வெளியிடப்பட்ட பாடசாலைக் கல்விச் செயற்பாட்டில் பண்புசார் விருத்தி-iii என்ற நூலில் தற்போது பாவனையிலுள்ள பொதுவான மாதிரிப் படிவம் ஆசிரியர் மையக் கற்பித்தல் முறையினை அவதானிப்பதற்குப் பொருத்தப்பாடுடையதாகவே தயாரிக்கப்பட்டுள்ளது. ஆயினும் இன்று பாடசாலைகளில் மாணவர் மையக் கற்பித்தலுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டும், வலியுறுத்தப்பட்டும் வருவதுடன், மாணவர் மையக் கற்பித்தலுக்கு ஏற்ப 5E முறையிலான கற்பித்தல் அணுகுமுறைகள் நடைமுறையில் இருப்பதும் நாம் அறிந்ததே. இவ்வாறான ஒரு சூழலில் ஆசிரியர் மையமாகத் தயாரிக்கப்பட்ட படிவத்தைத் அடிப்படையாகக் கொண்டு மாணவர் மையக் கற்பித்தல் முறைக்கு ஏற்ப அவதானிப்பை செய்ய முற்படும் அவதானிப்பாளருக்கும் அவதானத்திற்கு உட்படுத்தப்படும் ஆசிரியருக்கும் இடையே சிக்கலான நிலைமை உருவாகும் நிலை இருப்பது தெளிவாகின்றது.

பொதுவான மாதிரிப் படிவத்தை தயாரிக்கும் போதும், அவதானிப்பாளர் அதனைப் பயன்படுத்தும் போதும் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க வேண்டியுள்ளது. இதற்குத் தீர்வாக மிகவும் சிக்கலற்ற மற்றும் விளக்கமான மாதிரிப்படிவத்தை தயாரித்துக் கொள்ள முடியும். இருப்பினும் பாட அவதானிப்பை விட படிவத்தினை பூர்த்தி செய்வதில் அவதானிப்பாளரின் கவனம் அதிகமாக ஈர்க்கப்படுவதனால் பாடத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





முறையாக அவதானிப்பதில் தடைகள் ஏற்படவும் வாய்ப்புகள் அதிகமாக இருக்கின்றது.

மேற்குறிப்பிட்ட பல்வேறு பிரச்சினைகளிலிருந்து விடுபட்டு சிறப்பான ஓர் அவதானிப்பை அவதானிப்பாளர் வகுப்பறையில் மேற்கொண்டு வெற்றிகொள்ள, பின்வரும் நடைமுறைகளில் கவனம் செலுத்துதல் பொருத்தமானதாக அமையுமெனலாம். அத்துடன் அதற்கு ஏற்ப புள்ளித்திட்டத்தையும் தயாரித்துக்கொள்ளுதல் இரட்டிப்பு வெற்றியைத் தரும்.

- பாடத்தின் விடய அலகுக்கு ஏற்ப பாடத்தின் நோக்கங்களையும், அதன் முக்கியத்துவத்தினையும் கருத்தில் கொள்ளுதல்.
- அலகுகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள பாடங்களின் ஒழுங்கு முறைப்படி அப்பாடத்திற்கு பொருத்தமான வகையிலான கற்பித்தல் நுட்பங்கள், கட்டம் கட்டமாக பயன்படுத்தும் படிமுறையான செயற்பாடுகள் எவ்வாறு கொண்டு செல்லப்படுகின்றது என்பதை அவதானித்தல். அதாவது வாய்மொழியாக தெளிவுபடுத்தல், குழுச்செயற்பாடுகள், ஒப்படைகள் என்பவற்றை அவதானித்தல்.
- இவ்வாறான செயற்பாட்டை முன்னெடுக்கும்போது பயன்படுத்திய மூலங்கள் பற்றி அவதானித்தல். உதாரணமாக வாசிப்புப் புத்தகம், செயன்முறைப் புத்தகம், வேறு ஆவணங்கள், பல்வேறு கற்பித்தலுக்கு பயன்படுத்திய கருவிகள், வகுப்பறைச் சூழல், எடுத்துக்கொண்ட காலம் போன்றவற்றைக் கருத்தில் கொள்ளுதல் வேண்டும்.
- வகுப்பறையில் கற்பிக்கும் பணியிலீடுபட்டுள்ள ஆசிரியரின் நடத்தை, கற்பிக்கும் தொனி, தோற்றம், செயற்பாடுகள், அனைத்து மாணவர்களையும் அவதானிக்கும் பாங்கு, மற்றும் பாடத்தின் பொருத்தப்பாடு பற்றிக் கவனம் செலுத்துதல் வேண்டும்.
- ஆசிரியரின் நடத்தைக்கோலம் போன்று மாணவரின் நடத்தைக்கோலம் பற்றியும் கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். மாணவர் மையக் கற்றல் முறை, குழுச்செயற்பாடுகளில் மாணவர்களின் உயிரோட்டமுள்ள பங்களிப்பு, மாணவர்களுக்குள் ஏற்பட்ட கற்றல் பிரச்சினைகளிலிருந்து விடுபடுவதற்கான ஆரோக்கியமான கலந்துரையாடல், போலச் செய்தல், பாத்திரமேற்று நடித்தல் போன்ற பல்வேறு வகைப்பட்ட விடயங்களுக்கூடாக பாடத்துடனான பொருத்தப்பாடு.
- வகுப்பறையின் கற்றல் கவிவு நிலை பற்றிய கவனம் செலுத்துதல். மாணவர்-ஆசிரியர், மாணவர்-மாணவர்களுக்கிடையிலான நட்புறவு, விருப்புடனும், ஆர்வத்துடனும் ஈடுபாட்டுடனும் கற்றல், பாடத்திற்குப் பொருத்தமானதும் ஏற்றுக்கொள்ளக் கூடியதுமான உள்ளகப் பௌதிக ஒழுங்கமைப்பு.
- மாணவர்களின் கற்றல் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது மாணவர்களின் கற்றல் பேறுகளை கணிப்பிடல்.
- பாடம் கிரமமான தர உறுதிப்பாட்டுடன் தயாரிக்கப்பட்டுள்ளதா? அதன் அடிப்படையில் பாடம் நடைபெறுகின்றதா? மாற்றம் ஏற்படுத்தப்படின் அது எவ்வாறு பொருந்தும்? போன்ற விடயங்கள் பற்றி கவனம் செலுத்துதல் வேண்டும்.
- இதுவரை பூர்த்தியாக்கப்பட்டுள்ள (40 நிமிடப்பாட வேளையில்) செயற்பாடுகள் (Activity) எத்தனை? போதுமானதா? போன்ற விடயங்களுடன் பாடத்தின் மொத்த மதிப்பீட்டை செய்வதற்கு ஏற்ப இவ்வாறு தயாரித்துக்கொள்ளல் பொருத்தமானதாக அமையும்.

மேற்குறிப்பிட்ட விடயங்களில் ஒரு கணிப்பீட்டாளர் கவனம் செலுத்துகின்றபோது சிறந்த கற்றல்-கற்பித்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழலை பாடசாலைகளில் ஏற்படுத்துவதுடன் வகுப்ப றைக்கு பொருத்தமான அவதானிப்பையும் சிறந்த வெளியீடுகளையும் பெறமுடியும்.

இது இவ்வாறு இருக்கின்றபோதிலும் ஒரு வகுப்பறை அவதானிப்பாளர் என்ற பாத்திரமேற்று வகுப்பறையினுள் கற்பிப்பவரை அவதானிக்கச் செல்லு பவரிடமும் பல்வேறுபட்ட பண்புகள், நடத்தைக் கோலங்கள் காணப்பட வேண்டும் என்பதும் ஒரு முக்கிய அம்சமாகக் கொள்ளப்படுகின்றது. இவ்வாறான பண்புகளைக்கொண்டிராத பல மதிப்பீட்டாளர்களால் தான் பல பாடசாலைகளில் உள்வாரி மதிப்பீடு வெற்றி யளிப்பது இல்லை. அத்துடன் அவதானிப்பாளருக்கும் ஆசிரியருக்கும் இடையே கருத்து வேறுபாடுகள் ஏற்பட வும் காரணமாய் அமைந்துள்ளது எனலாம். சில பாடசாலைகளில் உள்வாரி மதிப்பீடுகள் இடம்பெற்ற போதிலும் இவ்வாறான சில முரண்பாடுகள் காரணமாக வகுப்பறை அவதானிப்புக்கள் இடம்பெறுவது இல்லை. சில சந்தர்ப்பங்களில் வெளிவாரி மதிப்பீட்டின்போது வகுப்பறை அவதானிப்புக்களில் சில பொருத்தமற்ற அணுகுமுறைகள் அவதானிப்பாளரால் மேற்கொள்ளப் படுவதும் அறியக்கூடியதாக உள்ளது. ஆகவே ஒரு அவதானிப்பாளர் என்ற வகையில் அவர் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் அவரது நடத்தைக்கோலம் எவ்வாறு அமையவேண்டும், எதைச்செய்ய வேண்டும், எதைச் செய்யக் கூடாது போன்ற பல்வேறு விடயங் களை இங்கு நோக்குதல் பொருத்தமானதாகும்.

ஒரு அவதானிப்பாளர் ஒரு பாடத்தை அவதானிக் கின்றபோது ஆரம்பம் முதல் இறுதிவரை முழுமையாக முழுப்பாடத்தினையும் அவதானித்தல் வேண்டும். அதன் பின்னரே தனது தீர்மானங்களை, புள்ளியிடலை மேற் கொள்ளுதல் வேண்டும். இல்லையேல் ஆசிரியரின் முழுமையான கற்பித்தல், கற்பித்தல்பாங்கு, கற்பித்தல் முறை, மாணவர்களின் இயைபுத்தன்மை, இயங்குநிலை, கற்றல் பேறு, கற்றல் அனுபவம் என்பதை ஒரு அவதானிப்பாளர் அறிந்துகொள்ள முடியாது போய்விடும்.

ஆசிரியர், மாணவர்கள் இருசாராரினதும் அவதானம் கற்பிக்கப்படும் பாடத்தின்மீது இருத்தல் வேண்டுமே தவிர அவதானிப்பாளர் தன்பக்கம் ஈர்ப்பதைத் தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

வகுப்பறையில் கற்பித்தல் நடைபெறும் வேளை வகுப்பறையின் புனிதத்தன்மை ஆசிரியர், மாணவர்களி டம் இருக்க வேண்டுமென்பதை ஏற்க வேணடும். இங்கு நடைபெறும் கற்றல்-கற்பித்தல் செயற்பாட்டில் எவ்விதத் திலும் தலையிடாது பாட அவதானிப்புக்கு மாத்திரம் அவதானிப்பாளர் தமது செயற்பாட்டை வரையறுத்தல் வேண்டும்.

சிலவேளைகளில் கற்பிக்கும் பாடம் எவ்வளவு பலவீனமாக இருப்பினும் அல்லது மிகவும் சிறப்பான நிபுணத்துவமிக்கதாக இருப்பினும் இடையில் தலையிடு வதனையும், அவதானிப்பாளர் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடுவதனையும் தவிர்த்துக்கொள்ளுதல் வேண்டும். இவ் அவதானிப்பின் நோக்கம் ஆசிரியரின் அபிவிருத்திக்காக, தேவையான தகவல்களைப் பெற்றுக்கொள்வதேயன்றி அவதானிப்பாளர் தனது பதவி, அதிகாரம், தனது திறன், ஆற்றல்களைக் காட்சிபடுத்துவதற்கன்று என்பதை நன்கு உணர்ந்துகொள்ளுதல் அவசியமாகும்.

மாணவர்களின் முன்னிலையில் ஆசிரியரின் கௌர வத்திற்கு பாதிப்பு ஏற்படும் வகையில் செயற்படாமல் அவதானிப்பை மாத்திரம் மேற்கொள்ளுதல் வேண்டும். பாட அவதானிப்பின்போது மாணவர்களின் பயிற்சி புத்த கம், மதிப்பீட்டு அறிக்கை போன்றவற்றை பரிசீலிப் பதைத் தவிர்த்துக்கொள்ளுதல் மிக முக்கிய அம்சமாகும். இவ்வாறான சில விரும்பத்தகாத விடயங்களை சில அவதானிப்பாளர்கள் செய்வது ஆசிரியர்களுக்கு அசௌ கரித்தை ஏற்படுத்தும் என்பதை அவதானிப்பாளர்கள் கவனத்தில்கொள்ளுதல் விரும்பத்தக்கதாகும்.


வகுப்பறையில் ஆசிரியர் கற்பித்துக்கொண்டிருக் கும்போது இறுதியாக அறிக்கை தயாரிக்கத் தேவையான தகவல்களை சேகரிப்பதே அன்றி வகுப்பறைக்குள் எழுதுவதை தவிர்த்தல் வேண்டும். அவ்வாறு எழுதும் போது முழுமையான அவதானிப்பினைச் செய்ய முடியாது போகும். தேவை ஏற்படின் சில சுருக்கக் குறிப்புக்களை மட்டும் எழுதிக் கொள்ளலாம்.

பாடம் முடிவடைந்த பின் திட்டமிடல், மாணவர் அடைவு மட்ட கணிப்பீட்டு அறிக்கைகள், ஆசிரியரின் வெற்றி, தோல்வி, பலம், பலவீனங்கள், எதிர்கொண்ட சவால்கள் போன்ற அவதானித்த பல்வேறு விடயங்கள் பற்றி ஆசிரியருடன் கலந்துரையாடுதல் அவசியமாகும். இது ஒரு பொருத்தமான, அமைதியான சூழலில் இடம் பெறுதல் வேண்டும். இக்கலந்துரையாடலானது ஆசிரியரின் அபிவிருத்தியை இலக்காக கொண்டதாக அமைய வேண்டும். மாறாக ஒரு விமரிசனமாக அல்லது குறைகளை சுட்டிக்காட்டுவதாக அமையாமல் நல்லுற வுடனான, ஆசிரியரின் முன்னேற்றத்திற்கான ஓர் ஒத்து ழைப்பாக அமைவதாக ஆசிரியர் உணரக்கூடியதாக இருத்தல் வேண்டும். அத்துடன் சிறந்த ஜனநாயகப் பண்புடன் ஆசிரியர் தமது கருத்துக்களை தெரிவிக்க சந்தர்ப்பங்களை வழங்குதல் வேண்டும்.

வகுப்பறை மதிப்பீட்டின்போது மதிப்பீட்டாளர் தனது தகைமையின் அடிப்படையில் மதிப்பீடு செய் வதே மிகச் சரியானதும், பலன்தரக்கூடியதுமாகும், இருப் பினும் வழங்கப்படும் வகுப்பறை மதிப்பீட்டிற்கான படிவத்தை வழிகாட்டலுக்காக பயன்படுத்துவதை கருத்தில்கொள்வது அவசியமாகும். எனினும் இந்த வகுப்பறை மதிப்பீட்டு படிவத்தை மாத்திரம் கருத்திற் கொண்டு மதிப்பீட்டை மேற்கொள்வது சிறப்பானதன்று. மாறாக சிறந்த கற்றல்-கற்பித்தல் முறைக்கேற்ப மதிப்பீட்டாளர் வகுப்பறை மதிப்பீட்டை மேற்கொள் வதே சிறந்த ஓர் எதிர்பார்ப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்பு ஜவஹர்ஷா

# திசைமாறும் ஆயிரம் பாடசாலைகள் திட்டம்

இலவசக் கல்வியின் தந்தையென நினைவுகூரப்படும் சி.டபிள்யு. டபிள்யு.கன்னங்கர 54 மத்திய பாடசாலைகளை உண்டாக்கி, இலங்கைக் கல்வி வரலாற்றில் நல்லதொரு ஆரம்பத்தை உண்டாக்கினார். அதனைவிட இன்றைக்கு பொருத்தமான முறையில் ஆயிரம் பாடசாலைகளை உண்டாக்குவதே அரசாங்கத்தின் புதிய திட்டமாகும். இதன் மூலம் முழுமையான ஆய்வுகூடம், குறைந்தபட்சம் 50 கணினிகளைக் கொண்ட ஆய்வுகூடம், நவீன தொழில்நுட்ப உபகரணங்களுடன் மொழிக்கூடம், நுண்கலைக்கல்வி வசதிகள், விளையாட்டு வசதிகள் உட்பட சகல வசதிகளும் கிடைக்கும்.

1000 பாடசாலைகளுக்கு 1000 அதிபர்கள், 1000 தகவல் தொழில்நுட்ப பட்டதாரிகள், விஞ்ஞான, கணித பட்டதாரி பயிற்றப்பட்ட ஆசிரியர்கள், 1000 ஆங்கில ஆசிரியர்கள் இவ்வாறு பலவித பேச்சொல்லப்பட்ட சகல வாக்குறுதிகளோடும் கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன கடந்த வருடம் முழுவதும் இதைப் பற்றியே பேசி வந்தார்.



முதல் நடவடிக்கையாக தனது ஹோமாகம தொகுதியில் ஜனாதிபதியின் பெயரைப் பாவித்து இத்திட்டத்தின் மாதிரிப் பாடசாலையொன்றை ஆரம்பித்தார். இந்த திட்டத்திற்காக 6½ கோடி ரூபாய்கள் செலவிடப்படும் என்ற கல்வியமைச்சரின் பிரச்சாரத்தாலும் "மகிந்த சிந்தனை எதிர்கால நோக்கு 2010" என்ற ஆவணத்தில் இந்த பாடசாலை அபிவிருத்தித் திட்டம் சேர்க்கப்பட்டதாகவும் குறிப்பிட்டபடியால் போட்டிப்போட்டுக் கொண்டு இந்த ஆயிரம் இடைநிலைப் பாடசாலை அபிவிருத்தி திட்டத்தில் சேர கடுமையான பிரயத்தனம் இடம்பெற்றது.

ஒரு பிரதேச பிரிவுக்கு மூன்று பாடசாலைகள் என்ற அடிப்படையில் இவை தெரிவு செய்யப்படும் என்று சொல்லப்பட்டு வலயக் கல்விக் காரியாலயங்களின் சிபாரிசுடன் பட்டியல் தயாரிக்கப்பட்டாலும் கடந்த ஆண்டு நடுப்பகுதியில் இந்த பாடசாலை தொடர்பாக பலவிதமான போராட்டங்கள் நடைபெற்றன. பெற்றார் மாணவர் வீதி மறியல் போராட்டம் அதிபர் ஆசிரியர்களை அறையில் அடைத்து வைத்துப் போராட்டம் என பலவிதமான போராட்டங்கள் நடைபெற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்மையில் ஒரு கருத்தரங்கில் அரசியல் தலையீட்டால் இத்தொகை 1,300 வரை அதிகரித்ததாக ஒரு அதிகாரி குறிப்பிட்டார். கடந்த இருபத்தைந்து வருடங்களில் இப்படி பாடசாலைகளைத் தெரிவு செய்து அமுல்நடத்தும் செயற்றிட்டம் இது முதலாவதானதாக இல்லை. "நவயோதய" என்ற வகையில் 500க்கு மேற்பட்ட பாடசாலைகள் அபிவிருத்திக்காகத் தெரிவு செய்யப்பட்டு கோடிக்கணக்கில் பணம் செலவிடப்பட்டது. பின்னர் "இசுரு" என்ற திட்டத்தின் கீழும் இவ்வாறு நடைபெற்றன.

இலங்கையில் உள்ள 9,675 அரச பாடசாலைகளில் 2010ஆம் ஆண்டுப் புள்ளிவிபரப்படி 340 தேசிய பாடசாலைகளும் இவ்வாறு மத்திய அரசாங்கத்தால் விசேட கவனிப்புக்குட்பட்டு நிதி செலவிடப்படுகின்றது. முன்னர் சொல்லப்பட்ட இரண்டு வேலைத்திட்டங்களும் எதிர்பார்த்த வெற்றியைத் தரவில்லை என்று கல்வி அமைச்சே ஒத்துக்கொள்கின்றது.

கடந்த சில வருடங்களில் 300 பாடசாலைகள் மூடப்பட்டுள்ள நிலையில் அட்டவணை - 1 காட்டப்படும் 1,592 என்ற எண்ணிக்கையைக் கொண்ட 50 மாணவர்களைக் கொண்டுள்ள பாடசாலைகள் அடுத்த சில வருடங்களில் மூடப்பட்டுவிடும் என பாராளுமன்றத்தில் கூட கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

**அட்டவணை - 01**

| மாணவர் தொகை | பாடசாலைகளின் எண்ணிக்கை |
|---|---|
| 1-15 | 284 |
| 16-50 | 1,306 |
| 51-100 | 1,455 |
| 101-200 | 1,975 |
| 201-300 | 1,135 |
| 301-500 | 1,297 |
| 501-1000 | 1,243 |
| 1001-2500 | 793 |
| 2500க்கு மேல் | 187 |

இந்த முதலாம் அட்டவணையில் உள்ள 187 அதிக மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளில் தரம் 1ல் மாணவர்களைச் சேர்க்க 55 பாடசாலைகளில்தான் கடுமையான போட்டி நிலவுகின்றது என்று கல்வி அமைச்சர் சொல்கின்றார். இவைகளில் 5,000க்கு மேல் மாணவர்களைக் கொண்ட எட்டு பாடசாலைகளும் அடங்கும். சனத்தொகையானது 2 கோடியே பத்து இலட்சத்தை நெருங்கிவிட்டாலும் அரசாங்க பாடசாலைகள் தொகையும், மாணவர்களைச் சேர்க்கும் தொகையும் கடந்த 14 ஆண்டுகளில் குறைந்து வருவதை அட்டவணை 2 காட்டுகின்றது.

**அட்டவணை - 02**

*தரம் 1ல் மாணவர்கள் சேர்தல்*

| ஆண்டு | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| 1997 | 1,86,702 | 1,77,604 | 3,64,306 |
| 1998 | 1,83,383 | 1,76,114 | 3,59,497 |
| 1999 | 1,77,218 | 1,69,876 | 3,47,094 |
| 2000 | 1,70,530 | 1,64,133 | 3,34,663 |
| 2001 | 1,68,704 | 1,63,359 | 3,32,063 |
| 2002 | 1,66,195 | 1,61,719 | 3,27,914 |
| 2003 | 1,62,126 | 1,55,680 | 3,17,806 |
| 2004 | 1,54,744 | 1,49,650 | 3,04,394 |
| 2005 | 1,62,870 | 1,57,187 | 3,20,057 |
| 2006 | 1,68,470 | 1,61,937 | 3,30,407 |
| 2007 | 1,71,646 | 1,65,533 | 3,37,179 |
| 2008 | 1,68,031 | 1,63,816 | 3,31,847 |
| 2009 | 1,70,888 | 1,65,151 | 3,36,039 |
| 2010 | 1,70,836 | 1,66,066 | 3,36,901 |

சனத்தொகையானது இந்த 14 ஆண்டு காலத்தில் அண்ணளவாக 25 இலட்சம் வரை அதிகரித்தாலும் தரம் 1இல் மாணவர் சேரும் தொகையானது சுமார் 28,000 ஆகக் குறைந்துள்ளது. இதற்கு உண்மையான, சுருக்கமான விளக்கம் என்னவென்றால் எவ்வளவு புதிய திட்டங்களைக் கல்வி அமைச்சு கொண்டு வந்தாலும் தனியார் பாடசாலைகளிலும், சர்வதேசப் பாடசாலைகளிலும் மாணவர்கள் சேர்வது அதிகரித்து வருகின்றது என்பதேயாகும். இவர்கள் வசதியுள்ள, ஓரளவு வசதியுள்ள நடுத்தர மக்களின் பிள்ளைகளாகக்கூட இருக்கலாம்.

இங்கு மூன்றாவது அட்டவணை மாகாண ரீதியாக பாடசாலைத் தரங்கள் காட்டப்பட்டுள்ளது. 'இடைநிலைப் பாடசாலை அபிவிருத்தி' என்ற இந்த எண்ணக்கருவுக்கு இப்புள்ளி விபரம் முக்கியமானதாகும்.

இந்த அட்டவணை 3ல் காட்டப்பட்டுள்ள 9,675 பாடசாலைகளில் 6,765 சிங்கள மொழி மூலப் பாடசாலைகளும், 2,910 தமிழ்மொழிப் பாடசாலைகளும் அடங்குகின்றன. இவைகளில் இரு மொழிப் பாடசாலைகளும், மும்மொழிப் பாடசாலைகளும் கூட உண்டு. மொத்தமான 2,910 தமிழ் மூலப் பாடசாலைகளில் வடமாகாணத்தில் 824 பாடசாலைகளும், கிழக்கு மாகாணத்தில் 756 பாடசாலைகளும், மத்திய மாகாணத்தில் 537 பாடசாலைகளும் உள்ளன என்பதும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கதாகும். தமிழ்மூலப் பாடசாலைகளில் 1,330 பாடசாலைகள் வட, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே உள்ளன. இது மொத்தத் தொகையில் 46 வீதமாகும்.

6½ கோடி ரூபாய்கள் ஒதுக்கீடு, பெயரிடப்பட்ட வசதிகள் என்ற இடைநிலை அபிவிருத்திப் பாடசாலைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றிய பிரச்சாரத்தால் மயங்கி இந்தத் திட்டத்தில் சேர்ந்துகொள்ள பலவகையான போட்டிகள் இடம் பெற்று வந்ததை சுட்டிக்காட்டினேன். 9,675 அரச பாடசாலைகளில் இடைநிலைப் பாடசாலைகள் என்று சொல்லப்படுகின்ற 2,725 பாடசாலைகளை மட்டுமே தெரிவு செய்து அபிவிருத்தி செய்வதால் மற்ற 6,000 பாடசாலைகளின் கதி என்னவென பலவகையான விமரிசனங்கள் எழத் தொடங்கியுள்ளன. 2009ஆம் ஆண்டு திட்டமிடப்பட்ட புதிய கல்வித் திட்டம் தொடர்பான வரைபில் ஆரம்ப பாடசாலைகள் அபிவிருத்தி தொடர்பாகவே கூடிய கவனமெடுக்கப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது. 2012ஆம் ஆண்டு மே மாதத்திற்குள் இந்தப் புதிய கல்வித் திட்ட மசோதா பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு அமுலாக்க ஆரம்பிக்கப் பட்டுவிடும் என கடந்த இரண்டு வாரங்களுக்கு முன் வெளியான செய்தி கூறுகின்றது. இந்த தேசிய கல்விக் கொள்கையில் ஆரம்ப பாடசாலைகள் தொடர்பாக கூடிய கவனம் செலுத்தப்பட்டுள்ள விடயம் உண்மைதான்.

**அட்டவணை - 03**

| மாகாணம் | 1AB | 1C | தரம்2 | தரம் 3 | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| மேல் | 164 | 266 | 593 | 315 | 1,338 |
| மத்திய | 97 | 336 | 533 | 499 | 1,465 |
| தென் | 106 | 255 | 525 | 213 | 1,099 |
| வடக்கு | 64 | 118 | 283 | 375 | 840 |
| கிழக்கு | 62 | 183 | 379 | 378 | 1,002 |
| வடமேல் | 75 | 286 | 603 | 254 | 1,218 |
| வடமத்திய | 31 | 158 | 326 | 257 | 772 |
| ஊவா | 52 | 203 | 357 | 227 | 839 |
| சப்பிரகமுவ | 61 | 208 | 485 | 348 | 1,102 |
| மொத்தம் | 712 | 2,013 | 4,084 | 2,866 | 9,675 |

கடந்த ஒருமாத காலமாக கல்வி அமைச்சர் 5000 ஆரம்ப பாடசாலைகள் அபிவிருத்தி தொடர்பாகப் பேச ஆரம்பித்துள்ளார்.

சுமார் 1,05,000 கோடிகளுக்கு மேல் துண்டு விழுகின்ற 2012 ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சுக்கு 22,994 கோடி ரூபாய்களும் கல்வி அமைச்சுக்கு 3,326 கோடி ரூபாய்களும் ஒதுக்கப்பட்டுள்ளது. மொத்தச் செலவீனத்தில் இது 1.6 வீதமாகும். இது பற்றி அறிவிக்கையில் 300 இடைநிலைப் பாடசாலைகளின் 700 ஆரம்ப பாடசாலைகளின் அபிவிருத்திக்கு 950 கோடி ரூபாய்கள் ஒதுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டது.

ஆயிரம் பாடசாலைகள் தொடர்பான பட்டியலை, மூன்று மாதங்களுக்கு முன்னர் "ரிவிர" என்ற சிங்கள வார இதழ் வெளியிட்டது. எழுத்து மூலம் எந்த ஆவணத்தையும் பெற்றுக்கொள்ளாது இருந்தவர்களுக்கு 1000 பாடசாலைகள் திட்டம் தொடர்பாக 2011.11.24 திகதியிடப்பட்ட 2011/32 இலக்கச் சுற்றறிக்கை கல்வி அமைச்சின் செயலாளர் எச்.எம்.குணசேகரவின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ளது. இந்த ஆக்கம் எழுதப்படும்வரை தமிழ்மொழியில் வெளியிடப்படாத சிங்களச் சுற்றறிக்கையை டிசம்பர் மாதம் 7ஆம் திகதியே கல்வி அமைச்சில் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தது. ஆயிரம் பாடசாலை என்ற சொல் நீக்கப்பட்டு ***"ஆரம்பப் பாடசாலை வலைப்பின்னலுக்காக இடைநிலைப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் தேசிய வேலைத்திட்டம் (2012-2016)"*** எனப் புதிய சுற்றறிக்கைக்கு, பெயரிடப்பட்டுள்ளது. ஆகவேதான் "திசைமாறும் ஆயிரம் பாடசாலைத் திட்டம்" எனத் தலைப்பிட்டு, அதற்கு தக்கவாறு இக்கட்டுரைக்கு விபரங்களைத் தொகுக்க வேண்டியதாயிற்று.

மேல்மாகாண முதலமைச்சர் இப்பாடசாலைகளுக்காக தலா இரண்டு, மூன்று ஆரம்ப பாடசாலைகளை ஊட்டல் பாடசாலைகளாகத் தெரிவு செய்யப்பட்டு அவற்றை அபிவிருத்தி செய்ய நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். வரவு செலவுத்திட்ட உரையில் 300 இடைநிலை, 700 ஆரம்ப பாடசாலைகள் அபிவிருத்தி என்று சொல்லப்பட்டது இந்த விடயத்தை உறுதிப் படுத்துகின்றது. 03.12.2011 அன்று நடைபெற்ற இப்பாடசாலை அபிவிருத்தி தொடர்பான கருத்தரங்கில் இடைநிலைப் பாடசாலை அதிபர்கள் அளித்த அறிக்கைகளின்படி 726 பாடசாலைகளே இந்தத் திட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது.

மிகக் கேள்வியுள்ள பாடசாலைகளாகக் கருதப்படும் றோயல், ஆனந்த, நாலந்த போன்ற பிரபல பாடசாலைகள் ஆரம்பத்திலேயே இந்த இடைநிலைப் பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தில் இருந்து விலகிவிட்டன. அத்தோடு சில கத்தோலிக்கப் பாடசாலைகளும் விலகத் தீர்மானித்துள்ளன. 2011/32 இலக்க ஐந்து பக்கச் சுற்றறிக்கை இப்போது வெளியாகியுள்ளதால் இனி அதனூடாக விடயங்களைப் பார்ப்பதே பொருத்தமாக இருக்கும்.

இடைநிலை என்பதற்குச் சமாந்தரமாக ஊட்டல் பாடசாலைக் குழுமத்தை அபிவிருத்தி செய்தல், தேசிய, மாகாண மட்டத்தில் ஒன்றிணைந்த மத்தியகால (2012-2016) தேசிய வேலைத்திட்டமாக இத்திட்டம் இனங் காணப்படுகின்றது எனவும், இலங்கையை எதிர்கால அறிவுக் கேந்திரமாக்க அவசியமான மனித சக்தியை உருவாக்குவதற்கு மகிந்த சிந்தனை எதிர்கால நோக்கு (2010) என்பதில் முன்மொழியப்பட்டுள்ள குணநலன் கொண்டதான பாடசாலைகளாக இவை இருக்கும் எனவும் முன்பந்தியில் சொல்லப்பட்டுள்ளது.

இதற்கான நிதி 2012ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அதனால் இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய வேலைத்திட்டம் 2012ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டன எனவும்; பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்ட விதம், நோக்கம், குறிக்கோள்கள் போன்றவையும் இந்தச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

புவியியல் அமைப்பு, பாதை வசதியும் பொது வசதிகளும், ஆரம்ப, இரண்டாம் நிலை பாடசாலைகளின் மாணவர் எண்ணிக்கை, தற்போது உள்ள வளங்கள், பாடசாலைகள் இடையே போதான இடைத்தூரம், கலாசார, சுற்றாடல் சாதனங்கள் உட்பட பல குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு ஒரு பிரதேச செயலகத்திற்குள் இரண்டு அல்லது மூன்று பாடசாலைகள் அபிவிருத்தி செய்வதற்காகவும்; அந்த இடைநிலை பாடசாலைகளுக்கு அண்மையில் 3-5 வரையிலான ஊட்டல் பாடசாலைகள் இருக்கத் தக்கதாகவும் இந்த வேலையமைப்பு அறிமுகப்படுத்தப்படுகின்றது.

இந்த தேசிய வேலைத்திட்டத்தை 2012ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ஆரம்பித்து மத்தியகால அபிவிருத்தி செயல்திட்டமாக 2016 ஆண்டு வரை தொடர்ந்து அதனூடாக 1000 இடைநிலை பாடசாலைகளையும் 5,000 வரையிலான ஆரம்ப பாடசாலைகளையும் அபிவிருத்தி செய்தலே இந்த வேலைத்திட்டத்தின் எதிர்ப்பார்ப்பாகும்.

பின்வரும் மூன்று வகையாக இந்த திட்டத்திற்காகப் பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

**முதலாவது தொகுதிப் பாடசாலைகள்**

2011 வருடம் வரை 1-13 அல்லது 1-11 வரை தரங்களுடன் நடத்தப்பட்ட (1AB, 1C, 2) ஆனால் 2012 ஆம் ஆண்டில் இருந்து முதலாம் தரத்திற்கு பிள்ளைகளைச் சேர்க்காத நடைமுறையைப் பின்பற்றி ஆரம்பப் பிரிவை நீக்குவதால் இடைநிலைப் பாடசாலையாகும் பாடசாலை வகைகள்.


**இரண்டாவது தொகுதிப் பாடசாலைகள்**

தற்போது ஆரம்பப் பிரிவு வகுப்புக்கள் இல்லாத 6-13 வரை தரங்கள் உள்ள 1AB, 1C பாடசாலைகள்.

**மூன்றாவது தொகுதிப் பாடசாலைகள்**

2011 ஆம் வருடம் 1-11 அல்லது 1-13 வரை தரங்களுடன் நடைபெறும் (1AB, 1C, 2) ஆனால் 2012ஆம் வருடத்தில் 1-5 வரையிலான சகல ஆரம்பப் பிரிவு வகுப்புக்களையும் ஒரே முறையில் வேறு பாடசாலையாக மாகாண சபையின் பதிவுக்கேற்றதாக இடைநிலைப் பாடசாலையாகும் வகையில் திட்டமிடப்படும் பாடசாலைகள்.

இந்த மூன்று அடிப்படையில் இந்த வேலைத் திட்டத்தைச் செயல்படுத்தும் போது பாடசாலை அதிபர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள், மாகாண கல்விச் செயலாளர் கள், தேசியப் பாடசாலை இணைப்புக் கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோர் செயல்படுத்த வேண்டிய நடைமுறைகள்



ளாவும் இந்தச் சுற்றறிக்கையில் மூன்று வகையான தொகுதிப் பாடசாலைகளுக்கும் விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

2011.12.31க்குள் மூன்றாம் தொகுதிப் பாடசாலைகள் மாகாண ஆரம்பப் பாடசாலையாகப் பதிவு செய்ய வேண்டும். அத்தோடு சகல "இசுரு" பாடசாலைகளும் மேல்சொல்லப்பட்ட தேசிய வேலைத்திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும்.

2012-2016 காலத்திற்கான ஐந்தாண்டு செயல்திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அதனூடாகவே சகல வேலைத்திட்டங்களும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இந்த வேலைத்திட்டத்தின் கீழ் இடைநிலை பாடசாலையாக அல்லது ஆரம்ப ஊட்டல் பாடசாலையாக சேர்த்துக்கொள்ளப்படாத பாடசாலைகள் விடயத்தில் விசேட கவனமெடுத்து, பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட வேலைத்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி வழிமுறையை கல்வி அமைச்சும் மாகாண கல்விப் பொறுப்பாளர்களும் அறிமுகப்படுத்த வேண்டும். இவ்வாறான பிரதேசங்களில் உள்ள சில பாடசாலைகள் விடயத்தில் கூடிய கவனமெடுக்கப்பட வேண்டும்.


இவ்வாறு சுற்றறிக்கையில் பூரண விளக்கமளிக்கப்பட்டுள்ளது. ஆரம்பப் பாடசாலைகளான ஊட்டல் பாடசாலைகளின் மாணவர் தொகை முழுவதையும் இந்த ரீதியில் அபிவிருத்தி செய்யப்படும் பாடசாலைகளில் சேர்த்துக் கொள்ள முடியுமா? என்பது பிரதான கேள்வியாகும்.

புலமைப்பரிசில் வெட்டுப்புள்ளி அடிப்படையில் 6ம் தரத்தில் பிள்ளைகளைச் சேர்க்கும் பாடசாலையாக, இந்த அபிவிருத்தி செய்யப்படும் இடைநிலைப் பாடசாலைகள் இருந்தால் வகுப்புக்களை அதிகரிக்க வேண்டிய நிலை உண்டாகும். அல்லாவிட்டால் ஊட்டல் பாடசாலை மாணவர்களுக்கு இடவசதி தேடுவது பெரும் பிரச்சனையாகிவிடும்.

அத்தோடு கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தன இப்பாடசாலைகளுக்கு ஆளணி தொடர்பாக விசேடமாக அதிபர் நியமனம் தொடர்பாக ஊடகங்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தெரிவிக்கும் கருத்துக்களும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும். இதற்கான விண்ணப்பங்களும் கோரப்பட்டுள்ளன. 500 கல்வி நிருவாகச் சேவையைச் சேர்ந்தவர்கள் நியமிக்கப்படுவார்கள் என அமைச்சர் தெரிவிக்கின்றார். ஆனால் இலங்கையில் உள்ள 9 மாகாணக் கல்விக் காரியாலயங்களிலும்; 94 வலயக் கல்விக் காரியாலயங்களிலும் கூட கடமையாற்ற போதுமான கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்த அதிகாரிகள் இல்லை. பாதிக்கு மேல் பதில் கடமை பார்க்கின்றவர்களாகவே உள்ளார்கள். இவர்கள் தம்மை நிரந்தரமாக்குமாறு கல்வி அமைச்சுக்கு முன்னால் கடந்த சில வாரங்களாக உண்ணாவிரதப் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

கல்வி நிர்வாக சேவையின் புதிய பிரமாணக் குறிப்பின்படி அதாவது தற்போது வரையில் உள்ளதன்படி மொத்த ஆளணி 2,396 ஆகும். இதில் முதலாம் வகுப்பு அதிபர்களாக 50 பேர்களும்; இரண்டாம் வகுப்பு அதிபர்களாக 75 பேர்களும்; மூன்றாம் வகுப்பு அதிபர்களாக 200 பேர்களுமே இருக்க முடியும். தற்போது அமுலில் உள்ள 1235/32 இலக்க அதிவிசேட வர்த்தமானப் பிரமாணக் குறிப்பின்படி 1,763 மொத்த ஆளணி ஆகும். இதில் அதிபர், பிரதி அதிபர் பதவிக்காக 871 ஆளணிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. கடந்த சில வருடகாலமாக தேசிய பாடசாலை 341 அதிபர் பதவிகளில் 87 வெற்றிடங்கள் நிரப்பப்படாதுள்ளன. 2011.11.02 அன்று இதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விஞ்ஞான, கணித, ஆங்கில, தொழில்நுட்ப பட்டதாரி நியமனம் வடக்கு, கிழக்கிற்கு வெளியேயுள்ள பாடசாலைகளில் விசேடமாக தமிழ்மொழி மூலப்பாடசாலைகளில் என்றுமே பூரணமாக நிரப்பப்பட்டது இல்லை. நியமிக்கப்படும் ஒரு சிலர் கூட சில மாதங்களில் அல்லது ஒரு சில ஆண்டுகளில் இடமாற்றம் பெற்று சென்று விடுகின்றார்கள்.

3172 வெற்றிடங்கள் இப்பொழுது பாடசாலை தற்போது அழகியல் பட்டதாரிகள் பெரும்பாலானவர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது. கொழும்பில் உள்ள பிரபல பாடசாலையொன்றில் கூட முதலாம், இரண்டாம் வகுப்புகளில் கல்வி கற்பிக்கின்றார்கள்.

இவ்வாறு பல விடயங்கள் தொடர்பாக விபரித்துக் கொண்டு செல்லலாம். இது தொடர்பாக கலந்துரையாடல்களிலும், விளக்கக் கூட்டங்களிலும் எண்ணற்ற பிரச்சினைகள் முன்வைக்கப்பட்டன. பல வினாக்களுக்கு அதிகாரிகள் கூட பதிலளிக்க முடியவில்லை. முதலில் ஆயிரம் இடைநிலைப் பாடசாலைகள் அபிவிருத்தி செய்தல் என்ற விடயம் இன்று ஊட்டல் பாடசாலைகளான ஆரம்ப பாடசாலைகளையும் இணைத்து திசைதிருப்பியுள்ளது.

எம்மிடையே புதிய திட்டம் எதையும் சார்பாக நோக்கும் தன்மை குறைவாக இருந்தாலும் அதிகாரிகள் அல்லது அமைச்சர் சொல்வதை தெய்வ வாக்காகக் கொண்டு இருக்கத் தேவையில்லை. இந்த விடயத்தில் தமிழ்மொழி கல்வியியலாளர்களும் தமது கருத்துக்களை பகிரங்கமாகத் தெரிவிக்க வேண்டும்.

பாடசாலைகளில் வகுப்பறைக் கல்வியின் குணநலன்களையும், தரத்தையும் அதிகரித்து பிரத்தியேக கல்வியை நம்பியிருக்கும் தன்மையை அகற்ற அரசு உளப்பூர்வமாக நடவடிக்கை எடுக்குமானால் அதனைப் பின்பற்றவே வேண்டியிருக்கும்.


இந்தப் புதிய பாடசாலை அபிவிருத்தி திட்டம் உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படவுள்ளதாகச் சொல்லப்படுகின்றது. இந்த தேசிய செயல்திட்டம் "நவோதய", "இசுரு" போன்ற செயற்திட்டங்களைப் போன்று பல்லாயிரம் கோடிகளை விழுங்கி வெள்ளை யானையாகாமல், எந்தப் பாகுபாடும் காட்டாமல், சரியாகத் திட்டமிட்டு, உள்ள பிரச்சனைகளை இனங்கண்டு, உள்ளீடுகளைச் சரியாகப் பயன்படுத்தி வெற்றி காணவேண்டும் என்பதே கல்வியியலாளர்களின் எதிர்பார்ப்பாகும்.



ஜெய்ன் ஸபீத்திக்

# ஐந்தாம்தர புலமைப்பரிசில் பரீட்சை:

## சாத்தியமான மாற்றங்கள் தேவை



அறிவின் நீள ஆழங்கள் முடிவிலியாய் நகர்ந்து நாளுக்கு நாள் கல்விச் சமூகத்தின் அடைவு மட்டம் உச்ச மாற்றங்களை நோக்கி வளர்ச்சி கண்டு வருகிறது. எவ்விடயமாலும் நேர்த்தியான ஓர் ஆரம்பமிருக்க வேண்டும். அப்போதுதான் விளைவு ஆரோக்கியமானதாக இருக்கும். பகுத்தறிவின் பரிணாமத்தைக் கொண்டே இவை பூரணப்படுத்த முடியும். அறிவானது விவேகம், சிந்தனாசக்தி, தியாகம் என்பவற்றால் வார்த்தெடுக்கப்பட்டதொன்று. அதன் வெளிப்பாடு திருப்தியாக அமையும்போதே சமூகத்தில் அது அறிவாகக் கணிக்கப்படும். இந்நிலை சில வேளைகளில் இல்லாது போகுமிடத்து "படித்திருந்தும் பயனில்லை" எனும் சொல்லாடல்களால் நிந்திக்கப்படும்.

பண்பாடும், விழுமியமும் ஒரு தலைமுறையிலிருந்து அந்தண்டவனத்தில் பிரயாணிக்கும் புகையிரதத்தைக் கல்வியாகவும் எடுத்துக் கொள்ளலாம். அறிவு ஜீவியிடம் பண்பாடும் விழுமியமும் சரிந்து விடுமானால் அப்போது அவன் கற்ற கல்வியும் விபத்தினை நோக்கியே செல்லும்.

பொதுக் கல்வியை ஆரம்பக் கல்வி, இடைநிலைக் கல்வி, சிரேஷ்ட இடைநிலை என மூன்று வகையாக நோக்கலாம். ஒரு மாணவன் பதின்மூன்று வருடங்கள் பாடசாலையில் பெறும் கல்வியே பொதுக் கல்வியாகும். இதனூடாக மூன்று தேசிய பரீட்சைகளை மாணவர்கள் சந்திக்க நேரிடும். ஆண்டு ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை, க.பொ.த(சா/த), (உ/த) போன்ற பரீட்சைகளாகும்.

ஒரு நாட்டிலுள்ள பாடசாலைகள் மூலம் சிறந்த பண்பாட்டுச் சமூகத்தை உருவாக்குவதே கல்விச் சேவையின் மிகப் பிரதான இலக்காகும். இந்நிலையை ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது இலங்கை மிகக் குறைந்த வீதங்களையே காட்டியுள்ளது. எமது நாட்டிலுள்ள தரம் - 05 புலமைப் பரிசில் பரீட்சை நாடு முழுவதும் கல்வியியலாளர்களிடத்தில் பல்வேறு வாதப் பிரதிவாதங்களை ஏற்படுத்தியிருக்கிறது. இருப்பினும் மாணவர்களை நாட்டிலுள்ள புகழ் மிக்க பாடசாலைகளில் கற்பதற்கான அனுமதியை வழங்கும் தரப்படுத்தலுக்காக இப்பரீட்சையை தொடர்ந்தும் அரசாங்கம் முன்னெடுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வருகின்றது. அத்தோடு அரச பாடசாலைகளில் தரக் கணிப்பீட்டில் கருத்திற்கொள்ளப்படும் மிகமுக்கியமான குறிகாட்டியாகவும் இப்பரீட்சை அமைந்துவிடுகின்றது.

**தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையும் மாணவர்களும்**

பொதுவாக முஸ்லிம் மாணவர்கள் முதலாம் தரத்திற்குச் சேர்வதற்கு முன்னர் குர்ஆன் மத்ரஸாக்களுக்குச் சேர்க்கப்படுவது வழமை. சில பெற்றோர் தரம் ஒன்றிலிருந்து இப்பரீட்சைக்காக தயார்படுத்தி வருகின்றார்கள். ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற வேண்டும் என்பதற்காக குர்ஆன் மத்ரஸாவை மூன்று அல்லது நான்காம் தரத்திற்குள் பூரணப்படுத்த வேண்டும் எனும் வன்மையான போக்கை பெற்றோர்கள் கடைப் பிடிக்கின்றார்கள்.

சிறு வயதிலிருந்து மாணவர்கள் "அதிசுகற்றல்" எனும் வலைக்குள் உட்படுத்தப்பட்டு மனத்தாக்கங்களுக்கும், அழுத்தங்களுக்கும் உள்ளாக்கப்படுவதால் பிள்ளைப் பருவத்தின் சுகங்கள் சுரண்டப்படும் நிலை பெருமளவும் காணப்படுவதுடன் இவர்களது உள நலன் பாதிப் படைகின்றது. பெற்றோர், ஆசிரியர் பாடசாலைகளின் இலக்குகளை அடைவதற்காக இச்சிறார்களைப் பலியாக்குவது மிகவும் கவலைக்கிடமானதொன்று.

அதிகாலையில் எழுந்து தத்தமது கடமைகளை முடித்துக்கொண்டு பாடசாலை ஆரம்பிப்பதற்கு முன் பாடசாலைக்குச் செல்லும் ஐந்தாம் தர மாணவர்களுக்கு காலை ஆறு மணிக்கு வகுப்புக்கள் ஆரம்பமாகி விடுகின்றன. தொடர்ந்தும், புலமைப்புதிர், புலமைக்கதிர், செயலட்டை, புலமைச்சுடர் எனும் பல்வேறு பெயர்களால் அழைக்கப்பட்டு வரும் பரீட்சை வேட்டைகள் ஆரம்பமாகி விடுகின்றன. பாடசாலை முடிந்தவுடன் மதியச் சாப்பாடுதான் தாமதம், மறுபடியும் மாலை மூன்று மணிக்கு வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன. சில இடங்களில் அவ்வகுப்புக்கள் இரவு ஒன்பது மணி வரைக்கும் நீண்டு செல்லும் நிலையும் உள்ளது.

புலமைப் பரிசில் பரீட்சை எனும் பெயரில் பாடசாலைகளுக்கும் வெளி ஆசிரியர்களுக்குமிடையே பல்வேறு வணிக முனைமைகள் நடைபெற்று வருகின்றன. கோல் எடுத்தவர்கள் எல்லாம் சண்டைக்காரர்களாவது மாதிரி புலமைப் பரிசிலை சாக்காக வைத்து தேவையற்ற நூல்களும், வினாப்பத்திரங்களும், ஒரு நாள் கருத்தரங்குகளும் பூதாகரமாக வெடிக்கின்றன. இவ்வாறான கடுமையான கற்றல் - கற்பித்தல் முன்னெடுப்புக்களால் மாணவர்கள் பரீட்சைக்குத் தேறுவார்கள் என்பது ஒரு பக்கம். அம்மாணவர்கள் மன அழுத்தங்களுக்கு உட்படுவதும், அது தொடர்பான சமூகவியல் பிரச்சினைகள் வேறுபடுவது இன்னொரு பக்கமாகும்.

கடந்த 2008ஆம் ஆண்டு நடைபெற்ற முதலாம் வினாத்தாள் வழமைக்கு மாறாக மூன்று தெரிவு விடைகளுக்குப் பதிலாக நான்கு தெரிவு விடைகளைக் கொண்டிருந்தது. இது நேரத்தை விழுங்கக்கூடியது. வினாக்களின் கட்டமைப்பு மிகக் கடினமானதாக சிறார்களின் உளவளத்தைப் பாதிக்கும் விதத்தில் விடையைத் தெரிவு செய்ய முடியாத நிலைக்கு இட்டுச் செல்கின்றது. ஆரம்ப வினாக்கள் பெரியவர்கள் கூட விடையளிக்க முடியாததாக மிகக் கடினமானவையாக இருந்தன. மாணவர்களின் உள வளத்தை மிஞ்சிய பெரும்பாலான வினாக்கள் அமைந்திருந்தன.

பரீட்சை மண்டபத்தில் பல மாணவர்கள் அழுத வண்ணம் விடைத்தாள்களைக் கொடுக்காது அவற்றின் மீது தலைவைத்துப்படுத்த சம்பவங்கள், பரீட்சை முடிந்ததும் மூன்று நாட்கள் வரை அழுத மாணவர்கள் பலர். எனவே கல்வி அமைப்பின் பல தவறுகளும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சினைகளும், பொருத்தமின்மைகளும் பொதிந்து காணப்படுவது வெளிப்படையாகத் தெரிகின்றது. இவைகளைக் கவனத்திற்கொள்ளாமல் இருக்கும் கல்வி அமைச்சு ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் மாற்றங்களை ஏற்படுத்த முன்வர வேண்டும்.

"தேசிய மட்டத்திலான ஐந்தாம் தரக் கல்வி வழங்கீட்டினையும், பரீட்சை விளைவுகளையும் அறிகைத் தளத்திலும் விரிவான ஆய்வுக்கு உட்படுத்த வேண்டிய தேவை மேலெழுந்துள்ளது. அதனை செவ்விதாகச் செய்யத் தவறுமிடத்து இந்நாட்டின் ஆரம்பக் கல்வியில் விளைவாக உள நெருக்குவாரத்திற்குள்ளான சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதைக் கட்டுப்படுத்த முடியாதிருக்கும்" *(பேராசிரியர். சபா.ஜெயராசா, 2009)*

இன்னும் இக்கல்விச் சமூகம் நியூட்டனின் மூன்றாம் விதியை விளங்காமலிருப்பது மிகவும் வேடிக்கையான ஒன்றாகவே இருந்து வருகின்றது. பாடசாலைகள் தன் முனைப்புச் சிந்திப்பதை விட பின்புலத்தாக்கங்களை அறிந்து தத்தமது நோக்கங்களை நடைமுறைப்படுத்துவது நல்லது.

**தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையும், ஆசிரியர்களும்**

தமது கல்விக் கோட்டத்திலுள்ள ஏனைய ஆரம்பப் பிரிவு பாடசாலைகளை விட எமது பாடசாலையின் தரம் இப்பரீட்சையின் மூலம் உயர்ந்திருக்க வேண்டும் என்பதற்காகவும், அதிபரின் நல்லாசிகளையும், மதிப்பையும், மரியாதையையும் காப்பாற்றிக்கொள்ள வேண்டும் என்பதற்காகவும் வழக்கமாக செயற்பட்டு வருகின்றவர்களே ஆசிரியர்கள். "ஆடு கொழுத்தால் இடையனுக்கு அழகு" என்று நினைக்கும் அதிபர்களாலும் இந்நிலையைக் கட்டுப்படுத்த முடியாது. அதிபருக்கு மேல் கோட்டக் கல்வி அதிகாரி, அதற்கு மேல் வலயக் கல்விப் பணிப்பாளர் இருக்கின்றார். எனவே ஒருவருக்கொருவர் ஐக்கியமாகவும் முகமுடைத்துக் கொள்ளாமல் இருக்க வேண்டுமானால் புலமைப் பரிசில் பரீட்சையின் அடைவு மட்டங்களை அதிகரிக்கச் செய்வதை விட வழி தெரியவில்லை.

இக்கால கட்டத்தில் ஆசிரியர்களுக்கும் பல்வேறு வேலைப்பளுக்களும் பல சிக்கல்களும் அதிபர், கல்வி நிருவாகிகள் கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொல்வதும், நாளை என்ன கற்பிக்க வேண்டும் என்பதற்கான பாடக் குறிப்பு பாடத்திட்டம் போன்றவற்றைத் தயார் செய்தல், சொந்தப் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவதற்காக தயார் செய்தல், சுயமாகவே நடைபெறும் பரீட்சைத் தாள்களைத் திருத்துதல், அடிக்கடி பாடசாலைக்கு விஜயம் செய்யும் ஆசிரிய ஆலோசனைக் குழுவின் மேற்பார்வைக்குத் தயாராகுதல், அதிபரின் உள்ளக மேற்பார்வை (Internal supervising) போன்ற அழுத்தங்களுக்கு மத்தியில், ஆசிரியர்கள் இதனோடு இணைந்ததாகவே மாலை நேர, இரவு வகுப்புக்களையும் நடாத்தி வருகின்றார்கள். இவ்வாறு இயங்கும் ஆசிரியர்கள் மகத்துவமிக்கவர்கள் என்று சொல்வதை விட வேறொன்றுமன்று.



பாடசாலையின் தரம் ஐந்தின் பல வகுப்புக்கள் இருந்தால் அவர்களிடத்திலும் பலத்தபோட்டி நிலவும். சில வேளை ஒருவரை ஒருவர் கற்பித்தலில் மிகைத்துவிட்டால் போட்டி பொறாமையாகவும் உருமாறிவிடுகிறது. மற்றும் தேவையற்ற ஓர் அவசியத்தை மாணவர் மத்தியில் திணிப்பதால் யார் யாருக்கோ எல்லாமே பிரச்சினைகள் ஏற்பட்டு விடுகின்றன.

ஐந்தாம் தரத்தில் கற்பிக்கும் ஆசிரியர்களின் பெரும்பாலானோர் இரவு பகலாக கற்பிக்க ஆயத்தம் செய்தல், கற்பித்தல் என கடுமையாக உழைக்கின்றார்கள். பொழுது போக்கு, தம் குடும்பத்தில் நடைபெறும் நிகழ்வுகளில் கூட கலந்துகொள்ளாமல் பல்வேறு பிரயத்தனங்களை செய்து புலமைப் பரிசில் பரீட்சையின் பெறுபேறு வெளிவரும் நிலையில் அதிபர், பெற்றார், ஏனைய ஆசிரியர்கள், அதிகாரிகள், ஊடகத்துறையின் பார்வைகளுக்கும், விமர்சனங்களுக்கும் உள்ளாகி மன அழுத்தத்திற்கும் ஆளாகவேண்டியுள்ளது. அதேவேளை சித்தியடைந்த வீதம் அதிகரிக்குமாயின் அதிபர், பெற்றார் சந்தோசத்தில் மிதக்கின்றார்கள். சித்திபெறத் தவறிய மாணவர்களின் பெற்றார் ஆசிரியர்களையே குறைபட்டுக் கொள்வதைக் காணலாம். கற்றுக்கொடுத்த ஆசிரியர்களை நன்றி உணர்வுடன் நினைவுகூரும் தன்மையும் மாறு போகின்றது.

**ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையும், பெற்றாரும்**

தனது பிள்ளைக்கு புகழ்மிக்க பாடசாலையின் அனுமதி வேண்டும், அதற்கான தகுதியைப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெறுவதன் மூலம் பூரணப்படுத்திக் கொள்ள முடியும் என்ற பேராவலில் பெற்றோர் தமது பிள்ளைகளைத் தயார் செய்கின்றனர். அடுத்தவர்களிடமிருந்து மதிப்பும், கௌரவமும் கிடைக்க வேண்டும் என்றும், இன்னும் சிலர் தனது பிள்ளை இப்பரீட்சைக்குத் தோற்றி சித்தியடையாவிட்டால் தமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுயகௌரவத்திற்கு இழுக்காகிவிடும் என்பதற்காகவும் எப்படியாயினும் பரீட்சையில் எமது பிள்ளை சித்திய டைந்து விட வேண்டும் எனும் நோக்கில் திட்டமிட்டு செயற்பட்டு வருகின்றார்கள்.

இதனால் தமது பிள்ளைகளை ஒரு இயந்திரம் போன்று சுழற்றுகின்றார்கள். அதிகாலையில் நித்திரை விட்டு எழும்பச் செய்து அவர்களுக்குப் பின்னாலேயே நின்று பல்துலக்குவதில் இருந்து பாடசாலைக்குக் கொண்டு செல்லும் வரையான கடமைகளை செவ்வனே செய்து முடிப்பதோடு மாலை நேர வகுப்புக்களுக்காக பிள்ளைகளைத் தயார்படுத்தல், வாகனங்களில் ஏற்றிச் சென்று வீடு சேர்த்தல் போன்ற விடயங்களில் அளவு கடந்த ஆர்வலர்களாக மாறிவிட்டார்கள். இவ்வாறு தொடர்த்தேர்ச்சியாக மாணவர்களை சுழற்சி முறையில் பாடசாலை, பின்நேர வகுப்பு, கருத்தரங்குகள் என்று வாட்டி எடுப்பதனால் அவர்களுடைய பிஞ்சு உள்ளங் கள் மிகவும் பாதிக்கப்படுகின்றனர்.

பத்து வீதமான மாணவர்கள் இப்பொறிமுறைக் கற்றலுக்கு தம்மை இசைவாக்கிக் கொண்டாலும் மீதி யாகவுள்ள 90 வீதமான மாணவர்களுக்கு சுமையாகவே இப்பரீட்சை முறை மாறியுள்ளன என்பதை பல்வேறு ஆய்வாளர்களின் கருத்துக்கள் மூலம் அறிய முடிகிறது. 2011ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் வவுனியாவில் இடம்பெற்ற சம்பவம் வருமாறு:

தாயும், தந்தையும் ஒரு மாணவனை தொடர்த் தேர்ச்சியாக கற்றலுக்குள் தினமும் பிரயோகித்ததால் அந்த மாணவனுக்குப் புள்ளிகள் பூச்சியமாகவே ஆகின. ஆனால் வழமையாக வகுப்பில் கூடிய புள்ளிகளைப் பெறுகின்ற ஒரு மாணவனாகவே அவன் காணப்பட் டான். இவர்களின் இம்சை தாங்கமுடியாமல் பரீட்சைக் குத் தோற்றியிருந்தும் எந்த வினாக்களுக்கும் விடையளிக் காமல் விட்டு விட்டான். இதற்கான காரணத்தை ஆசிரி யர்கள் கேட்டறிந்த போது எனது தந்தையும், தாயும் என்னைக் கஷ்டப்படுத்தி ஓய்வில்லாமல் தொடர்ந்தும் படிக்கச் செய்ததால் அவர்களுக்குச் சரியான பாடம் புகட்டுவதற்காகவே நான் எந்த வினாக்களுக்கும் விடையளிக்கவில்லை என்று கூறினான். இவ்வாறு மாணவர்களை ஒரே "படி படி" என்று திணிக்கும் பெற் றோர்களுக்கு இச்சம்பவம் நல்லதோர் எடுத்துக்காட் டாகும்.

**முடிவுரை**

இலங்கையில் காணப்படும் ஆரம்பக் கல்வியின் ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையானது பல திறத் தாரிடத்திலும் கல்வியியலாளர்களாலும் பலவித வாதப் பிரதிவாதங்களுக்கு உட்பட்டு வருகின்றது. இப்பரீட்சை மாணவர் மீது மிதமிஞ்சிய அறிவுச் சுமையை ஏற்படுத்து வதாகவும் அவர்களின் உள நலனை கருத்திற்கொள்ளாது செயற்படுவதாகவும் பிஞ்சு மனங்களின் விருப்பு, வெறுப்புக்களுக்கு விரோதமாகவும் காணப்படுகின்றது.

இப்பரீட்சையை தொடர்ந்தும் நடாத்துவது குறித்து கலந்துரையாடல்களுக்கும், கருத்து மோதல்களுக்கும் மத்தியில் இப்பரீட்சையை தரம் எட்டிற்கு நகர்த்துவதா? என்ற ஆலோசனைகளும் உயர்கல்வி நிருவாகிகளிடம் இடம்பெற்று வருகின்றன. எவ்வாறாயினும் எமது சமூகம், குறித்த இப்பரீட்சையில் ஏதோ ஒரு வகையில் அடைவு மட்டங்களை அதிகரிக்க வேண்டியுள்ளதும் காலத்தின் தேவையாகவுள்ளது.

**3179 மலையக ஆசிரியர் நியமனம்**

**22ம் பக்கத் தொடர்ச்சி...**


- சில பாடசாலைகளில் 3179 ஐ சேர்ந்த ஆசிரியர்கள் புலமைப்பரிசில், க.பொ.த சா/தரம் ஏன் க.பொ.த உ/தரம் போன்ற பிரிவுகளில் கணிசமான பாட அடைவை உயர்த்தி உள்ளனர் என்பதற்கு பல சான்றாதாரங்கள் உள்ளன.
- பல்வேறு துறைகளிலும் ஈடுபாடு கொண்டிருந் தோர், தொழில் செய்தோர் ஆசிரியர் தொழிலுக்கு உள்வாங்கப்பட்டனர். இதனால் பாடசாலைக்கு "நல்ல வளமான" ஆசிரியர்கள் இனங் காணப்பட் டுள்ளமை குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றாகும்.
- பத்து வருட சேவை என்பது மிகு பின்தங்கிய பாட சாலைகளுக்கு சாதகமான நிலையாகும்.
- மலையகம், மலையக பாடசாலை என்ற உணர் வினைத் தட்டி எழுப்பிட இப்பாரிய 3179 நியமனம் ஓர் அதிர்வலையாகத் திகழ்ந்தது எனில் எவரும் மறுப்பதற்கில்லை.

எது எவ்வாறெனினும் 3179 மலையக ஆசிரியர் நியமனம் என்பது மிகச் சாதாரணமாக நடந்துவிட வில்லை என்பதும் அதன் பெறுமதி சமூக ரீதியில் மிக உயர்ந்தது என்பதும் மேலும் ஆழமாகச் சிந்திக்கப்பட வேண்டிய ஒன்றாகும். ஆசிரியர் பயிற்சியின் பின்னர் தற்போது மேலும் இவர்களிடம் மலையகச் சமூகம் நிறையவே எதிர்பார்க்கின்றது. யாவருக்கும் தரமான கல்வியை வழங்கும் பெரும் பொறுப்பு இந்த ஆசிரியர் களுக்கு உண்டு. ஆகவே தமது தகுதிகளை படிப்படியாக உயர்த்தி வாண்மைச் சிறப்பு மிக்க ஆசிரியர்களாக உருவாவது காலத்தின் தேவையாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிவரதன்



# 3179 - மலையக ஆசிரியர் நியமனம்

மலையக பாடசாலைகளுக்கான ஆசிரியர் நியமனம் தொடர்பாக காலத்துக்குக் காலம் குரல் எழுப்பப் பட்டு நியமனங்கள் வழங்கப்பட்டு வந்துள்ளன. குறிப்பாக "402" எனப்படும் நியமனத்தில் ஆரம்பித்து பின்னர் பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கான (P.S.E.D.P) நியமனம் என்னும் திட்டத்தின் கீழும் ஆசிரியர் நியமனம் பெற்றனர்.

இதன் முதலாவது பயிற்சிநெறி 1968இல் ஆரம்பிக்கப்பட்டது. இப் பயிற்சிக்கான ஆசிரியர்கள் க.பொ.த சா/தரத் தகைமையுடன் தெரியப் பட்டனர். இவர்களுக்கு ஒரு சேவை முன்பயிற்சிநெறி வழங்கப்பட்டது. இந்த நியமனங்களின் தொடர்ச்சி யாகவே "3179 ஆசிரியர்" நியமன மும் வழங்கப்பட்டது.

3179 நியமனம் வழங்கப்பட்டு ஏறக்குறைய நான்கு வருடங்களின் பின்னர் அதனைப் பற்றிப் பார்க்கின் றோம். இந்நியமனம் தொடர்பாக சில விடயங்களைச் சுட்டிக்காட்ட லாம்.

- இலங்கையில் முதன் முறையாக பிரதேச செயலாளர் பிரிவில் குறித்த ஒரு தோட்டத்துறையி லுள்ள பாடசாலைகளில் காணப் படும் வெற்றிடங்களுக்கு ஏற்ப ஆசிரியர் கோரப்பட்டனர்.
- குறித்த பிரதேசத்தில் குறைந்தது 5 வருடங்கள் நிரந்தரமாக வசித்தவராகி (தோட்டத் துறை யைச் சார்ந்தவராக) இருத்தல் வேண்டும்.
- க.பொ.த சா/தரப் பரீட்சையில் இந்துசமயம் அல்லது றோமன் கத்தோலிக்கச் சமயம் அல்லது கத்தோலிக்க சமயம் ஆகிய பாடங்களில் யாதாயினும் ஒரு பாடத்தில் சித்தியடைந்தவராக இருத்தல் வேண்டும்.
- ஒழுக்கம் மற்றும் சிறந்த உடல் ஆரோக்கியம் கொண்டவராக இருத்தல் வேண்டும்.
- 2005 ஏப்ரல் 30ஆந் திகதியன்று 18 வயதிற்கு குறைந்தவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராக வும் இருத்தல் வேண்டும்.

மேற்குறித்தவாறு இவ்வாசிரியர் நியமனத்திற்கான பொதுத் தகைமை கள் கேட்கப்பட்டிருந்தன.

கல்வித் தகைமைகளின் அடிப்படையில் ஆரம்பக் கல்வி, விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம் ஏனைய பாடங்கள் யாவற்றிற்கும் 2004.12.31க்கு முன்னர் தமிழ்மொழி மூலம் க.பொ.த உ/தரப் பரீட்சையில் சித்தி அடைந்திருக்க வேண்டும் எனக் கோரப்பட்டிருந்தது.

மேலும் தெரியப்படும் ஆசிரிய நியமன வகைக்குட் படும் பாடத்தில் க.பொ.த சா/தரத்தில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் எனக் கோரப்பட்டது. அதேவேளை க.பொ.த உயர்தரத்தில் யாதாயினும் ஒரு பாடத்துறையில் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும் எனவும் கூறப்பட்டிருந்தது.

எனவே 3179 நியமனம் என்பது, தோட்டத் தொழி லாளர்களின் பிள்ளைகளின் கல்வி முரண்பாடுகளை நீக்கி சமமான சந்தர்ப்பம் வழங்கும் நோக்கில், தோட்டத் துறையில் அமைந்துள்ள தமிழ் பாடசாலைகளுக்காக பாட சாலையை அடிப்படையாகக் கொண்டு ஆசிரியர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான நோக்கினை அடிப்படையாகக் கொண்டதெனில் தவறில்லை. எனினும் இந்நியமனம் பின் வரும் சில குறைபாடுகளைக் கொண்டி ருந்தன. அவை:

- சமயம் பிரதான பாடமாக கொண்டிருந்தாலும் இஸ்லாம் இதில் உள்ளடக்கப்படாதிருந்தமை. (இது நீதிமன்றத் தீர்ப்பின் பின்னர் தீர்க்கப்பட்டது)
- குறித்த ஒரு பாடத்திற்கான நியமனம் எனும்போது க.பொ.த உயர்தரத்தில் குறித்த அத்துறை தொடர் பாக விசேட கவனம் குவிக்கப்படாமை.

*உ-ம் 1:* ஆரம்பக்கல்விக்கான ஆசிரியர் நியமனம் பெறும் ஒருவர் க.பொ.த உயர்தரத்தில் யாதேனும் ஒரு துறையில் சித்தி அடைந்திருந்தால் போதுமானது என்றது.

*உ-ம் 2:* விஞ்ஞான பாடத்தில் க.பொ.த சா/தரத்தில் திறமைச் சித்தி குறைந்தபட்ச தகுதியாக கொள்ளப் பட்டது. இதேவேளை குறித்த பரீட்சார்த்தி க.பொ.த உ/தரத்தில் கலைப்பிரிவில் சித்தி பெற்றிருந்தமை நியமனம் பெறத்தகுதி பெற்றதாகக் கருதப்பட்டது.

இதேவேளை குறித்த வேறொரு விண்ணப்பதாரி க.பொ.த உயர்தரத்தில் விஞ்ஞானப் பிரிவில் இரண்டு பாடங்களில் சித்தி பெற்றிருந்தாலும் உயர்தரத் தினை பூரணப்படுத்தாமையால் இந்நியமனத்தை இழந்தமை.

- வெறும் திறமைச்சித்தி (க.பொ.த சா/தரம்) மாத் திரம் குறித்த ஒரு பாடத்திற்கான தகுதி ஆகிடுமா என்பது ஓர் வினா?
- விண்ணப்பங்கள் கோரப்பட்டு மிக நீண்ட கால மானதால் வதிவிடம், விலாசமாற்றம் என்பனவற் றில் ஏற்பட்ட மாற்றங்கள் பலரதும் கவனத்திற் கொள்ளப்படாமையால் பழைய முகவரிக்கே நியமனம் வழங்கப்பட்டமை.
- பத்து வருடங்கள் தொடர்ச்சியாக ஓரிடத்தில் கடமை புரிவது எனும் நிபந்தனையால் தொழிலை விட்டுச் சென்றமை.
- சில பாடங்களுக்கு உரிய ஆசிரியர்கள் குறித்த பிர தேசத்தில் இல்லாமையால் பிற மாவட்டங்களிலி ருந்து அவர்களை நியமித்தமை.

*உ-ம்:* அழகியல் பாடங்கள் (நடனம், சங்கீதம் போன்றன) ஆங்கிலம் கணிதம் போன்ற பாடங்கள்

மேற்குறிப்பிட்டவை போல பல குறைபாடுகள் காணப்பட்டாலும் அவை யாவும் சவால்களாகவே கொள்ளப்பட வேண்டியுள்ளன.

ஏனெனில் குறித்த பின்தங்கிய சமூக ஏற்றத்தாழ் வற்ற ஒருநிலையை உருவாக்கப் பல போராட்டங்களை செய்ய வேண்டியே உள்ளது. ஏறத்தாழ முப்பது, நாற்பது வருடங்கள் தேசிய கல்வி எனும் நீரோட்டத்துடன் இணைந்திராத பெருந்தோட்டத்துறை சார்ந்த கல்வி அபிவிருத்தி என்பது போராட்டமிக்கதுதான் என்பதனை நாம் மறுத்தல் கூடாது.

கல்வியில் அபிவிருத்தி அடைந்து வந்து கொண்டிருக் கின்ற ஒரு சமூகத்திலிருந்து நியமனத்திற்காக மிக அதிகமான தகைமையை எதிர்பார்த்தல் இயலாது என்பது இதன் மற்றொரு பக்கமாகும்.


இந்த இவ்விரு பக்கங்களையும் சமநிலை கொண்டு பார்க்கும்பொழுது பல சாதகமான அம்சங்களும் இத னால் விளைந்துள்ளன என்பதனையும் குறிப்பிடலாம். அவை:

- இந்த 3179 ஆசிரியர் நியமனம் மூலம் குறித்த மலை யகப் பிரதேசத்தவர்களுக்கு நியமனம் கிடைத்தமை.
- தத்தமது பிரதேசத்திலேயே நியமனங்களைப் பெற வாய்ப்பு ஏற்பட்டமை.
- பெருந்தோட்டப் பிரதேச பாடசாலைகளின் ஆசிரி யர் பற்றாக்குறைக்கு தீர்வாக இந்த 3179 நியமனம் கிடைத்தமை.
- பாட ரீதியாக ஆசிரியர் நியமனங்கள் இடம் பெற்றமை.
- கவனிப்பாரற்றுக் கிடந்த பல மலையகப் பாட சாலைகளுக்கு இந்நியமனத்தின் மூலம் விடிவு கிடைத்தமை.
- பாட ரீதியாக பற்றாக்குறை காணப்பட்ட வேளை யில் வேறு மாவட்டங்களிலிருந்தாவது அதனை நிரப்பிட முயன்றமை.

**தொடர்ச்சி பக். 20**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சபா.ஜெயராசா

# மனோவசியமும் கட்டுக்கதைகளும் ஒரு மீள் நோக்கு



மனோவசியம் அல்லது கருத்தேற்ற நிலை (Hypnosis) தொடர்பான தவறான விளக்கங்கள் பொதுக் கவர்ச்சி உளவியலில் (Poppsychology) நிலவி வருகின்றன. அந்நிலையில் விரிவான விளக்கங்கள் வேண்டப்படுகின்றன. மனோவசியச் சிகிச்சை முறையை மெஸ்மர் முதலிலே அறிமுகப்படுத்தியமையால் அவரது பெயராலும் அது அழைக்கப்படுதலுண்டு. அவரைத் தொடர்ந்து அது பல நிலைகளிலே முன்னெடுக்கப் பட்டு வருகின்றது.

மனத்தின் மிகுந்த நெகிழ்ச்சியான இங்கிதமான நிலையிலிருந்து மனோவசியச் செயற்பாடு ஆரம்பிக்கும். அந்நிலையில் நோயாளியிடத்தே கட்டற்ற கற்பனைத் தொழிற்பாடுகள் மேலெழுந்து செல்லும். புற அழுத்தங்களுக்கும் ஒழுக்கங்களுக்கும் அடங்கி ஒழுக வேண்டிய நிலையும் ஏற்படமாட்டாது. ஒரு நடிபங்கை அல்லது பாத்திரத்தை அவர்களால் இலகுவிலே ஏற்றுச் செயற்படுத்தவும் முடியும். நனவிலி மனத்தின் துலங்கல் அவ்வேளையில் மிக எளிதாக நிகழும் செயற்பாடும் உருவாக்கப்படும்.

குடித்தொகையிற் பருமட்டாக பதினைந்து சதவீதத்தினரே ஆழ்ந்த கருத்தேற்ற நிலைக்கு உட்படுகின்றனர் என்று குறிப்பிடப்படுகின்றது. ஐம்பத்தைந்து சதவீதத்தினர் கருத்தேற்ற நிலைக்கு உட்படுத்தப்படக் கூடிய நிலையில் உள்ளனர். ஆனால் ஆழ்நிலைக்குச் செல்ல முடியாதவர்களாக இருக்கின்றனர். அதேவேளை ஒருவரது வயது நிலையும், முதிர்ச்சி நிலையும் கருத்தேற்ற நிலையிலே செல்வாக்குச் செலுத்துவதும் கண்டறியப்பட்டுள்ளது. வளர்ந்தவர்களைக் காட்டிலும் வயதிற் குறைந்தவர்கள் இலகுவாகக் கருத்தேற்றத்துக்கு உட்படுத்தக்கூடிய நிலையில் இருத்தலும் கண்டறியப்பட்டுள்ளது.

கருத்தேற்றம் தொடர்பான ஒருவரது உளப்பாங்கும் செல்வாக்குச் செலுத்துகின்றது. அத்துறையில் விருப்பமுடையோர் இலகுவாகக் கருத்தேற்றத்துக்கு உட்படுகின்றனர். அவ்வாறு ஒருவருக்குரிய ஈடுபாடும் கருத்தேற்றத்திலே செல்வாக்கை விளைவிக்கின்றது. எடுத்துக்காட்டாக இசையில் நாட்டமுடைய ஒருவர் இசைத் தூண்டிகள் வழியான கருத்தேற்றத்துக்கு இலகுவில் உட்படும் நிலையில் இருப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உளநலப் பாதிப்புக்கு உள்ளானவரின் பழைய நினைவுகளையும் மீட்டெடுத்தலே சிறப்பார்ந்த நோக்க மாக இச்செயற்பாட்டிலே கொள்ளப்படுகின்றது. அவற்றை ***"மீண்டும் வாழச் செய்தல்"*** வாயிலாக தாக்கமான அனுபவங்களுக்கு உட்பட்டவர் உளநிலை யிலே பரிச்சியமாக்கப்படுகின்றார். அதன் வழியாக மனத்தை உறுத்திய காட்சிகளின் தாக்கமும் கோரமான அனுபவங்களும் விடுவிக்கப்படுகின்றன.

***"நேர நீட்சியிலே பின்னோக்கிச் செல்லல்"*** என்று இந்தச் செயற்பாடு குறிப்பிடப்படும். அவ்வாறு பின்னோக்கிச் செல்லும் பிரயாணத்தின்போது தாக் கத்தை வெளிக்கொண்டு வருவதற்குத் தடையாக இருந்த அழுத்தத்தின் செறிவு குறைவடையத் தொடங்கும்.

முன்னே நிகழ்ந்தவற்றோடு இணைந்த கற்பனை களில் கருத்தேற்ற நிலைக்கு உட்பட்டவர் உட்படும் பொழுது ஏனைய உணர்வுகள் படிப்படியாக மறைந்து விடுகின்றன. அந்நிலையிலே தாக்கத்தின் செறிவும் நோவும் குறைவடைய வாய்ப்பு ஏற்படுவதாக இத்துறையில் ஆய்வு செய்தோர் குறிப்பிடுகின்றனர்.

அந்நிலையில் வழங்கப்படும் கருத்தேற்றங்கள் தாக்கத்துக்கு உள்ளானவரது அறிகையிலும், மனவெழுச் சிகளிலும், நடத்தைகளிலும் நல்லவிளைவுகளை ஏற்படுத்தும் என்று குறிப்பிடப்படுகின்றது. அதேவேளை அவர்கள் ஆழ்ந்த நிலையிலே நெகிழ்ச்சியுடன் தொழிற் ப்டும் நோக்குனராயிருத்தலும் கண்டறியப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக இத்துறையில் விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அறிகைச் செயற்பாட்டில் நிகழும் ***"இணைப்புக் குலைதல்"*** என்ற காரணத்தினால் கடந்து சென்ற நினைவுகளை மீட் டெடுக்க முடியாதிருக்கின்றதென்ற கருத்து அதன் வழி யாக முன்வைக்கப்படுகின்றது. கருத்தேற்றத்தின் பொழுது அந்த இணைப்பு மீள உருவாக்கப்படுகின்றது. தங்கு தடையற்ற அறிகைத் தொடர்பு ஏற்படுத்தப்படுகின்றது.

மனோவசியம் அல்லது கருத்தேற்றச் செயற்பாடு களின்போது மூளையிலே தனித்துவமான தொழிற் பாடுகள் இடம்பெறத் தொடங்குகின்றன. ஒருவர் அமை தியாக ஓய்வெடுக்கும் நிலையிலுள்ள மூளையின் செயற் பாட்டுக்கும் கருத்தேற்ற நிலையில் ஏற்படும் மூளைத் தொழிற்பாட்டுக்குமிடையே வேறுபாடுகள் காணப்படு தலை வில்லியம் மற்றும் குருசிலியர் (2001) மேற் கொண்ட ஆய்வுகள் புலப்படுத்துகின்றன.

தொடர்ந்து நிகழ்ந்துவரும் வளர்ச்சியில் கருத்தேற்ற நிலை தொடர்பான அதீதமான ஊகங்களும் அதீதமான கற்பனைப் புனைவுகளும் திட்டவட்டமான ஆதாரங்கள் அற்றநிலையில் பொதுக்கவர்ச்சி உளவியலிலே மேற் கொள்ளப்படுகின்றன. திரைப்படங்களிலும் புனைகதை களிலும் அவற்றுக்கு மேலும் கற்பனை வடிவங்கள் கொடுக்கப்படுகின்றன. பொதுமக்கள் அதுவே உளவியல் என்ற தவறான காட்சிக்குத் தள்ளப்படுகின்றனர்.

மெஸ்மெரால் தொடக்கப்பட்டு உளப்பகுப்பு உளவியலாளரால் மேலும் வளர்த்தெடுக்கப்பட்ட இந்த உளநுட்பவியல் உடலில் எழும் நோவை நீக்குவதற்கும், உளநோய்க்குச் சிகிச்சையளிப்பதற்கும் பயன்படுத்தப் படுகின்றது. முன்னர் தோற்றம் பெற்ற ஒருவரது தாக்க மான நிலைக்கு வழிகாட்டி உதவுதலே அதன் செயற் பாடாக அமைகின்றது. இனிமேலும் வரவிருக்கும் தாக்கங்களைத் தடுப்பதற்குரிய தடுப்பு நடவடிக்கையாக அதனைப் பயன்படுத்துதலிலும் இடர்ப்பாடுகள் உள்ளன. ***அது தன்னளவிலே தீர்வு தரும் முறையாக அமையாது முன்னைய நிகழ்ச்சிகளுக்கு உதவும் முறையாகவேயுள்ளது.***

கருத்தேற்ற நிலையின் பிறிதொரு வளர்ச்சியாகச் ***"சுயகருத்தேற்ற நிலை"*** அல்லது ***"தற்கருத்தேற்ற நிலை"*** உருவாக்கம் பெற்றுள்ளது. அதாவது, பிறர் ஒருவர் கருத்தேற்றத்தை மேற்கொள்வதற்குப் பதிலாக ஒருவர் தமக்குத் தாமே மனோவசியம் செய்து கொள்ள லும் பயனுள்ள நடவடிக்கையாக மாற்றம் பெற்றுள்ளது. கருத்தேற்றச் சிகிச்சை முறை முடிவடைந்ததும் ஒருவர் தமக்குத்தாமே கருத்தேற்றமும் சிகிச்சை அளிப்பவரால் சொல்லிக் கொடுக்கப்படுகின்றது.

நோவு மற்றும் வலிப்பு நிலைகளில் இருந்து நோயாளர் மீண்டெழுவதற்கு பிறர்மேற்கொள்ளும் கருத்தேற்றமும் தற்கருத்தேற்றமும் பயனுள்ளவையாக இருந்து வருகின்றன. பேச்சுத்திணறல் மற்றும் திக்குவாய் போன்றவற்றைக் குணப்படுத்துவதற்குத் தற்கருத்தேற்ற முறை வெற்றியளித்துள்ளமையை ஆய்வுகள் சுட்டிக் காட்டுகின்றன.

கருத்தேற்ற ஆய்வுகளில் இருந்து வெளிக்கிளம்பிய பிறிதோர் உளவியற் கருத்தாக ***"உள்ளெழுகாட்சி"*** அல்லது ***"கடப்புக்காட்சி"*** *(Trance)* விளங்குகின்றது. புறத்தூண்டிகள் பற்றிய பிரக்ஞை இன்றி அகத்திலே முகிழ்த்தெழுபவை உள்ளெழு காட்சிகள் எனப்படும்.


புறநிலையில் யாது நிகழ்கின்றது என்பதை அறியும் தொழிற்பாடுகள் செயலிழந்த நிலையில் மனத்திலே தன்னியக்கமாக முகிழ்த்தெழும் காட்சிகளும், விடுகற் பனைகளும் அதிலே இடம்பெறும். அந்நிலையிலே தாம் யாது செய்கின்றனர் என்பதை அறிந்துகொள்ளாத செயற்பாடுகளை அவர்கள் மேற்கொள்வர்.

சமய உளவியலில் "உள்ளெழுகாட்சி" பற்றிய செய்திகள் குறிப்பிடப்படுகின்றன. சடங்குகளின் பொழு தும் அதிர்வுதரும் இசைக்கருவிகள் இசைக்கப்படும் பொழுதும் உள்ளெழு காட்சிகள் தோன்றிச் செயற்படு வோரும் உளர். புறம் நிற்பவர் யார், புறத்தே என்ன நிகழ்கின்றது என்பதை அறியாது அவர்கள் தன்னெழ லுடன் இயங்கிய வண்ணமிருப்பர்.

ஆக்க மலர்ச்சியிலே ஆழ்ந்து சுவைத்திருப்போரது மனமும் உள்ளெழு காட்சிச் செயற்பாடுகளுக்கு உட் பட்டிருக்கும். பிக்காசோ ஓவியங்களை வரையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொழுது அத்தகைய நிலைக்கு உட்பட்டிருந்ததாக ஆய்வாளர் குறிப்பிடுவர். அவ்வாறான ஒருநிலை தனக்கும் ஏற்பட்டதாக வீரமணி ஐயர் ஒரு சமயம் குறிப் பிட்டிருந்தார். கலைஞர்களுக்கு ஏற்படும் அவ்வாறான நிலை ***"கலை மயக்கம்"*** எனப்படும். கலையை ஆக்குபவர்களுக்கு மட்டுமன்றி கலையை ஆழ்ந்து அனுபவிப்பவர்களும் அவ்வாறான உள்ளெழு காட்சிகள் தோற்றம் பெறும் என்று சுட்டிக் காட்டப்படுகின்றது.

கவிதையை ஆழ்ந்து வாசித்து அதன் சுவையில் நிறைந்து ஈடுபடும் பொழுது இறுகிய காரண காரியத் தருக்கச் சிந்தனைகளிலிருந்து மனம் விடுபட்டு உள் ளெழு காட்சிகளுக்கு உட்படுவதாக டி.எஸ்.எலியட் (1930) ஒருசமயம் குறிப்பிட்டார். அந்த நிலைக்கு "கற்பனையின் விதியுரைப்பு" என்று பெயரிடப்பட்டது.

மனோவசியம் அல்லது கருத்தேற்ற நிலை, உள்ளெழுகாட்சி அல்லது கடப்புக்காட்சி, கலைமயக்கம் ஆகியவற்றுக்கிடையே இணைந்த தொடர்புகள் காணப் படுகின்றன. கவிதைக்கும் கருத்தேற்றத்துக்குமிடையே நெருங்கிய உறவுகள் இருத்தலை மனோரதியக் கவிஞர் கள் விதந்துரைத்தனர். எட்வேட் சின்டர் என்பவர் 1930ஆம் ஆண்டிலே ***மனோவசியக் கவிதை"*** என்ற நூலை வெளியிட்டார். அதிலுள்ள கவிதைகளை ஆழ்ந்து நுகர்ந்து வாசித்தால் மனோவசிய விளைவு ஒருவரிடத்தே தோற்றம் பெறும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

பாரதியாரிடத்தும் மனோரதியச் சுவைப்பு இருந்த மைக்குச் சான்றுகள் உள்ளன. "கள்வெறி", "உன்மத்தம்", "மந்திரச்சொல்லின்பம்", "எங்கும் பரவியதோர் இங்கிதம்" முதலாம் பல தொடர்கள் பாரதியின் கவிதை களிலே காணப்படுகின்றன.

பிரான்சின் கைத்தொழிற் புரட்சிக்குப் பின்னர் மெஸ்மெருடைய காலத்திலிருந்து மனோவசியம், விஞ்ஞான பூர்வமான ஆய்வுகளுக்கு உட்படுத்தப்படும் துறையாக வளர்ச்சியுற்று வந்தாலும் மனோவசிய நடவடிக்கைகள் வரலாற்றுக் காலங்களில் இருந்தே மானிட வாழ்வில் இடம்பெற்று வந்துள்ளன. தொன்மை யான சடங்குகளிலும், வழிபாடுகளிலும் அந்தச் செயற் பாடு பரவலாகக் காணப்பட்டது. உளவியல் என்ற விஞ்ஞானம் வளர்வதற்கு முன்னரே உளவியற் செயற் பாடுகள் மனித வாழ்வில் இடம்பெறத் தொடங்கி விட்டன.

அண்மைக்காலமாக உளவியலிலே நிகழ்ந்து வரும் தீவிர ஆய்வுகளும், மூளையின் செயற்பாடுகளை மிகவும் நுணுகி ஆராயும் உடற்றொழிற்பாட்டியல் விஞ்ஞான மும் நரம்பியல் விஞ்ஞானமும் இத்துறையிலே தொடர்ச் சியான தேடல்களைத் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றன. அந்நிலையில் மனோவசியம் பற்றிய இன்றைய கருத்துக்கள் முடிந்த முடிபுகளாக இல்லை. தொடரும் செய்திகளாகவேயுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Peter Ferdinand Druker - பீட்டர் பெர்டினண்ட் டிரக்கர் (1909-2005)

க.பாஸ்கரன்

# பீட்டர் டிரக்கரின் முகாமைத்துவக் கோட்பாடு

**வாழ்க்கை வரலாறு**

இருபதாம் நூற்றாண்டின் தோற்றம் பெற்ற முகாமைத்துவத்துறைச் சிந்தனையாளரில் தலை சிறந்த முகாமைத்துவ சிந்தனையாளராக பீட்டர் பெர்டினண்ட் டிரக்கர் கருதப்படுகின்றார். இவர் ஆஸ்திரியாவில் 1909 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19 ஆம் திகதி பிறந்தவர். ஆரம்பத்தில் வியன்னாவிலும் பின்னர் இங்கிலாந்திலும் கல்வி பயின்றார். ஜேர்மெனி பிராங்க் நகரில் பத்திரிகை நிருபராக இருந்த இவர், அக்காலத்திலேயே, தனக்கு ஈடுபாடாக இருந்த சட்டத்துறையில், பொது, சர்வதேச சட்டத்தில் கலாநிதிப்பட்டம் பெற்றார். பின்னர் இங்கிலாந்தில் ஒரு பன்னாட்டு வங்கியில் பொருளாதார நிபுணராகப் பணியாற்றினார். 1937இல் ஐக்கிய அமெரிக்காவுக்குச் சென்ற இவர், இரண்டு ஆண்டுகளில் "The end of economic man" எனும் முதலாவது புத்தகத்தினை வெளியிட்டார். டிரக்கரின் முகாமைத்துவ நூல்களும், பொருளாதாரம், சமூகம், பற்றிய அவரது பகுப்பாய்வுகளும் இருபதிற்கு மேற்பட்ட மொழிகளில் பதிப்பிக்கப் பட்டு உலக அளவில் மதிப்புப் பெற்றுள்ளன.



டிரக்கர் ஆரம்பத்தில், அரசியல் தத்துவப் பேராசிரியராக பெனிங்டன் கல்லூரியிலும் பின்னர் இருபது ஆண்டுகளுக்கு மேலாக நியூயோர்க் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவப் பட்டக்கல்லூரியில் பேராசிரியராகவும் இருந்தார். 1971இல் இருந்து கலிபோர்னியாவில் க்லேர்மான்ட் பட்டக் கல்லூரியில் சமூக அறிவியல் பேராசிரியராகவும் இருந்தார்.

**முகாமைத்துவக் கோட்பாடு அறிமுகம்**

பீட்டர் டிரக்கர் முகாமைத்துவத்தினை புதிய கோணத்தில் நோக்கியவராவார். இவர் முகாமைத்துவத்தில் அறிமுகம் செய்த கோட்பாடு குறிக்கோளுடனான முகாமைத்துவம் என அழைக்கப்படுகின்றது. முகாமையாளர் உரிய முறையில் ஒரு செயலிலோ அல்லது செயல்களிலோ ஈடுபடுவது நிறுவனத்தின் குறிப்பிட்ட நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கேயாகும் என அவர் குறிப்பிடுகின்றார். டிரக்கர் அதிகார வர்க்க முகாமைத்துவத்திற்கு எதிராக தனது முகாமைத்துவச் சிந்தனைகளை முன்வைத்துள்ளார். முகாமைத் துவத்தில் புதிய விடயங்களைப் புகுத்துவது ஆரோக்கியமான ஒன்றாக டிரக்கர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதுகின்றார். முகாமைத்துவம் ஒரு தொழில் என்றும் நல்ல பயிற்சியென்றும் குறிப்பிடும் டிரக்கர் முகாமைத்துவ அமைப்பொன்றில் ஒவ்வொரு உறுப்பினராலும் நிறைவேற்றப்படவேண்டிய குறிக்கோள்கள் தனித் தனியே வரையறுக்கப்பட வேண்டும். பின் அவர்களின் குறிக்கோள்கள் செவ்வனே நிறைவேற்ற உதவும் வகையில் தேவையான தகவல்கள் அவர்கள் ஒவ்வொருவருக்கும் அளிக்கப்படுதல் வேண்டும் என்று வலியுறுத்தும் டிரக்கர் முகாமைத்துவத்தில் கட்டுப்பாடு தேவையற்ற ஒன்றாகவே கருதுகின்றார்.

குறிக்கோளுடனான முகாமைத்துவத்தில் குறிக்கோள்கள் தெளிவாகக் காணப்படும். அக்குறிக்கோள்களை அடைவதற்கு அனைவரும் உடன்பாடான வழிகாட்டல்களிலும், செயற்பாடுகளிலும் ஈடுபடுவர். நிறுவனத்தின் அறிவு, திறன், கற்பனாசக்தி ஆகிய அனைத்தும் ஒருங்கே ஒன்றுபடுத்தப்பட்டு குறிக்கோளினை நோக்கித் திசைப்படுத்துவது இதன் அடிப்படையாகும். குறிக்கோளுடனான முகாமைத்துவம் அதிசிறந்த குழு உணர்வினையும், குழுவேலையினையும் விருத்தியாக்குகின்றது. மனிதர்களுக்குச் சந்தர்ப்பம் கிடைக்கும்போது அவர்கள் குறிக்கோளினை அடைவதற்கு ஆற்றலுடன் செயற்படுவர் என இம்முகாமைத்துவக் கோட்பாடு குறிப்பிடுகின்றது.


**குறிக்கோளுடனான முகாமைத்துவம்**

குறிக்கோளுடனான முகாமைத்துவம் என்பது நன்கு அமைப்பாக்கம் செய்யப்பட்ட, ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு அணுகுமுறையாகும். இவ் அணுகுமுறையானது, அடையக்கூடிய இலக்குகளை மையப்படுத்தவும் கிடைக்கின்ற வளங்களில் இருந்து மிகவும் சாத்தியமான விளைவுளைப் பெறுவதற்கும் முகாமைத்துவத்தினை நெறிப்படுத்துகின்றது. இக்கோட்பாடானது, நிறுவனம் ஒன்றின் பணியாளர்கள் ஒவ்வொருவரும் குறிக்கோள்களை அடைவதனூடாக நிறுவனத்தின் இலக்கினை அடைவதற்கும்; இவ் இலக்குகளை அடைவதனூடாக நிறுவனத்தின் இலக்கினை அடைவதற்கும்; இவ் இலக்குகளை அடைவதனூடாக நிறுவனத்தின் ஆற்றுகைகளை அதிகரிப்பதையும் நோக்கமாகக் கொண்டது. நிறுவனத்தின் பணியாளர்கள் ஒவ்வொருவருக்கும் குறிக்கோள்களை இனங்காண்பதற்கான உள்ளீடுகள் , குறிக்கோள்களை நிறைவு செய்வதற்கான கால எல்லைகள் என்பன வழங்கப்படும். குறிக்கோள்களை நிறைவடையும் செயன்முறையின் நடைமுறை ஒழுங்கும், உடனுக்குடன் பின்னூட்டல்களும் வழங்கப்படும்.

குறிக்கோளுடனான முகாமைத்துவத்தில், சகல முகாமையாளர்களும் முதல்தர முகாமையாளர்கள் உட்பட தமது நாளாந்த நடைமுறைச் செயற்பாடுகளில் ஈடுபடுவதனூடாக நிறுவனத்தின் குறிக்கோள்களை, நோக்கங்களை நிலைநிறுத்துவர்.

- வெற்றிகரமாக நிறைவேற்றி, நிறுவனத்தின் மேம்பாட்டினை எய்துவதற்காக சகல முகாமையாளர்களும் தந்திரோபாயத் திட்டமிடலில் பங்குபற்றுதல்.
- நிறுவனத்தினை சரியான பாதையில் இட்டுச் செல்வதற்காக, பரந்துபட்ட ஆற்றுகை அமைப்புக்களை வடிவமைத்தல், ஆற்றுகைகளை வடிவமைப்பதில் சகலமுகாமையாளரும் ஒருவருக்கொருவர் உதவுதல்.

**குறிக்கோளை அடிப்படையாகக் கொண்ட முகாமைத்துவத்தில் செயன்முறையின் ஐந்து படிமுறைகள்**
**(The five steps MBO Process)**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குறிக்கோளுடனான முகாமைத்துவத்தின் தத்துவம்**

(1) நிறுவனத்தினுடைய நோக்கக்கூற்று பணிக்கூற்று இலக்குகள் குறிக்கோள்களை வரையறுத்தல்.

(2) நிறுவனத்தின் ஒவ்வொரு அங்கத்தவர்கட்கும் தனித்தனி குறிக்கோள்களை வரையறுத்தல்.

(3) பங்குபற்றுதல் தீர்மானம் எடுத்தல்.

(4) காலவரையறைகளை தெளிவாக வரையறுத்தல்.

(5) ஆற்றுகைகள் மதிப்பிடுதல் பின்னூட்டல் வழங்குதல்.

குறிக்கோளுடனான முகாமைத்துவத்தில், நிறுவனத்தின் முகாமையாளர்கள், பணியாளர்கள் ஒவ்வொருவரும் நிறுவனத்தின் நோக்கங்கள், குறிக்கோள்கள் பற்றிய தெளிவான புரிந்துணர்வு, நிறுவனத்தின் நோக்கங்களை நிறைவுசெய்வதற்காக தமது நடிபங்குகள், பொறுப்புக்கள் பற்றிய விழிப்புணர்வு என்பன பற்றிய சரியான விளக்கத்தினைக் கொண்டிருப்பார்கள்.

*குறிக்கோளுடனான முகாமைத்துவமானது:*

(1) அறிவை அடிப்படையாகக் கொண்ட நிறுவனங்களுக்குப் பொருத்தமானது.

(2) பணியாளர்களுடைய முகாமைத்துவத்தினைக் கட்டியெழுப்பும், சுயதலைமைத்துவ திறன்களைக் கொண்ட நிலைமைகள்.

(3) ஆக்கத்திறன், முன்னிற்றல், பூரண அறிவு என்பன விருத்தியாகும்.

குறிக்கோள்களை அடிப்படையாகக் கொண்ட முகாமைத்துவத்தில் குறிக்கோள்களின் தகுதியினை சரிபார்ப்பதற்காக SMART METHOD அறிமுகப்படுத்தப் பட்டது. குறிக்கோள்கள் ஒவ்வொன்றும் பின்வரும் அம்சங்களைக் கொண்டிருக்க வேண்டும்.

(1) குறிப்பானது *(Specific)*

(2) அளவிடப்படக்கூடியது *(Measurable)*

(3) அடையப்படக்கூடியது *(Achievable)*

(4) உண்மையானது *(Realistic)*

(5) காலம் தொடர்பானது *(Time-related)*

குறிக்கோளுடனான முகாமைத்துவத்தில், முதல்தர முகாமையாளர்களின் தந்திரோபாயச் சிந்தனையும் தந்திரோபாயங்களுடைய அமுலாக்கமும் முதல்தர முகாமையாளரில் இருந்து கீழ்நோக்கி பணியாளர்கள் வரையான இணைப்புக்களை ஏற்படுத்தும். குறிக்கோளிகளினுடைய பொறுப்புக்கள் நிறுவனத்திடமிருந்து, நிறுவனத்திலுள்ள அங்கத்தவர்கள் ஒவ்வொருவருக்கும் கடத்தப்படும்.

இவ்வாறான அம்சங்கள், அறிவை அடிப்படையாகக் கொண்ட நிறுவனங்கட்கு மிகவும் பொருத்தப்பாடானதாகும். இவ்வகையான நிறுவனத்தில், நிறுவன அங்கத்தவர்கள் ஒவ்வொருவரும், தமது குறிக்கோளின் விளைவுகளில் இருந்து கிடைக்கும் பின்னூட்டல்களின் அடிப்படையில் தமது வேலைத்திட்டங்களை சுய கட்டுப்பாடு செய்ய முடியும்.

பீற்றர் டிரக்கரின் குறிக்கோளுடனான முகாமைத்துவக் கோட்பாடுகள், தத்துவங்கள், பண்புகள், கல்வியியல் கல்லூரி போன்ற அறிவுசார் நிறுவனங்களின் பல்வேறு செயற்பாடுகளின் செல்வாக்கு செலுத்துவதைக் காண முடியும். அக்கோட்பாடுகள் எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்றன என்பன பற்றி சற்று நோக்குவோம்.

**தேசிய கல்வியியல் கல்லூரிகளின் பின்னணி**

இலங்கையில் ஆசிரியக் கல்வியில் தேசிய கல்வியியல் கல்லூரிகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. மாறிவரும் கல்வித் தொழில்நுட்பத்தின் புதிய போக்குகளின் அடிப்படையில் நாட்டுக்குத் தேவையான ஆசிரியர்களுக்கு முன்சேவைப் பயிற்சி வழங்குவதில் இக்கல்வியியல் கல்லூரிகளின் சேவை அளப்பரியது. மூன்றாண்டு காலம் ஆசிரியர் பயிற்சியை நிறைவு செய்து வெளியேறும் ஆசிரியர்கள், நாட்டின் கல்விக்கொள்கைக்கு ஏற்பவும், ஆசிரியர்களின் தேவைக்கு ஏற்பவும் நாட்டில் பல்வேறு பகுதியில் கல்வி அபிவிருத்திப் பணிகளில் ஈடுபடுத்தப் படுகின்றனர். ஆசிரியர்களது வாண்மை விருத்திக்கு உதவக்கூடிய தொடருறு ஆசிரியக் கல்விக் கற்கை நெறிகளும் இந்நிறுவனங்களுக்கூடாக வழங்கப்பட்டு வருகின்றன. தேசிய கல்வியியல் கல்லூரிகள் நோக்கக்கூற்று, பணிக்கூற்று, குறிக்கோள்கள் என்பவற்றுடன் பொருத்தப்பாடான ஒழுங்கமைப்பினையும் கொண்டு காணப்படுகின்றது. கல்லூரியின் நோக்கக்கூற்று. பணிக்கூற்று, குறிக்கோள்கள் எய்தக்கூடிய வகையில் பொருத்தமான முகாமையாளர்கள், பணியாளர்களைக் கொண்டு இயங்குகின்றது.

**தேசிய கல்வியியல் கல்லூரியின் நோக்கக்கூற்று பணிக்கூற்று குறிக்கோள்கள்**

**நோக்கக்கூற்று** *(Vision)*

விரைவாக மாற்றமுற்று வரும் உலக சமுதாயத்தின் தேவைகளுக்கு உதவக்கூடிய வகையில், சேவைமுன் பயிற்சியினூடாக தொடருறு ஆசிரியர்களை உருவாக்குதல்.

**பணிக்கூற்று** *(Mission)*

நாட்டினது தேசிய கல்விக் குறிக்கோள்களை நிறைவு செய்யக்கூடிய ஆற்றலும் வாண்மைத்துவ தேர்ச்சியும் உடைய ஆசிரியர்கள், எதிர்காலச் சவால்களை எதிர் கொள்வதற்கு ஆர்வமுடையவர்களாகவும், வினைத் திறனுடையவர்களாகவும் தேவையான புத்தாக்கமுடையவர்களாகவும் கொண்டவர்களாக பாடசாலை அமைப்புக்கு வழங்குதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**குறிக்கோள்கள்** *(objectives)*

(1) கற்றல் - கற்பித்தல் செயன்முறை பற்றிய சரியான விளக்கத்துடனும் நல்ல மனப்பாங்குடனும் கடமையாற்றக் கூடிய தேர்ச்சி பெற்ற ஆசிரியர் குழுவினை பாடசாலை அமைப்புக்கு வழங்குதல்.

(2) தேசிய கல்விக் கல்லூரிகளுக்கு அண்மையிலுள்ள பாடசாலைகளினதும் ஆசிரியர்களினதும் கல்வித் தரத்தினை மேம்படுத்தக்கூடிய விசேட நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கமைத்து அமுலாக்குதல்.

(3) கல்வித் தரத்தினை மேம்படுத்தக் கூடியவகையில், கல்வியியல் பிரச்சினைகள் தொடர்பான முடிவு களை பொருத்தமான கல்விப்பகுதியினரிடம் சமர்ப்பித்தல்.

(4) கல்விக்கு முக்கியத்துவமான பிரசுரங்களைத் தயாரித்தல்.

(5) சமுதாயத்துடன் நெருக்கமான உறவினைப் பேணுதல். இவ் உறவினைப் பேணுவதனூடாக, சமு தாயத்தின் மேம்பாட்டிற்கு தேவையான அவசிய மான, நிகழ்ச்சித்திட்டங்களை விருத்தி செய்தல் அமுலாக்குதல்.

(6) ஆசிரியர்களது வாண்மை விருத்திக்கு அவசியமான தொடருறு ஆசிரியர்கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கமைத்தலும் அமுலாக்குதலும், ஆசிரியக் கல்வி யியலாளர்களை வளவாளர்களாக ஊக்குவித்தல்.

(7) தேசியக்கல்விக் கல்லூரிகள், ஆசிரியக் கல்வி நிறு வனங்களை ஒழுங்கமைத்தலும் அமுலாக்குதலும், ஆசிரியக் கல்வியியலாளர்களுக்கிடையிலான ஆய்வுத் தொடர்புகளை விருத்தி செய்தல். ஆசிரி யக் கல்வியியலாளர்களது கருத்துக்களைப் பரிமாறு வதற்கு சந்தர்ப்பங்களை உருவாக்குதல்.

(8) நிறுவனத்தின் மேம்பாட்டுக்கு உதவக்கூடிய வகை யில் கல்வி மற்றும் கல்வி சாரா ஊழியர்களுக்கி டையே விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை அமுலாக்குதல்.

**கல்வியியல் கல்லூரியின் சபைகள், குழுக்கள்**
**(Boards and committees of NCOE)**

கல்வியமைச்சின் நிர்வாகத்தின் கீழ்வரும் தேசிய கல்வியியல் கல்லூரிகளின் பிரதான கல்விமற்றும் நிர்வாக அதிகாரியாக கல்வியமைச்சின் செயலாளர் காணப்படு வார். நாட்டிலுள்ள கல்வியியல் கல்லூரிகளும் கல்வியமைச் சின் செயலாளரின் வழிகாட்டல் ஆலோசனைக்கமைவாக பிரதம ஆணையாளரினால் (ஆசிரியக்கல்வி) நிர்வகிக் கப்படுகின்றன. தேசியக்கல்விக் கல்லூரிகள் நிகழ்ச்சித் திட்டங்கள், உயர்தர அடைவுமட்டத்தினை வெற்றிகர மாகவும் சுயாதீனமாகவும் வினைத்திறனாகவும் பேணக் கூடியவகையில் A-தர நிலைக்களமாகப் பேணுவதற் கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஒரு கல்வியியல் கல்லூரியின் பிரதானமான நிறை வேற்று அதிகாரியாக பீடாதிபதி காணப்படுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பீடாதிபதி, பிரதம ஆணையாளர் (ஆசிரியர் கல்வி) ஊடாக கல்வியமைச்சின் செயலாளருக்கு வகைகூறக் கடமைப்பட்டவர் ஆவார். கல்வியியல் கல்லூரியின் பீடாதிபதி, உபபீடாதிபதிகள், இணைப்பாளர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவை SLTES பிரமாணக் குறிப்புக்கமைய நியமிக்கப்படுவர்.

(1) ஆலோசனைச்சபை

(2) முகாமைத்துவச்சபை

(3) கல்விச்சபை

(4) மதிப்பீட்டுக்குழு

(5) ஒழுக்காற்று குழு

(6) மாணவர் நலனோம்பல் குழு

(7) தொடருறு ஆசிரியர் கல்வி மீளாய்வுக் குழு

கல்வியியல் கல்லூரியின் நிர்வாகம் சிறப்பாக அமைவதற்கு பீடாதிபதிக்கு உதவியாக உபபீடாதிபதிகள் மூவரும் இவர்கட்கு உறுதுணையாக விரிவுரை இணைப்பாளர்கள், மற்றும் விரிவுரையாளர்கள், பதிவாளர், விடுதிக்காப்பாளர் என ஆளனியிரைக் கொண்ட ஒரு நிர்வாகக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டது.

**நிர்வாகக் கட்டமைப்பு**

கல்வியியல் கல்லூரிகள் ஒவ்வொன்றும் நோக்கக் கூற்று, பணிக்கூற்று, குறிக்கோள்களின் அடிப்படையில் இயங்கும் கல்வி நிறுவனங்களாகும். நிறுவன ஒழுங்கமைப்பைக் கொண்ட கல்விக் கல்லூரிகள் ஒவ்வொன்றும் பொது முகாமைத்துவம் தனியாள் முகாமைத்துவம், அலுவலக நிர்வாகம், நிதி முகாமைத்துவம், கல்வியியல் கல்லூரி நிர்வாகம், விடுதி முகாமைத்துவம் எனப் பல்வேறு வகையான நிர்வாக, முகாமைத்துவக் கூறுகளைக் கொண்டவையாகும். மேலும் பல்வேறு வகையான சபைகளையும் குழுக்களையும் கொண்டு வினைத்திறனாகவும் விளைதிறனாகவும் இயங்கி வருகின்றன.

**கல்வியியல் கல்லூரிகளின் நடைமுறையில் பீட்டர் ரக்கரின் கோட்பாடு**

***Adoptation of Peter Drucker's Principles in NCOE***

பீட்டர் டிரக்கரின் முகாமைத்துவக் கோட்பாடும் பண்புகளும் கல்வியியல் கல்லூரி போன்ற அறிவை வழங்கும் நிறுவனங்களின் நடைமுறைப் பிரயோகத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

***i.* கல்வியியல் கல்லூரியின் நிறுவன ஒழுங்கமைப்பு**

கல்வியியல் கல்லூரியின் சகல நடவடிக்கைகளுக்கும் பொறுப்புக் கூறக்கூடிய வகையில் பீடாதிபதி சகல நடவடிக்கைகளையும் மேற்பார்வை செய்து நெறிப்படுத்துவார். காலத்துக்குக் காலம் கல்வியமைச்சினால் வெளியிடப்படும் அறிவுறுத்தல்கட்கு அமைய பீடாதிபதியினால் தனக்குக்கீழுள்ள ஆளணியினர்கட்கு பல்வேறுபட்ட கடமைகளையும் பொறுப்புக்களையும் ஒப்படைப்பார்.

முதலாவதாக குறிக்கோளுடனான முகாமைத்துவத்தின் தத்துவங்களை கல்லூரியின் நடைமுறையோடு பார்க்கும்போது, எந்த ஒரு நிறுவனமும் நோக்கக்கூற்று, பணிக்கூற்று, குறிக்கோள்கள் இன்றி இயங்கமுடியாது. அந்த வகையில் கல்வியியல் கல்லூரிகளின் நோக்கக் கூற்று, பணிக்கூற்று , குறிக்கோள்கள் இன்றி இயங்க முடியாது. அந்த வகையில் கல்வியியல் கல்லூரிகளின் நோக்கக்கூற்று, பணிக்கூற்று, குறிக்கோள்கள் நன்கு வரையறுக்கப்பட்டவையாகும்.

இந்நோக்கக் கூற்றினை அடைவதற்கு கல்வியியல் கல்லூரியின் பீடாதிபதியின் கீழ் உள்ள நிர்வாகக் கட்டமைப்பில் ஒவ்வொரு பணியாளர்கட்கும் (உபபீடாதிபதி, இணைப்பாளர்கள், விரிவுரையாளர்கள், மற்றும் கல்விசாரா உழைப்பாளர்கள்) சிறப்பான குறிக்கோள்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. கல்வியியல் கல்லூரியின் சகல அங்கத்தவர்கட்கும், குறிப்பான குறிக்கோள்கள் கல்விஅமைச்சினால் வடிவமைக்கப்பட்டுக் கொடுக்கப்பட்டுள்ளன. இக்குறிக்கோள்களை நிறைவு செய்வதற்கான செயற்பாடுகள், கடமைகள், பொறுப்புக்கள் என்பன ஒவ்வொரு அங்கத்தவர்கட்கும் வழங்கப்பட்டுள்ளன.

***ii.* நிறுவனத்தின் ஒவ்வொரு அங்கத்தவர்கட்கும் தனித்தனி குறிக்கோள்களை வரையறுத்தல்**

*(1) நிதியும் நிர்வாகமும்*

கல்வியியல் கல்லூரியின் சகல நிர்வாக, நிதிச் செயற்பாடுகட்கும் பொறுப்பாக இருக்கும் உபபீடாதிபதி (நிதியும் நிர்வாகம்)யின் மேற்பார்வையில் பீடாதிபதிக்கும் பொறுப்புச் சொல்லக்கூடியவகையில் இப்பிரிவின் செயற்பாடுகள் அமையும்.

ஆசிரிய மாணவர்களது அனுமதி, ஆசிரிய மாணவர்களது விடுதி நலனோம்பு செயற்பாடுகள், தளபாடங்கள், உபகரணங்கள் தொடர்பான செயற்பாடுகள், ஆசிரிய மாணவர்கட்கு சான்றிதழ் வழங்குதல், நிர்வாகம், நிதி தொடர்பான வருடாந்த திட்டமிடல், முன்னேற்றம் கண்காணித்தல் போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்திக் கொடுத்தல் ஆகிய செயற்பாடுகள் நிதியும் நிர்வாகவும் எனும் பிரிவினுள் அடங்கும்.

*(2) கல்வியும் தரஉறுதிப்பாடும்*

நிறுவனத்தின் கல்வியும் தரஉறுதிப்பாடும் எனும் பிரிவு செயற்பாடுகளுக்கு, உபபீடாதிபதி (கல்வியும் தரமேம் பாடும்), பீடாதிபதியின் மேற்பார்வையில் பொறுப்பாக இருப்பார். கல்வியியல் கல்வியின் முக்கியமான பிரிவாக இது அமையும். ஆசிரிய மாணவர்களின் கல்வி அபி விருத்தி, கலைத்திட்ட மேம்பாடு என்பவற்றிற்கு பொறுப்பாக இது அமைவதால், செயற்பாடுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினைத்திறனாகவும், விளைதிறனாகவும் அமையக் கூடிய வகையில் இரண்டு டீம்கள் சிரேஷ்ட விரிவுரையாளர்கள், விரிவுரை இணைப்பாளர் (கல்வியும் தரமேம்பாடும்) உபபீடாதிபதிக்கு உறு துணையாக இருப்பார்கள். இப்பிரிவின் கீழ் உள்ளடக்கப்படும் செயற்பாடுகளாவன:

நிறுவனத்தின் கல்விச் செயற்பாடுகள், கல்விச் செயற்பாடுகளின் தர உறுதிப்பாடு என்பவற்றினைத் திட்டமிடல், தயாரித்தல், ஒழுங்கமைத்தல், அமுலாக்கல், நடாத்துதல், ஒவ்வொருவருடமும் வருடாந்த கல்விச் செயற்பாடுகளைத் திட்டமிடல், கல்விச் செயற்பாடுகளுக்கு ஆதாரமான சேவைகளைப் பெற்றுக்கொள்ளல், கல்விச் சேவைகளை மேம்படுத்தல், ஒழுங்கான தொடர் மதிப்பீட்டு செயன்முறையை நடைமுறைப்படுத்தல், கண்காணித்தல், அறிக்கைப் பேணல், கல்வியியல் கல்லூரியில் பரீட்சை நடாத்துதல், பரீட்சை திணைக்களத்துடன் இணைந்து பரீட்சை நடாத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளல், கற்பித்தல் பயிற்சி, உள்ளகப்பயிற்சி செயற்பாடுகளை நடாத்துதல், பாடக் குழுக்களை நியமித்தல், கூட்டங்களை ஒழுங்கமைத்தல், நடாத்துதல், கூட்டங்களில் எடுக்கப்படும் தீர்மானங்களை அறிக்கைப்படுத்தல், அமுல்படுத்தல், இணைபாடவிதமான செயற்பாடுகளை ஒழுங்கமைத்தல், நடாத்துதல், மேற்பார்வை செய்தல், வருடாந்த கல்விச் செயற்திட்டங்களை அமுலாக்குதல், கல்விச் செயற்பாடுகளின் தரஉறுதிப்பாட்டினை மேம்படுத்தல், கல்விசார் ஊழியர்களின் தரங்கணிப்பீட்டுச் செயன்முறையை மேற்கொள்ளல்.

### *(3) தொடருறு ஆசிரியர் கல்வி*

ஆசிரிய சேவையில் உள்ள ஆசிரியர்களது வாண்மைத்துவ செயன்முறையை மேலும் மேம்படுத்தக் கூடியவகையில், செயற்பாடுகளை மேற்கொள்வதற்குப் பொறுப்பாக இப்பிரிவு இருக்கும். இதற்குப் பொறுப்பாக உபபீடாதிபதி (தொடருறு ஆசிரியர் கல்வி) இருப்பார். இவரின் கீழ் பின்வரும் செயற்பாடுகள் நிறைவேற்றப்படும்.

ஆசிரிய மையங்களில் நடாத்தப்படும் தொடருறு ஆசிரியர் கல்வி நிகழ்ச்சித் திட்டங்களைத் தயாரித்தல், ஆசிரியர்களது தேவைகளை அறிந்து, பயிற்சிகளைத் திட்டமிடல், தேசியக்கல்வி நிறுவகம், மாகாண கல்வித் திணைக்களம், வலயக்கல்வித்திணைக்களம், ஆசிரிய மத்திய நிலையங்களுடன் இணைந்து செயலமர்வுகள், கருத்தரங்குகள் நடாத்துதல்.

கல்வியியல் கல்லூரியின் நோக்கக்கூற்றினை அடைவதற்கு இம்மூன்று பிரதான பிரிவுகளினதும் செயற்பாடுகள் இன்றியமையாதவையாகும். இவற்றுக்கும் மேலாக பல்வேறு சபைகளும் குழுக்களும் கல்வியியல் கல்லூரியின் செயற்பாடுகளுக்கு உறுதுணையாக அமைகின்றன. ஆலோசனைச்சபை, முகாமைத்துவசபை, கல்விச்சபை, மதிப்பீட்டுக்குழு, ஒழுக்காற்றுக்குழு மாணவர் நலனோம்பல் குழு தொடருறு ஆசிரியர்கல்வி முன்னேற்றம் மீளாய்வுக்குழு என்பவற்றின் செயற்பாடுகளும் முக்கியமானவையாகும்.

### iii . பங்குபற்றுதல் தீர்மானம் எடுத்தல்

டீரக்கரின் முகாமைத்துவக் கோட்பாட்டில் நிறுவனம் அல்லது தனியாள் அல்லது குழு அதனது குறிக்கோள்களை அடைய வேண்டுமாயின்; செயற்பாடுகள் எவை, அவை எவ்வாறு செய்யப்பட வேண்டும், அதற்கான வளங்கள் எவை? யார் யார் செய்யப்பட வேண்டும், எப்போது செய்ய வேண்டும், செய்து முடிக்க வேண்டும் போன்ற விடயங்கள் குழுநிலையில் கலந்துரையாடப்பட்டு தீர்மானம் மேற்கொள்ளும் போதுதான் குறிக்கோள்கள் எய்தப்பட முடியும்.

கல்வியியல் கல்லூரியைப் பொறுத்தவரையில் பல்வேறு வகையான தீர்மானங்கள் மேற்கொள்ள வேண்டிய தேவை உள்ளது. நிர்வாகம், கல்வி அபிவிருத்தி, ஆசிரியர் வாண்மை விருத்தி, ஒழுக்காற்று நடவடிக்கைகள், இணை பாடவிதான செயற்பாடுகள், உள்ளகப் பயிற்சி செயற்பாடுகள் என பல்வேறு விடயங்களில் தீர்மானங்கள் மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும். இத்தீர்மானங்கள், விரிவுரையாளர்கள் கூட்டங்கள், கல்விசார், கல்விசாரா ஊழியர் கூட்டங்கள் மூலம் எடுக்கப்படுபவை ஆகும்.

தீர்மானங்களை மேற்கொள்ளும் போது சகலரும் ஒன்றிணைந்து ஏகமனதான தீர்மானங்களை எடுக்க வேண்டும். அப்போதுதான் தாம் சார்ந்த குழு, சபை அல்லது நிறுவனத்தின் குறிக்கோள்கள் பற்றிய தெளிவு ஏற்படும். இத்தீர்மானங்களில் தமது நடிபங்கு என்ன? பொறுப்புக்கள் என்ன? என்பது பற்றிய விளக்கம் ஏற்படும். இவ்வாறான தீர்மானங்கள் மூலம் பரந்துபட்ட ஆற்றுகை அமைப்புக்கள் திட்டமிடப்பட்டு வடிவமைக்கப்படும். இதன் காரணமாக நிறுவனத்தின் இலக்கு நோக்கி அனைவரையும் செயற்பட வைப்பது கல்லூரிச் செயற்பாடுகளை முகாமை செய்வது இலகுவாக்கப்படும். மேலும் குழு உணர்வு, குழுச்செயற்பாடு என்பன விருத்தியடையும். செயற்பாடுகள், திட்டங்கள் வினைத்திறனாகவும் விளைதிறன் மிக்கதாகவும் நிறைவேற்றுவதற்கு முகாமையாளர் அதாவது பீடாதிபதியின் பணி இலகுவாக்கப்படுவதன் மூலம் கல்லூரியினை சரியான பாதையில் இட்டுச் செல்ல முடியும்.

நிறுவனத்தின் அங்கத்தவர்கள் ஒவ்வொருவரும் தாம் சார்ந்த நிறுவனத்தில் தனது பொறுப்புக்கள் என்ன? தான் எதற்கு வகைகூற வேண்டும்? என்ன தகவல்கள் எனக்கு வேண்டும்? போன்ற வினாக்களை தான் வினாவுவதன் ஊடாக சுயகட்டுப்பாடு, சுயமுகாமைத்துவம் போன்ற எண்ணக்கருக்கள் விருத்தியாகும். இன்றைய அறிவை அடிப்படையாகக் கொண்ட சமூகத்தில் இவை பிரதான அம்சங்கள் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iv. **கால இடைவெளியை தெளிவாக வரையறை செய்தல்**

குறிக்கோளை எய்துவதற்காக செயற்பாடுகள் குழு ரீதியாக சபைகள், குழுக்கள், அல்லது தனிப்பட்ட ரீதியாக தீர்மானிக்கப்பட்டதன் பின் அவற்றுக்கான கால அட்டவணை தயாரிப்பது பிரதான பணியாகும். வருடாந்த, மாதாந்த, வாராந்த, நாளாந்த வேலைத்திட்டங்கள் என வேலைத்திட்டங்கள் திட்டமிடப்படும். ஒவ்வொரு வேலைத்திட்டத்திலும் செய்யப்பட வேண்டிய செயற்பாடுகள் அவற்றுக்குப் பொறுப்பானவர்கள் அச் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட வேண்டிய கால எல்லைகள் போன்ற விடயங்கள் குழுக்கூட்டத்தீர்மானங்களின் போது உறுதிப்படுத்தப்படும். பின்னர் அச்செயற்பாடுகள் அமுலாக்கப்படும் போது குறிக்கப்பட்ட கால எல்லையில் அவை நிறைவேற்றப்பட்டனவா? இல்லையா? என்பது பொறுப்பு வாய்ந்த விரிவுரையாளர்களினால் அல்லது அலுவலர்களினால் மேற்பார்வை செய்யப்படும். ஒவ்வொரு வேலைத்திட்டங்களில் அடிப்படையில் நிர்வாக, கல்விச் செயற்பாடுகளை பொறுப்பு வாய்ந்த விரிவுரையாளர்கள் மற்றும் பணியாளர்களினால் நிறைவு செய்யப்பட்டு தர உறுதிச்சுட்டிகள் பேணப்படும்.

v. **ஆற்றுகை தரங்கணிப்பீடு - பின்னூட்டல்**

ஆற்றுகைத் தரங்கணிப்பீடு என்பது தனியாள் ஒருவருடைய ஆற்றுகையினூடாக அவருக்கு கொடுக்கப்பட்டுள்ள வேலைக்கிரமத்தின் முன்னேற்றத்தினை மதிப்பீடு செய்கின்ற ஒரு செயன்முறையாகும். தனியாளினதும் நிறுவனத்தினதும் மேம்பாடு கருதி நிறுவனத்தின் முகாமையாளரினதும் வேலை கொள்வோரதும் நடாத்தப்படுகின்ற ஒரு விஞ்ஞான பூர்வமான செயன்முறையே தரங்கணிப்பீடாகும். டிரக்கரின் கோட்பாட்டுக்கு அமைவாக, குறிக்கோள்களை எய்துவதற்கான, தனியாள் அல்லது குழு ஒன்றின் ஆற்றுகைகளை, நிறுவன முகாமையாளர்கள் மதிப்பீடு செய்வது அந் நிறுவனத்தின் மேம்பாட்டிற்கு இன்றியமையாததாகும். நிறுவன அங்கத்தவர்களது எண்ணங்களை ஏற்படுத்தவும் ஆற்றுகைகள் தொடர்பான பின்னூட்டல்களைப் பெறவும், ஆளணி அபிவிருத்திக்கு இன்றியமையாத செயற்பாடாகும்.

கல்விக் கல்லூரிகளைப் பொறுத்தவரையில் ஆற்றுகைக் கணிப்பீடு இரு பிரதான பிரிவாக நடாத்தப்படும். கல்விசார் ஊழியர்களது ஆற்றுகைத்தரக்கணிப்பீடு, கல்விசார் ஊழியர்களது ஆற்றுகைத் தரக்கணிப்பீடு உபபீடாதிபதியுடனும் (கல்வியும் தரமேம்பாடு) விரிவுரையாளர்களுடனும், கல்விசாரா ஊழியர்களது தரக்கணிப்பீடு உபபீடாதிபதி (நிதி நிர்வாகம்) யுடனும் கல்விசாரா ஊழியர்களுடனும் இடம்பெறும். ஆற்றுகைத் தரக்கணிப்பீடு தொடர்பான கலந்துரையாடல்கள், தரக்கணிப்பிடுபவர் தரங்கணிப்பிடப்படுவோருக்கிடையே நடாத்தப்படும் ஒரு உடன்படிக்கையாகும். இருவருக்கிடையே நேருக்கு நேர் கலந்துரையாடலுக்கூடாக இடம்பெறும் இச்செயற்பாடு ஆற்றுகைகள்




அவற்றின் தரம், ஆற்றுகைச் சுட்டிகள், நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள், செயற்பாடுகளின் தரம், செயற்பாடுகளின் சுட்டிகள் என்பனபற்றி கலந்துரையாடப்படும். இவற்றூடாக பணியாளர்கள் தமது பதவியுயர்வு, மேம்பாடு என்பவற்றினை பெற்றுக்கொள்வதுடன் தனியாள் ஆளணி அபிவிருத்தியும் ஏற்பட ஏது நிலைகள் தோன்றும்.

மேலும் குழுவேலை, குழுச்செயற்பாடுகள், சுயமுகாமைத்துவம் போன்ற எண்ணக்கருக்களிற்கு அடிப்படையான அம்சங்கள் கல்விக்கல்லூரிச் செயற்பாடுகளில் இன்றியமையாதவையாகும். டிரக்கரின் இக்கோட்பாடுகள், குறிக்கோள்கள் நோக்கிய நிறுவனங்களின் செயற்பாட்டிற்கு உறுதுணையாக அமைவனவாகும். நோக்கக்கூற்று குறிக்கோள்களின் அடிப்படையில் இயங்கும் கல்வியியல் கல்லூரி போன்ற நிறுவனங்களில் தனியான குறிக்கோள்களை வரையறுத்தல், பொறுப்புக்களை பகிர்ந்து அளித்தல், பங்கு பற்றித் தீர்மானம் எடுத்தல், கால அட்டவணையைத் தீர்மானித்தல், ஆற்றுகைகளை கணிப்பிடுதல், பின்னூட்டல், குழுவேலை, குழுச் செயற்பாடு, சுயகட்டுப்பாடு, சுயமுகாமைத்துவம் போன்ற அம்சங்கள் டிரக்கரின் கோட்பாட்டிற்கு அமைவான இவ்அம்சங்கள் கல்வியியல் கல்லூரியின் செயற்பாடுகளிலும் அவற்றின் வெற்றிக்கு உறுதுணையானவையாகும். அறிவுசார் ஊழியர்களை பயிற்றுவித்து வெளிவேற்றும் கல்வியியல் கல்லூரி போன்ற நிறுவனங்களின் தரமேம்பாடும் தரஉறுதிப்பாடும் இக்கோட்பாட்டினால் மேலும் வலுப்பெறக்கூடியனவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெ.பேரின்பராசா

# விக்கின்ஸ்டைனின் மொழிவாதச் செல்வாக்கு

## ஆசிரியர்களின் கற்றல் கோட்பாட்டில் விக்கின்ஸ்டைனின் மொழிவாதச் செல்வாக்கு

20 ஆம் நூற்றாண்டு மெய்யியல் வளர்ச்சியில் பிரதான இடம் வகிப்பவர் லுவிக் விக்கின்ஸ்ரைனும் ஒருவராவார். மொழியியலில் ஏற்படக்கூடிய குழப்பங்களைக் கூறுவதன் மூலமாக தெளிவான மொழியின் அவசியத்தை விக்கின்ஸ்ரைன் எடுத்து விளக்கினார். சாதாரண மொழி இலகுவில் புரியக் கூடிய ஒன்று அல்ல என அவரால் முன்வைக்கப்பட்டது. மெய்யியல் எவ்வாறும் எல்லைக்கும் அப்பால் சாதாரண கல்வி நடவடிக்கைகளிலும் கற்றல் பாங்குகளிலும் சாதாரண மொழியின் பங்களிப்பு அண்மைக்காலமாக விமர்சிக்கப்பட்டு வருகின்றது.

கற்பித்தல் முறைகளில் காணப்பட்ட கடத்தல் வகிபாகம், கொடுக்கல் வாங்கல் வகிபாகம் என்பவற்றில் மொழியின் செல்வாக்கு கற்றலின் பின்னடைவான தன்மையையே ஏற்படுத்தியது. இதன் விளைவாகவே கட்டுருவாக்க கற்றல் நிலையும் நிலைமாற்று வகிபாக ஆசிரிய நடிபங்கும் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் மேலோங்கின.

"சாதாரண மொழி எம்மை ஏமாற்றுவாய்" என்னும் விக்கின்ஸ்ரைனின் கூற்று இவ்வேளையில் மிக ஆழமாக நோக்கத்தக்கது. மொழிகளில் தெளிவின்மை இருக்கின்றது என்பது இதன் சாராம்சமாகும். இதனூடாகவே விக்கின்ஸ்ரைன் "தனிப்பட்ட மொழிவாதம்" என்னும் கோட்பாட்டினை முன்வைக்கிறார். உளவியல் பூர்வமான ஒரு செயற்பாடாக தனிப்பட்ட மொழிவாதம் முன்வைக்கப்பட்டாலும் ஆசிரியர் கற்கும் பாங்குகளிலும் இதனை தொடர்புபடுத்திப் பார்க்க முடியும்.

ஆசிரியத் தொழிலானது நம் காலத்தில் 25 வயது முதல் 60 வயது வரை நீடிப்பதை காண்கின்றோம். இக்கால கட்டத்துக்குள் ஒருவர் ஒரே வகையான கற்றல் முறையை பின்பற்ற முடியாது. தனியாள் வேறுபாட்டிற்கமைய அனைவருக்கும் பொதுவான கற்றல் முறையையும் தீர்மானம் செய்யவும் முடியாது. பாடசாலை மாணவர்கள் கற்கும் பாங்குகளில் இருந்து ஆசிரியர்கள் கற்கும் பாங்குகள் வேறுபட்டவையாகும். ஆசிரியர்களின் கற்றல் பாங்குகளில் புலக்காட்சி பெறுதல், செயற்படுத்தும் பாங்கு, ஒழுங்கமைத்தல், முன்வைப்பு செய்தல் முதலியன இடம்பெறும். இத்தகைய சந்தர்ப்பங்களின் போதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்கின்ஸ்ரைனின் பிரத்தியேக மொழி தொடர்பான விடயம் ஒப்பிட்டு நோக்குதற்குள்ளாகும்.

புலக்காட்சி பெறுதல் என்பது புலன்வழியாக தகவல் திரட்டுதலைக் குறிக்கும். இது புலனுணர்வுக ளுடன் தொடர்புடைய விடயமாகும். விக்கின்ஸ்ரைன் முன்வைக்கும் பிரத்தியேக மொழியானது மொழி சுய மாக முன்வைக்கப்படுவதையும் மொழி முன்வைக்கப் படும் போது மொழியை முன்வைப்பவனுக்கு மட்டுமே அது விளங்ககூடியதாக இருக்கும் என்பதனையும் குறிப்பிடுகிறது. பிரத்தியேக மொழி என்னும் எண்ணக்கரு பிரத்தியேகமான மொழியின் செயற்பாடு ஒருவருடைய பிரத்தியேகமான புலனுணர்வினால் முன் வைக்கப்படுவதால் அம்மொழியை அவரைத்தவிர வேறொருவர் விளங்கிக்கொள்வது கடினமாகும். இத னால் மொழியை சமூகமயமாக்கம் செய்யும் மொழியியல் பணியில் விக்கின்ஸ்ரைன் ஈடுபட்டார்.

விக்கின்ஸ்ரைனின் பிரத்தியேக மொழி என்றால் யாது? ஒருவன் தனது பாவனைக்காகவும் தனது செயற்பாட்டிற்காகவும் உருவாக்குவதே பிரத்தியேகமான மொழியாகின்றது. ஒருவர் தனது தேவைக்காக உருவாக் கும் சொல், ஒருவர் தனது தேவைக்காக உருவாக்கும் எழுத்து, ஒருவர் தனது தேவைக்காக உருவாக்கும் மொழி என்பன அவரது கற்றல் பாங்குடன் நெருங்கிய தொடர்பை உடையதாகும். இவ்வாறு ஒருவர் தனது சூழலில் தனது தேவை கருதி உருவாக்கும் மொழி இன்னு மொருவரால் உருவாக்க முடியுமா? என்னும் வினாவை எழுப்புகிறார். இவருடைய வினாவில் அர்த்தம் ஒன்று பொதிந்துள்ளமை அவதானிக்கப்படுகிறது. ஒரே தலைப்பினை ஒரே மாணவ குழுவிற்கு இரு ஆசிரியர்களை தனித்தனியாக கற்பிக்கா விட்டால் ஒரேமாதிரியாக கற்பிப்பார்களா? என்னும் வினா இங்கு எழுப்பப்படுகிறது.

கற்றல் என்பது தனியாகவே இடம்பெறும் விடய மாகும். கற்றல் தனியாள் மயமானது. குழுவாகவோ அல்லது இருவர் இணைந்தோ கற்பாராயினும் கற்றல் இடம்பெறும் விதம் இருவருக்கும் ஒருவிதமாக அமைந் திருக்கமாட்டாது. கற்றல் இருவிதமாகவே அமைந்திருக் கும். இதற்கு அவர்களது புலனுணர்வு தொடர்பான மொழியே காரணமாகும். மொழியை உள்வாங்கும் போது ஏற்படக்கூடிய தெளிவின்மைகள் சர்ச்சைக்குரிய கருத்துக்கள் கலந்திருத்தல் என்பன இங்கு தொடர்புபடுத் தப்படுகின்றன. பிரத்தியேக மொழி என்னும் கருத்து பிரத்தியேக புலனுணர்வு என்பதோடு தொடர்புடையதா கும். பிரத்தியேக சமூக அடிப்படைகளும் இதற்கு கார ணமாகும். தனியாட்கள் பிரத்தியேகமான புலனுணர்வை உடையவர்களாவர். பிரத்தியேகமான புலனுணர்வுகளுக் குள்ளால் வெளிப்படும் மொழியை வேறொருவர் விளங் கிக்கொள்வது கடினமாகிறது. ஒரு உயிருக்கு மட்டும் புரிவதும், ஒரு உயிருக்கு மட்டும் தெரிவதும் புலன் உணர்வூடாக வெளிப்படுவதால் அதனைப் பிறர் புரிந்து கொள்வது கடினமாகவே அமைகிறது.

விக்கின்ஸ்ரைனின் பிரத்தியேக மொழி என்பது எனக்கு புரிவதுபோல் தோன்றும். ஆனால் பிறர் ஒரு வருக்குப் புரியாத ஒலி ஆகும். பிறருக்கு ஒலியாக கேட்கும் போதே மொழியாக மாறும் என விமரிசனம் செய்யப்படுகின்றது. நோமல்மல்கம், கார்ல்ரோஜர் போன்றவர்கள் இத்தகைய பிரத்தியேக மொழி பற்றிய உளவியலை முன்வைத்துள்ளனர். எமது பிரத்தியேக புலனுணர்வாலும் பிரத்தியேக அனுபவங்களாலும் எமக்கு ஒரு மொழி புரிவதுபோல் இருப்பதனால் அது பிரத்தியேக மொழியாகவும் பிறருக்கு புரியாத மொழி யாகவும் முன்வைக்கப்படுகிறது.

ஒருவர் சிந்திக்கிறார் என்றால் யாது? அவர் தனக்குள் தானே பேசிக்கொண்டிருக்கிறார் எனப் பொருள்படுகின் றது. ஒருவர் தனக்குத் தானே பேசிக் கொண்டிருப்பது தனியான ஒரு மொழியாக மாறுமா? என வினா எழு கிறது. இதன் மூலம் சில இடங்களில் பிரத்தியேக மொழி யின் வலிதற்ற தன்மை பற்றியும் கூறிச்செல்கின்றார். பிரத்தியேக மொழி அறிவு வாதத்தில் அல்லது அனுபவ வாதத்தில் அடங்கக்கூடியதா? என்னும் விமரிசனமும் அதன் வலிதற்ற தன்மைக்கு கோடிடுகிறது. ஆனாலும் ஒரு கற்றல் பாங்கு என்னும் முறையில் உளவியல் தனித்துவமிக்கதாக அமைந்து விடுகிறது.

ஜோன் லொக்கின் அனுபவவாதம் அனுபவவாத அறிவுக் கோட்பாட்டில் முதன்மை பெறுகின்றது. லொக்கின் அனுபவ வாதத்தில் இருவகை கருத்துக்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

(1) தனக்கும் பிறருக்கும் பொருந்தும் அனுபவவாதம்

(2) தான் மட்டும் உணரும் அனுபவவாதம்

அனுபவ அறிவினை முதன்நிலை அனுபவ அறிவு என்றும் இரண்டாம் நிலை அறிவு நிலை என்றும் இவர் குறிப்பிடுகிறார். இரண்டாம் நிலை அனுபவ அறிவில் ஒரு உணவின் சுவையை அனுபவிப்பது போலவே உள வியல் ரீதியாக மொழியை புரிந்துகொள்ளும் தன்மை யையும் இருப்பது ஒப்பிடப்படுகின்றது. சுவையை ஒருவன் உணரலாம். ஆனால் அதனை விபரமாக வெளிப் படுத்தி வெளியில் கூறமுடியாது. அது போலவே பிரத்தி யேக மொழி உளவியல் ரீதியாக ஒருவர் தனக்குத் தானே விளங்கும் மொழியாக அமைகிறது.

கார்ல்ரோஜர் என்னும் மனிதாபிமானம் மிக்க உளவியலாளர் ஒரு மனிதனுக்கு சுதந்திர விருப்பத் தெரி வும் பொறுப்புணர்ச்சியும் இயல்பாகவே இருக்கின்ற தென குறிப்பிடுகின்றார். ஒவ்வொருவரிடமும் இயல் பாகவே காணப்படும் உள்ளார்ந்த மன இயல்பு ஒரு வகை சுய உந்தலாக அமைகின்றது. "எனக்குள் இருக்கும் நான்" "எனக்குள் இருக்கும் சுயம்" "எனது சுயாதீனம்" என்பவற்றை உணரும் போது அவையே ஆசிரியர் கல்விக் கான புதிய உந்தலாக அமைகிறது என கார்ல்ரோஜர் சுட்டிக்காட்டுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்பு ஜவஹர்ஷா

# நமது பிரச்சினைகளுக்கு ஆசிரியத்தில் தீர்வுகள்

ஆசிரியன்



**வினா:** *நான் கடமையாற்றும் பாடசாலையில் 1015 பிள்ளைகள் உள்ளார்கள். ஆசிரியர் குழாத்தில் அதிபர் தரத்தில் ஐவர் உள்ளனர். அதிபர், பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள் என பதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இவர்கள் கற்பித்தல் பணியில் எவ்வளவு நேரம் ஈடுபட வேண்டும்?*

**விடை:** உங்கள் பாடசாலையில் உள்ள ஆசிரியர்களின் தொகைப்பற்றி குறிப்பிடவில்லை. ஆசிரியர் தேவை தொடர்பாக 2003.11.07 அன்று வெளியிடப்பட்ட 2003/38 இலக்க சுற்றறிக்கைப்படி உங்கள் பாடசாலையில் அதிபர் ஒருவரும், பிரதி அதிபருமே இருக்க முடியும். மற்றைய தரம் உள்ள ஏனையோர் மேலதிகமானவர்கள் ஆவார்கள். அதிபர் கற்பித்தல் பணியில் இருந்து விடுவிக்கப்படுவார். பிரதி அதிபர் 10 பாடவேளையும், மாணவர் தொகையைப் பொறுத்து உதவி அதிபர் இருந்தால் 18 பாடவேளையும் கற்பிக்க வேண்டும். இதற்கு மேலதிகமாக ஆரம்பப் பிரிவில் 251-500க்கும் இடையில் மாணவர்கள் இருந்தால், இடைநிலை (6-11) பிரிவில் 200-300 மாணவர்கள் இருந்தால் மேற்பார்வை ஆசிரியர்கள் இருவருக்கு இடமுண்டு. இவர்கள் ஆசிரியர் சேவையில் உள்ளவர்களாக இருக்க வேண்டும். இவர்களும் 16 பாடவேளை கற்பிக்க வேண்டும். ஆலோசனை பணிக்குப் பொறுப்பாகவுள்ள ஆசிரியர் 300 மாணவர்களுக்கு மேற்பட்ட பாடசாலைகளில் கற்பித்தல் பணியில் இருந்து முழுமையாக விடுவிக்கப்படுதல் வேண்டும். 300க்கு குறைவாக இருந்தால் வாரமொன்றுக்கு 10 மணி நேரம் ஆலோசனை பணிக்கு வழங்கப்பட வேண்டும். பொதுவாக ஆசிரியர்கள் 35 பாடவேளைகளும், வகுப்புக்கு பொறுப்பாகவுள்ளவர்கள் 33 பாடவேளைகளும், க.பொ.த (உ/த) வகுப்பு ஆசிரியர்கள் 30 பாடவேளையும் கற்பித்தல் பணியில் ஈடுபட வேண்டும்.

**வினா:** *ஆசிரியரான எனது தங்கையின் கணவரும் ஆசிரியராவார். இவர் கடந்த இரண்டாம் திகதி காலமாகிவிட்டார். இவரது இந்த மாதச் சம்பளத்தை பெற்றுக்கொள்ள முடியுமா?*

**விடை:** அரசாங்கத்தின் தாபன விதிக்கோவை ஏழாம் அத்தியாயத்தின் பதினொராம் பிரிவில் இது பற்றி

பின்வருமாறு கூறப்பட்டுள்ளது. கடமையில் இருந்த உத்தியோகஸ்த்தர் ஒருவருக்கு சேர வேண்டிய வேதனமும் படிகளும் அவர் இறந்த மாதத்தில் இறுதி நாள்வரை கடமையாற்றியவராக கருதப்பட்டு முழுமையாக அவரின் மனைவிக்கு அல்லது உரித்துடைய அடுத்த உறவினர்களுக்கு வழங்கப்படும். ஆயினும் அவர் இறக்கும் போது சம்பளமற்ற லீவில் இருந்திருக்கக் கூடாது. ஆகவே முதலாம் திகதி மட்டும் கடமையில் இருந்தாலும் கூட உங்களது தங்கைக்கு அரசாங்க ஊழியராக இருந்தாலும் கூட அம்மாதச் சம்பளம் உரிமையானது. பெற்றுக்கொள்ளலாம்.

**வினா:** ***2005/4 இலக்க கல்வி அமைச்சின் சுற்றறிக்கைப்படி எனக்கு 2005.07.01 தொடக்கம் இலங்கை ஆசிரியர் சேவையில் இரண்டாம் வகுப்பு முதலாம் தரம் கிடைத்தது. இன்று 6 வருடங்கள் பிந்திவிட்டது. எனக்கு முதலாம் வகுப்பு எப்போது கிடைக்கும்?***

**விடை:** டிசம்பர் மாத இதழில் இதற்காகச் சுற்றறிக்கையொன்று வரவேண்டும் என்று பதிலளித்து இருந்தேன். 2010/30 இலக்கமிடப்பட்ட 2011.11.11 திகதிய சுற்றறிக்கை கல்வி அமைச்சின் செயலாளரால் சகல மாகாண அரச சேவை ஆணைக்குழு செயலாளர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. இவை வலயக் கல்விக் காரியாலயங்களுக்கு கிடைத்தவுடன் 2010.07.01 தொடக்கம் ஆசிரியர் சேவை முதலாம் வகுப்பு பதவி உயர்வு உங்களுக்கு வழங்கப்பட்டு ரூபா. 21,645 x 645 - 30,030 சம்பளத் திட்டத்தில் ஆரம்பப் படியான ரூபா 21,645 சம்பளத்தில் வைக்கப்பட்டு 2011.07.01 திகதி முதலாவது வருட சம்பள ஏற்றம் வழங்கப்பட்டு இன்று 22,290 ரூபா அடிப்படைச் சம்பளம் கிடைக்க வேண்டும். அத்தோடு 2010.07.01 தொடக்கம் நிலுவையும் கிடைக்க வேண்டும்.

**வினா:** ***2000.07.12 ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் சேர்ந்த நான் பயிற்றப்பட்ட ஆசிரியராக 2002.05.14 அன்று பயிற்சியை முடித்து வெளியேறினேன். எனக்கு 2008.08.01 தொடக்கம் செயல்படும் பயிற்சிச் சான்றிதழே கிடைத்துள்ளது. இது சரியா?***

**விடை:** ஆசிரியர் பயிற்சி பொதுவாக முழுமையாக இரண்டு வருடங்களைக் கொண்டிருக்கும். சில தாமதங்களால் வருட முற்பகுதியில் சேராமல் இடையில் சேர்க்கப்படும் சந்தர்ப்பங்களும் உண்டு. இறுதிப்பரீட்சை முடியும் திகதியும் முழுமையான காலமுமே இங்கு கவனத்தில் எடுக்கப்படும். 82, 84 வருடங்களில் ஜனவரியில் சேர்ந்தவர்களுக்கு மார்ச் முதலாம் திகதி தொடக்கம் செயல்படும் சான்றிதழ் வழங்கப்பட்ட சம்பவங்களும் உண்டு. இதை தீர்மானிப்பது பரீட்சைத் திணைக்களமே. இதன்படியே சான்றிதழில் செயல்படும் திகதி இடப்படும். உங்களது செயல்படும் திகதி சரியானதே.

**வினா:** ***எங்கள் பாடசாலையில் வசதிகள் சேவைகள் கட்டணம், குணநலன் தொடர்பாக வவுச்சர்களில் அதிபர் மட்டுமே கையொப்பம் இட்டு காசோலைகள் எழுதி வழங்கப்படுகின்றது இது சரியா?***


**விடை:** நிதி பிரமாணங்களின்படி பாடசாலையாக இருந்தாலும், காரியாலயமாக இருந்தாலும் சரி ஒருவர் சிபாரிசு செய்து இன்னொரு உறுதியளித்தப் பின்னரே நிதி வழங்க மூன்றாவது நபர் அனுமதி வழங்க வேண்டும். இது பாடசாலையைப் பொறுத்தளவில் ஒழுங்கின்படி உதவி அதிபர், பிரதி அதிபர், அதிபர் என்ற பதவிகளாக இருக்கலாம். இந்த மூவரின் கையொப்பம் இல்லாமல் காசோலையொன்று எழுதப்பட முடியாது. 9,675 பாடசாலகளுக்கும் உள்ளக கணக்காய்வு அதிகாரிகள் செல்வது இல்லை சென்றால் தவறு கண்டுபிடிக்கப்பட்டு நிதி மோசடி தொடர்பான குற்றச்சாட்டுக்கு ஆளாக வேண்டும். முகாமைத்துவ கருத்தரங்குகளில் நிதி விடயங்களை எவ்வாறு கையாள்வது என்பது தொடர்பான விடயங்கள் உரிய வளவாளர்களால் விளங்கப் படுத்துவது குறைவாகும். சில அதிபர்கள் வெறும் காசோலைகளில் பிரதி அதிபர்களின் அல்லது சிரேட்ட ஆசிரியர்களின் கையொப்பங்களை வாங்கி வைத்துக்கொண்டு காரியங்களை நிறைவேற்றுகின்றார்கள். அதிபர்கள் கையொப்பம் இருந்தாலும் கூட வவுச்சர்கள் மேல் சொல்லியப்படி பூரணப்படுத்தப்படாவிட்டால் பிரதி அதிபர்களோ, சிரேட்ட ஆசிரியர்களோ இரண்டாவது கையெழுத்தை வைக்கக்கூடாது. நம்பிக்கை என்ற மனித பண்புகளுக்கு இங்கு இடமில்லை.

**வினா:** ***இரண்டாம் வகுப்பு முதலாம்தர அதிபராகிய நான் 2003.09.15 திகதி நடைபெற்ற தடைத் தாண்டல் பரீட்சையில் தாபன விதிக்கோவையின் ஒழுங்கு விதிகள் பாடத்தில் 51 புள்ளிகளும், பாடசாலைகளின் நிதி நிருவாகம் என்ற பாடத்தில் 37 புள்ளிகளும், கல்வி நிருவாகம் மற்றும் மேற்பார்வை என்ற பாடத்தில் 65 புள்ளிகளும் பெற்று இருந்தேன். 2006.10.14 அன்று நடைபெற்ற பரீட்சையில் பாடசாலைகளின் நிதி நிருவாகம் என்ற பாடத்தில் 51 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளேன். எனக்குத் தடைதாண்டலில் விதிவிலக்கு கிடைக்குமா?***

**விடை:** கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் கே. முஹமட் தம்பி அவர்களின் 2008.08.25 இலக்க கடிதம் பின்வருமாறு உங்களுக்கு விமோசனம் அளிக்கின்றது. அதில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"இலங்கை அதிபர் சேவையின் 1997, 1998, 1999, 2003 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற தடைத்தாண்டல் பரீட்சைகளில் சித்தியடையாத பாடங்களை 2005 (2006) வருடம் சித்தியடைந்தால் தடைத்தாண்டல் பரீட்சையில் முழுமையாக சித்தியடைந்ததாக கருதி செயற்படுமாறு இத்தால் அறிவிக்கின்றேன்" என உள்ளது. இந்த கடிதத்தில் முதலில் தோற்றிய பரீட்சை நடைபெற்ற திகதி தொடக்கம் என்று குறிப்பிடப்பட்டு இருக்காவிட்டாலும் சில வழக்குகளால் அவ்வாறு கருத்தில் கொண்டு முதல் பரீட்சை திகதியில் இருந்து விதி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

**வினா:** *2000.08.04 தொடக்கம் செயல்படும் 2-II அதிபர் நியமனம் பெற்று பதவியைப் பொறுப்பு எடுத்த நான் ஆசிரியர் சேவை முதலாம் வகுப்பு நியமனத்தின்படி சம்பளத்தை தொடர்ந்து பெற்று வருகின்றேன். எனக்கு 2008.01.01 தொடக்கம் 2-I தர அதிபர் உயர்வும் கிடைத்தது. இவ்வாறு சம்பளம் பெறுவது தவறு என்று சில சொல்கின்றார்கள். இதன் உண்மையான நிலை என்ன?*

**விடை:** 2000.08.04 அன்று தொடக்கம் அதிபர் சேவை நியமனத்தை பெற்ற நீங்கள் அன்று தொடக்கம் 250 ரூபா வருடாந்த சம்பள ஏற்றத்தையும், 01.12.2004 தொடக்கம் 350 ரூபா சம்பள ஏற்றத்தையும், 01.06.2007 தொடக்கம் 400 சம்பள ஏற்றத்தையும் பெறவே உரித்துடையவர் ஆவீர். 2008.01.01ல் கிடைத்த 2-I தர அதிபர் பதவி உயர்வின் பின்னர்தான் 645 ரூபா சம்பள ஏற்றத்தைப் பெறலாம். ஆகவே நீங்கள் ஓய்வு பெற முன்னர் உங்கள் சம்பளத்தை சரி செய்து கொள்ளுங்கள். ஆசிரியர் சேவைக்கு திரும்பிச் செல்லலாம். அல்லது ஆசிரிய சம்பளத்தை தொடர்ந்து பெறலாம் என்ற விடயங்கள் சாத்தியமாகும் சாத்தியகூறுகள் இல்லை. தொடர்ந்து இவ்வாறு நீங்கள் சம்பளம் பெற்றுக் கொண்டிருந்தால் ஓய்வு பெறும்போது பெரும் சிக்கல்களை எதிர்நோக்க நேரிடும். நான் அறிந்த உங்களைப் போன்ற அதிபர் ஒருவர் கணக்காய்வின் போது ஓய்வூதியப் பணிக்கொடையில் 3½ இலட்ச ரூபாவை இழக்க வேண்டியதாயிற்று.

**வினா:** *1985ஆம் ஆண்டு தொடக்கம் இருவருடம் வேலைவாய்ப்பு பெற்று அரசாங்க அனுமதியுடன் வெளிநாடு சென்று மீண்டும் சேவையில் சேர்ந்து கடமையாற்றி வருகின்றேன். எனக்கு 1985, 1986 ஆகிய இரண்டு வருடங்களுக்கு சம்பள ஏற்றம் கிடைக்கவில்லை. இதைப் பெற்றுக்கொள்ள வழி இல்லையா?*

**விடை :** விடுதலையில் இருக்கும் காலப்பகுதியில் உத்தியோகத்தரது சேவை, நடத்தை தொடர்பாக எதுவித முறைப்பாடும் கிடைக்காதவிடத்து அவர் சேவையிலிருப்பின் வழங்க வேண்டிய வருடாந்தப் படியேற்றங்கள் வழங்கப்படும். இந்த சம்பள ஏற்ற நன்மையை பெற்றுக் கொடுக்கும் போது சம்பளமற்ற லீவு காலத்திற்குரிய காலத்துக்கு மட்டும் நிலுவைப்பணம் வழங்கப்படமாட்டாது. பின்னர் சேவையில் சேர்ந்த பின்னர் சம்பளம் வழங்கும் போது அக்காலத்தில் அவருக்குரிய சம்பள ஏற்றப் பெறுமதிகளை சேர்த்து சம்பளம் பெற்றுக்கொள்ளும் உரிமை உங்களுக்கு உள்ளது. ஆனால் இச்சம்பளமற்ற விடுதலைக் காலம் ஓய்வூதியக் கணிப்பின்போது கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது. அத்தோடு பதவி உயர்வின்போது இந்த சம்பளமற்ற சேவைக்காலம் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது. ஐந்து வருடத்திற்கு மேல் இவ்வாறான லீவைப் பெற்றுக்கொள்ளவும் முடியாது. இது அனுமதி பெற்று வெளிநாட்டு வேலை வாய்ப்பை பெற்றுச் சென்றவர்கள் தொடர்பாக உள்ள நியதிகளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்...



# குழந்தைக்கல்வி -4

சு.சிவனேஸ்வரி

**குழந்தைகளின் கல்வியும் முன்பள்ளி ஆசிரியர்களின் பங்கும்**

"எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே, அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே" என்பது முன்னோர் கண்ட கூற்று. ஆனால் தற்போது குழந்தைகள் நல்லவராவதும் தீயவராவதும் ஆசிரியர் வழிகாட்டலிலே என்பதே மிகவும் பொருத்தமானதாகும்.

ஒரு குழந்தையானது தாயின் கருவறையிலிருந்து இவ் உலகைக் காணுவதற்கு வெளிவந்தபின் தனது தாய் தந்தை உறவினர் நண்பர் அயலவர்களென அறிந்து பல்வேறுபட்ட விடயங்களைத் தெரிந்து கொள்கின்றான். ஒரு குழந்தை தனது ஐம்புலன்களினினூடாக அறிந்து கொள்கின்ற விடயங்களில் நல்லவையும் இருக்கலாம், தீயவையும் இருக்கலாம். ஆனால் அவற்றுள் நல்லவை, கெட்டவை எது எனத் தெரியாமலேயே அறிந்து கொண்ட விடயங்களைத் தன் மழலை மொழியினாலும் முல்லைச் சிரிப்பினாலும் மற்றையவர் மனதைக் கொள்ளை கொள்கின்ற குழந்தை தான் அறிந்து கொண்ட விடயங்களை வெளிப்படுத்துகின்றபோது வீட்டிலுள்ள உறவினர்களோ அன்றி நண்பர்களோ யாருமே பொருட்படுத்துவதில்லை.

இவ்வாறு பல்வேறுபட்ட சூழலில் இருக்கின்ற குழந்தைகள் மூன்று வயதானதும் ஆரம்பக் கல்வியினைப் பெறுவதற்காக முன்பள்ளிகளில் வந்து சேருகின்றனர். முதன் முதலில் தாயைப் பிரிந்து வரும் குழந்தை தனது ஆசிரியரைக் காணுகின்ற போதினில் தனது தாய்க்கு ஒப்பான அன்பினையே எதிர்பார்த்து நிற்கின்றது. அதே போன்று ஒவ்வொரு முன்பள்ளி ஆசிரியரும் தன்னால் எவ்வளவு அன்பினை முழுமையாகக் கொடுக்க முடியுமோ அவ்வளவுக்கவ்வளவு அன்பினைக் காட்டி குழந்தைகளைத் தன் வசப்படுத்துகின்றனர்.

முதலில் பாடசாலைக்கு வரமறுக்கின்ற குழந்தை படிப்படியாக பாடசாலைவிட்டு வீடு செல்வதற்கு தயக்கம் காட்டுகின்றது. எங்கே பாடசாலை விட்டு சென்றோமேயானால் ஆசிரியரை விட்டு செல்ல வேண்டுமே என்கின்ற ஏக்கம் குழந்தையின் மனதில் குடிகொள்கின்றது. ஒவ்வொரு குழந்தையுமே பல்வேறுபட்ட குணவியல்புகளைக் கொண்டவை. தனியாள் வேறுபாடுகளையுடையவை. அவ்வாறான குழந்தைகளை ஒன்று சேர்த்து ஒவ்வொரு குழந்தைகளும் விரும்புகின்ற வண்ணம் குழந்தைகள் தாம் கற்கின்றோம் என்றறியாது கற்பதற்கான கல்வியினை எவ்வாறு வழங்கலாமென குழந்தைகளுக்காகவே சிந்தித்து செயலாற்றுபவர்கள் முன்பள்ளி ஆசிரியர்கள்.

அனைத்துக் குழந்தைகளுமே விளையாடுதல், பாடுதல், ஆடுதல் என்பன போன்ற செயற்பாடுகளை மிகவும் விரும்புவார்கள். எனவே அவர்களின் விருப்பிற்கேற்ப குழந்தை சலிப்படையா வண்ணம் குழந்தை விரும்புகின்ற விளையாட்டையோ அன்றி பாடலுடன் கூடிய ஆடலினையோ வழங்குகின்ற போது குழந்தை அதன்பால் ஈர்க்கப்பட்டு ஆசிரியர் எவ்வாறு செய்கின்றாரோ அதனையே தானும் பிரதிபலிக்கும்.

ஒரு தாயானவள் வீட்டினில் தனது குழந்தைகளுக்கு மாத்திரமே தனது பாசத்தையும் அன்பினையும் ஊட்டி ஊட்டி வளர்க்கின்றாள். ஆனால் ஒரு முன்பள்ளி ஆசிரியையானவள் ஒரே நேரத்தில் பல பிள்ளைகளுக்கு தாயாய், தந்தையாய், நல்ஆசானாய், சிறந்த தாதியாய் எனப் பல்வேறுபட்டவளாகிறாள்.

ஆசிரியர்களே எதிர்காலச் சிற்பிகளை உருவாக்குபவர்கள் எனப் போற்றப்படுகின்றனர். ஒரு குழந்தையானது தனது ஆரம்பக் கல்வியினை சிறந்த முறையினில் கற்றுத்தேறுமேயானால் அக்குழந்தை எதிர்காலத்தைச் சிறப்பாக எதிர்கொண்டு வரும். மேலும் சவால்களை எதிர் நீச்சல் போட்டு வென்று தனது இலட்சியக் கனவுகளை நிறைவேற்றும். எனவே ஒரு குழந்தையின் கல்வி வளர்ச்சியில் முன்பள்ளி ஆசிரியரின் பங்கு என்ன என்பது மிகவும் முக்கியமானதொன்றாகும்.

ஒரு குழந்தை தனது முன்பள்ளி வாழ்க்கையினை எவ்வளவுக்கெவ்வளவு மகிழ்ச்சியாக களிக்கின்றதோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனைப் பார்வையிடுகின்ற ஆசிரியர் அக்குழந்தையின் மகிழ்வினைப் போன்று பன்மடங்கு மகிழ்வடைகின்றார். குழந்தையின் மகிழ்ச்சியே தனது மகிழ்ச்சி என வாழ்பவரும் ஒரு முன்பள்ளி ஆசிரியரே.

தன்னிடம் ஆரம்பக் கல்வியினைப் பெற்ற ஒரு குழந்தை எதிர்காலத்தில் சிறந்தவராக விளங்குவதனை கேள்விப்படுகின்ற சமயத்தில் அவ் ஆசிரியரானவர் "அக்குழந்தையை மண்ணில் ஈன்றபொழுது எவ்வாறான மகிழ்வடைந்தாளோ தாய், அதனைப் போன்று பன்மடங்கு உவகையுறுகின்றாள் ஆசிரியை."

எந்த நிலையில் இருக்கும் குழந்தையையும் ஒரே மாதிரியான கண்ணோட்டத்தில் நோக்கி குழந்தைகளின் மகிழ்ச்சியே தனது மகிழ்ச்சி என குழந்தைகளோடு தானும் ஒரு குழந்தையாகின்றார் முன்பள்ளி ஆசிரியர். ஒவ்வொரு குழந்தைகளினதும் திறமைகள், தனித்துவங்கள், அவர்களின் ஆளுமைப் பண்புகள் முதலானவற்றை இனங்கண்டு அவர்களுக்காகவே தன்னை அர்ப்பணிக்கும் திறன் முன்பள்ளி ஆசிரியர்களுக்கேயுரிய உயரிய பண்பு ஆகும்.

**ஒரு முன்பள்ளி ஆசிரியருக்கு இருக்க வேண்டிய பண்புகள்**

- தாயுள்ளம் கொண்டவராக இருத்தல்.
- சிறந்த வழிகாட்டல், ஆலோசகராக இருத்தல்.
- நற்பண்புகளையும், தூய சிந்தனைகளையும் உடையவராக இருத்தல்.
- விளையாட்டு, கலைகளில் ஆர்வமுடையவராக இருத்தல்.
- பெற்றோர்கள் மற்றும் ஏனைய அனைவருடனும் சுமுகமாகப் பழகும் ஆற்றலுடையவராகவும், நல்லுறவைப் பேணுபவராகவும் இருத்தல்.
- சகிப்புத்தன்மை, பொறுமை என்பன உடையவராக இருத்தல்.
- சூழலை நன்கு விளங்கிக்கொள்பவராகவும், ஆராய்ந்து நோக்கும் திறன், தேடியறியும் திறன் என்பன உடையவராக இருத்தல்.
- பிள்ளைகள் விரும்பும் வண்ணம் செயற்படுபவராயும் அதேவேளை வகுப்பினை தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்க கூடியவராகவும் இருத்தல்.
- பிள்ளைகளுடைய விருப்பங்களைப் புரிந்து அவர்களுடன் இணைந்து பிள்ளைகளின் பிள்ளைகளாக செயற்படக்கூடியவராகவும் இருத்தல்.
- ஆடல் பாடல் விளையாட்டு மூலம் கல்வியினை முன்னெடுத்துச் செல்லக்கூடியவராக இருத்தல்.
- தன்னிடம் வரும் குழந்தைகள் பாடசாலைக்கு விரும்பி வருவதற்கு ஏற்ற வகையில் குழந்தைகளைத் தயார்ப்படுத்தக் கூடியவராக இருத்தல்.
- பிள்ளைகள் கற்கின்றோம் என்றறியாது கற்கும் ஆற்றலை விருத்தி செய்யக்கூடியவராக இருத்தல்.

மேற்கூறப்பட்ட விடயங்கள் ஒரு முன்பள்ளி ஆசிரியருக்கு இருக்கின்ற பட்சத்தில் அப்பாடசாலையானது மிகவும் உன்னதமான வெளிப்பாடுகளை வெளிப்படுத்துவதாக அமையும்.

பெற்றோரும் ஏனையவர்களும் இத்தகு பாடசாலையினை மிகவும் விரும்பி தனது பிள்ளைகளை எவ்வளவு தூரமாயினும் கொண்டு வந்து விடுவதற்கு முற்படுவர். இவ்வாறு ஆசிரியர் இருக்கும் பட்சத்தில் மாணவர்களுக்கு "இது எங்கள் ஆசிரியர்" எனும் மனப்பாங்கு ஏற்படும்.

உதாரணமாக எமது பாடசாலையில் யுத்த சூழலில் அகப்பட்டு பல இன்னல்களை அனுபவித்து விட்டு முன்பள்ளிப் பருவத்தினை அனுபவிப்பதற்காக ஒரு மாணவர் எமது முன்பள்ளியில் சேர்க்கப்பட்டார். அக்குழந்தையானது சிறந்த செயற்றிறன் மிக்கவர். இவர் BI வகுப்பறையில் கற்க வேண்டியவர். ஆனால் AI வகுப்பினில் இவரது சகோதரி கற்றமையினால் அவருடன் சேர்ந்து இருப்பதற்கே மிக்வும் ஆசைப்படுவார்.

சில நாட்களில் நாம் இவரது பெற்றோரிடம் வினவி காரணங்களைக் கேட்டறிந்து அதற்கு மாற்றீடாக எமது வழிகாட்டலையும் பராமரிப்பினையும் வழங்கியபோது அவர் தனது வகுப்பறையினில் இருக்கப் பழகிவிட்டார். எனினும் ஆசிரியர் ஒருவர் அருகில் நிற்க வேண்டும். எங்குமே ஆசிரியர் செல்ல முடியாது. காலப்போக்கில் இப்பழக்கமும் மாறிவிட்டது. நிறைய மாற்றங்கள் அவரிடம் காணக்கூடியதாக இருந்தது. இவ்வாறிருக்கும் பட்சத்தில் இவர்கள் சொந்த இடத்திற்கு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டபோது இவரது கல்வியினை நினைத்து பெற்றோர் கவலை கொண்டனர்.

இவரை வேறு முன்பள்ளியில் கொண்டு சென்று விட்டபொழுது இவர் அங்குள்ள ஆசிரியர்களிடம் எங்கட ரீச்சர் என்னைத் தூக்குவா... நீங்களும் தூக்குவீங்களோ... என்று கேட்டு நீங்க தூக்காட்டி... நான் எங்கட ரீச்சரிட்டைதான் போவேன்... எனக் கூறியுள்ளார்.

இவ்வாறு ஒவ்வொரு குழந்தையினதும் தனியாள் வேறுபாடுகளை இனங்கண்டு செயற்படும் திறன் ஒவ்வொரு முன்பள்ளி ஆசிரியர்களுக்குரிய ஓர் உன்னத பண்பு ஆகும். தன்னை நம்பி வந்த இக்குழந்தைச் செல்வங்களுக்காகவே தன்னையே அர்ப்பணிக்கும் ஓர் உன்னத சேவையினைச் செய்வதில் ஒவ்வொரு முன்பள்ளி ஆசிரியர்களும் பெரிதும் போற்றப்பட வேண்டியவர்களே என்று சொன்னால் மிகையாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சந்தா விண்ணப்பப் படிவம்**

"அறிவுச் சமூகத்தின் வேட்கை
வினைத்திறன் மிக்க ஆசிரியர்"

# ஆசிரியம்

**"Aasiriyam"** 180/1/50 People's Park, Colombo -11,

Tel: 011-2331475 E-mail :aasiriyam@gmail.com

**முழுப் பெயர்** ........................................................................................

........................................................................................

**பாடசாலை முகவரி** ........................................................................................

........................................................................................

**அலுவலக முகவரி** ........................................................................................

........................................................................................

**தொலைபேசி/தொலைநகல் இல** ........................................................................................

**மின்அஞ்சல் முகவரி** ........................................................................................

**ஆசிரியம் அனுப்ப வேண்டிய முகவரி** ........................................................................................

........................................................................................

**இத்துடன் ரூபா..........................................................க்கான பணம்/ காசோலை**

*** காசோலை இலக்கம் ........................................... இணைத்துள்ளேன்.**

*Commercial Bank: A/C No : 1120017031 (Chemamadu B/C)*

**திகதி :**

**கையொப்பம்**

இப்படிவத்தை போட்டோ பிரதி செய்து உபயோகிக்கவும்.

## 'ஆசிரியம்'

| விளம்பரக் கட்டணம் | சந்தா விபரம் |
|---|---|
| பின் அட்டை - **10,000/-** | தனி இதழ் - **50/-** |
| உள்ளட்டை முன் - **8,000/-** | ஆண்டு சந்தா - **600/-** |
| உள்ளட்டை பின் - **5,000/-** | ஆண்டு சந்தா (தபால் செலவுடன்) - **1,000/-** |

**மேலதிக தொடர்புகளுக்கு :**

| | |
|---|---|
| தெ.மதுசூதனன்<br>077 1381747 / 011 2366309/ 021 2227147<br>மின்னஞ்சல்: *mathusoothanan22@gmail.com* | காசுபதி நடராஜா<br>0777 333890<br>மர்சூம் மௌலானா<br>077 4747235 |

"ஆசிரியம்" - படைப்புகள் அனுப்ப : *aasiriyam@gmail.com*
*mathusoothanan22@gmail.com*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வ/ஓமந்தை மத்திய கல்லூரி

# நூற்றாண்டு விழா மலர்

## 1911 - 2011



இந்நூற்றாண்டு விழா மலர் பல்துறை ஆக்கங்களுடன்
430 பக்கங்களில் வெளிவந்துள்ளது.

**தொடர்புக்கு : அதிபர் மூ.அரசரத்தினம் -077 4907855**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியம் தொடர்புகளுக்கு...

**வவுனியா**

| | |
|---|---|
| தா.அமிர்தலிங்கம் | .071-8457290 |
| ஆ.விஜேந்திரன் | .077-4412518 |
| சி.ரமேஸ் | .077-4744810 |
| சு.பரமானந்தம் | .071-8457260 |
| ந.பார்த்தீபன் | .077-6231859 |
| அறிவாலயம் புத்தகநிலையம் | .024-4920733 |

**மட்டக்களப்பு**

| | |
|---|---|
| கி.புண்ணியமூர்த்தி | .077- 7034528/065-2250114 |
| ச.ஜெயராசா | .065- 2225812/077-7249729 |
| ச.மணிசேகரன் | .065- 2248334/077-6635969 |
| டிகநாதன் | .077- 2482718 |

**யாழ்ப்பாணம்**

| | |
|---|---|
| புக்லாப் (ரவீந்திரன்) | .021- 2227290/077- 1285749 |
| ந.அனந்தராஜ் | .077- 8293366 |
| நெடுந்தீவு மகேஷ் | .077- 4687873 |

**கிளிநொச்சி**

| | |
|---|---|
| பெருமாள் கணேசன் | .077- 0789749 |

**ஹட்டன்**

| | |
|---|---|
| முரளி புத்தக நிலையம் | .051- 7911571/ 051-7911311 |

**கொழும்பு**

| | |
|---|---|
| பூபாலசிங்கம் புத்தகசாலை - வெள்ளவத்தை | .011- 2504266/ 011- 4515775 |

**அம்பாறை**

| | |
|---|---|
| அமீர் அலி | .077-2224025 |

**அனுராதபுரம்**

| | |
|---|---|
| அன்பு ஜவஹர்ஷா | .071-0881950 |

**திருகோணமலை**

| | |
|---|---|
| இ.புவனேந்திரன் | .026 -2222426 |
| ஆ.செல்வநாயகம் | .026-2224905/026-2222761 |
| ச.தேவசகாயம் | .026 -2227345 |
| சத்தியன் | .077 -7294287 |

**மூதூர்**

| | |
|---|---|
| க.கனகசிங்கம் | .077 -8730736 |

**மன்னார்**

| | |
|---|---|
| ஜோதி புத்தக நிலையம் | .023 -2222052 |
| டி.கிறிஷ்டிராஜ் | .071 -2261010 |

**நுவரெலியா**

| | |
|---|---|
| குமரன் புக் சென்டர் | .052-2223416/0777-6905096 |

**புஸ்ஸல்லாவை**

| | |
|---|---|
| ஜி.லோகேஸ்வரன | .077-9706564/081-5619629 |

**பண்டாரவளை**

| | |
|---|---|
| ஆர்.புண்ணியமூர்த்தி | .077-1155609 |

**மாவனெல்ல**

| | |
|---|---|
| எம்.ஏ.எம்.நிஸ்தார் | .071-8257562 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org